


சங்குகன்ன

# பாலசித்தர்

சமுதாயப் பணியே சமயப்பணி

வீரசைவ சமய - சமுதாய மேம்பாட்டு மாத இதழ்

திருவள்ளுவராண்டு 2057 ஏப்ரல் 2026 பராபவ - சித்திரை

மலர் : 10 இதழ் : 02


**புரவலர்**

மயிலம் - பொம்மபுர ஆதீனம் இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானம்

**சீர்வளர் சீர் சிவஞான பாலய சுவாமிகள்**


**ஆசிரியர்**

**நல்லாவூர்**

முனைவர் **ச. திருநாவுக்கரசு**

*9443906003*

**ஆலோசனைக் குழு**

முனைவர் **போ. சத்தியமூர்த்தி**

முனைவர் **இரா. பன்னிருகைவடிவேலன்**

**இதழ் அமைப்புக் குழு**

முனைவர் உ. சிவசுப்ரமணியன்

திரு. இரா. குமார்

முனைவர் நீ. காஞ்சனா

கண்ணியம் முனைவர் அ. சதீஷ்

முனைவர் இரா. வள்ளி

முனைவர் க. இலட்சுமிதேவி



வெளியீடு

மயிலம் பொம்மபுர ஆதீனம்

மயிலம் 604 304

**குருமரபு வாழ்த்து**

**பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்**
**வீரசைவ பரமே காட்டப்**
**பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த**
**சங்குகன்னப் பால சித்தர்**
**வரமயிலார் முருகனுப தேசமுடன்**
**வந்துகுரு வாகி யாண்ட**
**திரமிகுபேர் சிவஞான பாலயநற்**
**குருமரபு சிறந்து வாழி!**

*இவ்விதழ் பராபவ ஆண்டு சித்திரைத் திங்கள் 07ஆம் நாள் (19.04.2026) ஞாயிற்றுக் கிழமை கிருத்திகைத் திருநாளன்று* ***மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தில் நடைபெற்ற பாலசித்தர் தொடர் விரிவுரை வகுப்பு - சொற்பொழிவில் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் திருக்கரங்களால்*** *வெளியிடப்பெற்றது.*

**அறிவிப்பு**

★ *சங்குகன்னப் பாலசித்தர் - சமுதாயப் பணியே சமயப் பணி, வீரசைவ சமய - சமுதாய மேம்பாட்டு மாத இதழுக்குக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.*

★ *படைப்புகளை ஒவ்வொரு மாதமும் கிருத்திகை நட்சத்திரத் திருநாளிலிருந்து பத்து நாள்களுக்குள்ளாகப் பாமினி அல்லது யுனிக்கோடு எழுத்துருவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல்* balasiddhar@gmail.com *என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கட்டுரையாளர்கள் தங்கள் தொடர்பு முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றைக் கட்டுரையுடன் இணைத்து அனுப்பவும்.*

★ *தொடர்பு எண்கள் :*

*முனைவர் ச. திருநாவுக்கரசு - 9443906003*
*முனைவர் அ. சதீஷ் - 9094248864*

# உள்ளடக்கம்


20ஆம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அருளிய ஆசியுரை 04

20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் பங்கேற்றுச் சிறப்பித்த நிகழ்வுகள் 07

நன்னூல்: ஆசிரியர் ஆகாதவர் இயல்பு
- நல்லாவூர் முனைவர் ச. திருநாவுக்கரசு 08

நிரஞ்சனமாலை உணர்த்தும் வீரசைவ மெய்ம்மைகள்
- முனைவர் மு.இளையஞானி 13

மயிலம் திருத்தலப் பாடல் 15

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ்
- கலைமாமணி சீனு. வேணுகோபால் 16

பள்ளி எழுந்தருளே.. - புலவர் சி. சுவாமிநாதன் 19

நல்லாற்றூர் சிவப்பிரகாசர் ஓர் இலக்கணக் களஞ்சியம் - 11
- தமிழாகரர் தெ. முருகசாமி 20

நால்வர் நான்மணிமாலையில் பக்தியும் முக்தியும் - 4
- முனைவர் இராச. திருமாவளவன் 25

வீரசைவ ஐம்பேராசான் வழிபாடு (வீரசைவ சமயத்தின்
ஐந்தாசிரியர் வழிபாடு - முனைவர் அ. சிவபெருமான் 32

வீரசைவமும் வைணவமும் - புலவர் வி.ச. சந்தானம் 36

சிவஞான பாலய தேசிகர் திருவெழுகூற்றிருக்கை
- புலவர் ஆ. சிவலிங்கனார் 40

உயிர்க்குத் தாய்ப் பால் உணர்வுக்குத் தாய்மொழி
- புலவர் அருணா பொன்னுசாமி 42

மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம் - முருகன் சந்நிதி தேரோட்டம்
- புலவர் தா.வேளூர் கோ. சீதாராமன் 45

முத்தமிழ் முருகா உமை மறவேனோ
- கலைமாமணி, பாவலர் கோ. கலியபெருமாள் 46

குமரா நின் புகழ் தினம் போற்றி... - திரு. செ. கமலநாதன் 47

சேரமான் கேள்வியும் கபிலரின் பதிலும்
- புலவர் பால. பழநி 48

விநாயகர் மாண்பு - சித்தாந்த ரத்தினம், புலவர் சு. சிவகுமார் 52

நல்லாற்றூர் சிவப்பிரகாசரின் இலக்கண வளம்
- புலவர் சு. சொக்கலிங்கம் 57

இலங்கையின் இயற்கை வளம் - செல்வி வி. இளையபாரதி 61



உ
சிவா முருகா
சிவமயம்
ஸ்ரீபாலசித்த குருவே நம:

**திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்**
**ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்**
**20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள்**
**23.03.2026 அன்று பாலசித்தர் தொடர் விரிவுரை வகுப்பில்**
**அருளிய ஆசியுரை**

*நாதம் உறுபொருளாய் நாதாந்த நாடகனாய்*
*வேத முடிமணியாம் வித்தகனைச் – சாத*
*மருள்நா சகனை மயிலைமலைத் தேனைக்*
*கருணை ஆலயனை எதிர்கண்டார் (ஸ்ரீ சிவ.பா.தே.நெஞ். தூது)*

*தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு (திருக்குறள்.396)*

பாலசித்தருக்குக் காட்சிகொடுத்து அருள்பாலித்துவரும் மயிலம் வள்ளி தெய்வானை உடனுறை முருகப்பெருமான் வீற்றிருக்கும் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தில் பத்து ஆண்டுகளாக வெளிவருகின்ற சங்குகன்ன பாலசித்தர் மாத இதழ் மனநிறைவை அளிக்கும் வகையில் ஆய்வுக் கருத்துகளையும் ஆன்மீகச் செய்திகளையுத் தாங்கி வருகிறது. பங்குனித் திங்கள் கிருத்திகைத் திருநாள் பாலசித்தர் தொடர் விரிவுரை வகுப்பில் மதிப்பிற்குரிய முனைவர் இளையஞானி அய்யா அவர்கள் நிரஞ்சன மாலையில் வீரசைவக் கருத்துகள் என்னும் பொருண்மையிலும், புலவர் சீனு. வேணுகோபால் அய்யா அவர்கள் பண்ருட்டி மணி அப்பாவு அய்யர் எழுதிய நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ் என்னும் பொருண்மையிலும் சிறப்பாக உரையாற்றினார்கள். விழுப்புரத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய சஞ்சீவிராயன் அய்யா அவர்கள் உள்ளிட்ட சான்றோர் பெருமக்கள் பலர் பங்கேற்ற இந்நிகழ்வில் தமிழ்க் கல்லூரி மாணவர்கள் மூவர் இதழ் குறித்த மதிப்புரையை வழங்கினார்கள்.

இலக்கிய வட்டத்திலும், சமுதாயத்திலும் இராமாயண, மகாபாரதக் காவியங்களைப் பலர் ஏற்றுக்கொண்டாலும், ஒருசிலர் அவற்றைக் கதைகள் என்று கூறுவதும் உண்டு.

***எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு*** ***(திருக்குறள்.423)***

என்று திருவள்ளுவர் கூறியதுபோல் நடைமுறையில் யார் சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் எப்பொழுது சொன்னாலும் அதில் உள்ள வாழ்க்கைப் பாடங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். பீஷ்மர், துரோணாச்சாரியார் பற்றி சிறப்புரையாற்றிய தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர் ச.திருநாவுக்கரசு அய்யா அவர்கள் எடுத்துரைத்தார்கள். மகாபாரதத்தில் தந்தையின் ஆசைக்காக அரசுரிமையை மறுத்த பீஷ்மர், தானத்திற்குப் பெயர்பெற்ற கர்ணன், ஆயுதம் செய்ய தன் உடலைத் தியாகம் செய்த ததீசி முனிவர், குருவுக்காகத் தனது கட்டை விரலை வெட்டித்தந்த ஏகலைவன், தந்தை தசரதன் ஒரு வார்த்தை சொல்லிவிட்டார் என்பதற்காகத் தன்னுடைய பட்டாபிடேக வாழ்க்கையையே தியாகம் செய்துவிட்டுக் காட்டிற்குப் புறப்பட்ட இராமன், இராமனில்லாத அரண்மனை வாழ்க்கை தனக்கு வேண்டாம் என்று துறந்த சீதை, தன் கணவன் காணாத புற உலகத்தைத் தானும் பார்க்க மாட்டேன் என்று கண்களைக் கட்டிக்கொண்ட காந்தாரி என இப்படி தியாக கதைமாந்தர்கள் பலர் இடம்பெற்று இருக்கிறார்கள். இந்தக் கதைமாந்தர்களின் வாயிலாக நாம் வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்திற்கு வரும் அன்பர்களிடத்தில் அவ்வப்போது அவர்களது குடும்பநலம் பற்றி விசாரித்து அறிந்துகொள்வோம். பலர் மிக எளிய வாழ்க்கைப் பின்னணியை உடையவர்களாக இருப்பர். தினசரி வேலைக்குச் சென்று அதனால் வரும் நாள்கூலிதான் அவர்களது வாழ்வாதார மாகவே இருந்துள்ளது. இருப்பினும் அந்த வருமானத்திலும் பெரும் பகுதியைத் தமது பிள்ளைகளின் கல்விக்காகப் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

***கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு***
***மாடல்ல மற்றை யவை*** ***(திருக்குறள்.400)***

என்ற திருக்குறள்வழி பெரும்பாலானோர்களின் பிள்ளைகள் இன்று ஆசிரியர்களாக, கல்லூரி உதவிப் பேராசிரியர்களாக, மருத்துவர்களாக, அரசு அலுவலர்களாக விஞ்ஞானிகளாக, பணியாற்றுகிறார்கள் என்று கூறும்பொழுது மகிழ்ச்சியடைவோம். சமுதாயத்தில் பணம் யார் வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். ஆனால் அறிவை வளர்த்துக்கொள்வதற்கும், அறிவைப் பெறுவதற்கும் அவர்களாகவே முயலவேண்டும்; படித்துத்தான் ஆக வேண்டும்.

தென்காசி, பாபநாசம், தவத்திரு குன்றக்குடி அடிகளாருடைய கல்லூரியில் தமிழக அரசின் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின்கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் பெறும் மாணவர் யு.பி.எஸ்.சி. தேர்வில் முதல் முயற்சியிலேயே வெற்றிபெற்றுள்ளார். அம்மாணவரின் பெற்றோர் மிகவும் குறைவான குடும்ப வருமானம் உடையவர்கள் என்றாலும், தனது மகன்பெறும் ஆயிரம் ரூபாயை அவரது படிப்பிற்காகவே வைத்துக்கொள் என்று கூறி படிப்பிற்கு முதன்மை

தந்துள்ளனர். அடிகளார் அவர்கள் அந்த மாணவரை அழைத்துப் பெருமைப் படுத்தியுள்ளார்கள்.

உலகளவில் நாளுக்குநாள், மாதத்திற்கு மாதம் இந்திய நாட்டின் பெருமை கூடிக்கொண்டே வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் போர் நடைபெறுகின்ற சூழலில் உலகத் தலைவர்கள் பலர் பாரதப் பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களின் ஆலோசனையைக் கேட்டு வருகிறார்கள். வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு ஜெய்சங்கர் அவர்கள் தொலைபேசியில் அமைதியாக இருங்கள் என்று கூறிவருகிறார்கள். ஏனென்றால் எரிபொருள் என்பது அடிப்படையான தேவை. இதை உணர்ந்து பொறுமையாக இருப்பது அவசியம். மனித வாழ்வியலைச் சித்தரிக்கும் வள்ளுவர்,

***காலம் கருதி இருப்பர் கலங்காது***
***ஞாலம் கருது பவர்*** *(திருக்குறள்.485)*

என்று கூறியிருப்பது சிந்தித்தற்குரியது. இஸ்ரேலில் யூதர்களின் மக்கள் தொகை மிகக்குறைவு. ஆனால் அவர்கள் தங்களது காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். இன்றைய சூழலில் மாணவர்கள் எதைக் கற்கிறார்களோ அதை ஈடுபாட்டுடன் கற்க வேண்டும். யாம் ஐந்தாம் வகுப்புவரை கிராமத்தில் படித்து நகர்ப்புறத்தில் கற்கச் செல்லும்போது சக மாணவர்களின் ஏளனத்திற்கு உள்ளானோம். ஏனென்றால் ஆங்கில மொழி எமக்குச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாது. அப்பொழுது என்.எஸ். ராஜகோபால் ஆசிரியர் எம்மை நெறிபடுத்தி நம்பிக்கையைக் கொடுத்துத் தொடர்ந்து படிக்க வைத்தார். ஆங்கில நாளிதழ்களையும், புத்தகங்களையும் திரும்பத்திரும்ப வாசிக்கச் சொன்னார்கள். அவரது வழிகாட்டலே விதையாகவும், உந்து சக்தியாகவும் அமைந்தது; ஆங்கிலமொழிப் புலமைக்கு வழிவகுத்தது. எனவே மாணவர்கள் தமது நோக்கத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

பாரதப் பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்கள் தமது உரையில் இந்தியப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகப்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே பணப்பயிரான பருப்பு, கனி வகைகளை மிகுதியாக விவசாயம் செய்ய வேண்டும். இளைஞர்கள் வேளாண்மைக்குச் சிறப்பிடம் தர வேண்டும்.

மாணவர்களது படைப்புகள் சங்குகண்ண இதழில் வெளிவந்துள்ளன. எத்தகைய பொருண்மையிலும் ஆய்வுச் சிந்தனையோடு சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் எழுதலாம்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியை மக்களின் நல்வாழ்க்கைக்குப் பயன்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் உலகளவில் இந்தியர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு இருக்கிறது. சிறந்த உயர்கல்வியானது நம் நாட்டிலேயே வழங்கப்படும். வெளிநாட்டு மாணவர்கள் மிகுதியான அளவில் நம் நாட்டில் வந்து கல்வி பயிலும் காலம் விரைவில் வரும். நம் மாணவர்களும் அவர்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் பங்கேற்றுச் சிறப்பித்த நிகழ்வுகள்

| | |
|---|---|
| *06.03.2026* | விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மயிலம் பாளையம் வீதி உடையார் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பூவிழி முத்துமாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு எழுந்தருளி குடமுழுக்கு செய்துவித்து ஆசியுரை வழங்கினார்கள். |
| *23.03.2026* | மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தில் எழுந்தருளியுள்ள வள்ளிதெய்வானை உடனுறை முருகப்பெருமான் பங்குனி உத்திரப் பெருவிழாவைக் கொடியேற்றித் தொடங்கி வைத்தார்கள். |
| *25.03.2026* | ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரி மூன்றாமியாண்டு மாணவர்களுக்கு மயிலம் திருமடத்தில் அருளாசி வழங்கினார்கள். |
| *27.03.2026* | சென்னை இந்து சமய அறநிலையத்துறையில் நடைபெற்ற ஆகம குழுக் கூட்டத்தில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். |
| *31.03.2026* | மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தில் எழுந்தருளியுள்ள வள்ளிதெய்வானை உடனுறை முருகப்பெருமான் திருத்தேரை வடம்பிடித்துத் தொடங்கி வைத்தார்கள். |
| *03.04.2026* & *04.04.2026* | கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் நடைபெற்ற இந்து ஆச்சாரிய குழுக் கூட்டத்தில் இந்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு அமித்ஷா மற்றும் இந்தியாவிலிருந்து வந்திருந்த பல்வேறு ஆதீனங்களுடன் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். |
| *05.04.2026* | கடலூர் மாவட்டம், நல்லாற்றூர், ஏரிக்கரையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பூரணி பொற்கலை உடனுறை ஸ்ரீ ஐயனாரப்பன் திருக்கோயில் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா யாகசாலை பூசையில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். |
| *11.04.2026* | ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற 88ஆவது ஆண்டு விழா, விளையாட்டு விழாவிற்கு எழுந்தருளி தலைமைவகித்து ஆண்டுமலரை வெளியிட்டு அருளாசி வழங்கினார்கள். |
| *12.04.2026* | ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற 84ஆவது பட்டமளிப்பு விழாவிற்கு எழுந்தருளி அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் இரா. சிங்காரவேல், விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா. சிவக்குமார் ஆகியோருடன் இணைந்து மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தார்கள். |



# நன்னூல் - ஆசிரியராகாதவர் இயல்பு


**நல்லாவூர் முனைவர் ச. திருநாவுக்கரசு**

முதல்வர்

ஸ்ரீமத் சி.பா.சு.த.க.அ. கல்லூரி, மயிலம்


**ஆசிரியராகாதவர் இயல்பு**

*மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்*
*அழுக்காறு அவாவஞ்சம் அச்சம் ஆடலும்*
*கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை*
*முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்*
*உடையோர் இலர்ஆ சிரியர் ஆகுதலே.* *(நன்.நூ.31)*

**பதவுரை**

மொழி குணம் இன்மையும் - மாணாக்கருக்குப் பாடம் சொல்லும் குணம் இல்லாமையும், இழிகுண இயல்பும் - இழிந்த குணங்களையுடையராம் தன்மையும், அழுக்காறு - பொறாமை, அவா - பொருள் மேல் ஆசை, வஞ்சம் - வஞ்சனை, அச்சம் ஆடலும் - கேட்போருக்கு அச்சம் உண்டாகப் பேசுதல் முதலிய இயல்புடைமையும், கழல்குடம் - கழற்சிக்காய் இட்ட குடம் பேசுதல் முதலிய, மடற்பனை - கருக்குடன் கூடிய மடல்களையுடைய பனைமரம், பருத்திக் குண்டிகை - பருத்தியடைக்கப்பட்ட குண்டிகை, முடத்தெங்கு - வளைந்த தென்னைமரம், ஒப்பு என - ஆகிய இவையே ஒப்பாகக் கூறத்தக்க, முரண் கொள் சிந்தையும் - மாறுபாடு கொண்ட கருத்தும், உடையோர் - உடையவராயிருப்போர், ஆசிரியர் ஆகுதல் இலர் - ஆசிரியராதற்கு உரியவர் இலர்.

**விளக்கவுரை**

1. மொழி அறிவு இல்லாமை 2. இயல்பாகவே இழிந்த குணங்களைப் பெற்றிருத்தல் 3. பிறர் கல்வி கண்டு பொறாமைப்படுதல் 4. பணத்தின் மீது மிகுந்த ஆசை கொள்ளுதல் 5. உண்மைக் கருத்தை மறைத்துப் பொய்கருத்தை சொல்லிக் கொடுத்தல் 6. சபையில் பேச அஞ்சுதல் 7. கழற் குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு ஆகியவற்றுக்கு ஒப்பான முரண்பட்ட சிந்தனை பெற்றிருத்தல். இத்தகைய குணம் இல்லாதவரே ஆசிரியர் ஆக வேண்டும்.

*கழற்பெய் குடத்தின் இயல்பு*

*பெய்தமுறை யன்றிப் பிறழ உடன்தரும்*
*செய்தி கழல்பெய் குடத்தின் சீரே.* (நன்.நூ.32)

**பதவுரை**

பெய்த முறை அன்றி - தன்னுள் இடப்பட்ட முறைப்படி அல்லாமல், பிறழ - மாறிப்போம்படி, உடன்தரும் - விரைவிலே தன்னுள்ளே கொண்ட கழற்சிக்காய்களைக் கொடுக்கும், செய்தி - செய்கையானது, கழல்பெய் குடத்தின் - கழற்சிக் காய்களை இட்ட குடத்தின், சீரே -இயல்பாகும்.

**விளக்க உரை**

பெய்த முறை அன்றிப் பிறழ்தல், மொத்தமாக வெளியேற்றம் ஆகிய இரண்டும் கழல் பெய் குடத்தின் (31) இயல்பு ஆகும். ஆசிரியன் அவ்வாறு இருத்தல் கூடாது என்பது கருத்து.

| | கழல் பெய் குடம் | ஆசிரியர் ஆகாதார் |
|---|---|---|
| 1. பெய்த முறை அன்றிப் பிறழ்தல் | தன்னுள் போடப் பட்ட காய்களைப், போட்ட முறையில் வைத்துக் கொள்ளாமல் முன் பின்னாக மாற்றி விடும். | கருத்துகளை முன்பின்பாகக் கற்பித்தல். |
| 2. உடன் தரும் செய்தி | கொட்டும்போது காய்களை மொத்தமாக வெளியேற்றும். | தான் கற்றதை எல்லாம் மாணவனுக்குப் புரிகிறதா இல்லையா என்று கவனிக் காமல் வேகமாகக் கூறுதல். |

**மடற்பனையின் இயல்பு**

*தானே தரக்கொளின் அன்றித் தன்பால்*
*மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை* (நன்.நூ.33)

**பதவுரை**

மடல்பனை - கூரிய கருக்கு மடல்களையுடைய பனைமரமானது, தானே தர - தானே தன்னிடத்துள்ள காய்களையும் பழங்களையும் தர, கொளின் அன்றி - கொண்டால் கொள்ளலாமே அல்லாமல், தன் பால் மேவி - தன்னிடம் நெருங்கி, கொள - பறித்துக்கொள்ளுமாறு, கொடா இடத்தது - இடம் கொடாதது.

**விளக்க உரை**

மேலே (31) சொன்ன மடல்பனையானது தன்னிடத்து உள்ள பழங்களைத் தானே தந்தால்தான் அதனைப் பிறர் கொள்வார்கள். அப்படி இல்லாமல்,

*ஒருவன் அப்பனை மரத்தில் ஏறிப் பழங்களைக் கொள்ளக் கருதினால் அதற்கு அது இடம் கொடுக்காது.*

***பருத்திக் குண்டிகையின் இயல்பு***
***அரிதில் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு***
***எளிது ஈவில்லது பருத்திக் குண்டிகை.*** *(நன்.நூ.34)*

**பதவுரை**

*பருத்திக் குண்டிகை - பஞ்சு அடைக்கப்பட்ட குடுக்கையானது, அரிதில் பெய - பஞ்சை அடைக்கும்போது வருத்தத்தோடு முயன்று சிறிது சிறிதாக அடைக்க, கொண்டு - தன்னுள் கொண்டு, அப் பொருள் - அப்பஞ்சை, தான் பிறர்க்கு - தான் பிறர்க்குத் தரும் போது, எளிது ஈவில்லது - எளிதில் கொடாத குற்றம் உடையது.*

**விளக்கவுரை**

*மேலே (31) சொன்ன பருத்திக் குண்டிகையானது தன் உள்ளே சிறிது சிறிதாகப் பஞ்சை கடினப்பட்டு அடைத்தால் அதனை ஏற்றுக் கொள்ளும். பின் ஏற்றுக் கொண்ட அப் பஞ்சை அது பிறர்க்கு எளிதில் கொடுக்காது.*

**முடத்தெங்கின் இயல்பு**

***பல்வகை உதவி வழிபடு பண்பின்***
***அல்லோர்க்கு அளிக்கு மதுமுடத் தெங்கே.*** *(நன்.நூ.35)*

**பதவுரை**

*முடத்தெங்கு - வளைந்த தென்னை மரமானது, பல்வகை உதவி - நீர் விடுதல் முதலிய பல்வகையாலும் உதவி புரிந்து, வழிபடும் - வழிபாடு செய்யும், பண்பின் அலார்க்கு - குணம் உடையவர் அல்லாதவர்க்கு, அளிக்குமது - தன் பயனாகிய காய் முதலியவற்றைத் தரும் இயல்புடையதாகும்.*

**விளக்கவுரை**

*மேலே (31) சொன்ன முடத்தெங்கானது நீர் ஊற்றுதல், உரம் இடுதல் போன்ற பல்வேறு உதவிகளைச் செய்தும், தன்னை வழிபடும் பண்பினையும் உடையவர்க்கு அளிக்காமல் அவற்றை எல்லாம் செய்யாத மற்றவர்களுக்குத் தன்னிடத்தில் உள்ள காய்களைத் தரும்.*

**பாடம் நடத்தும் முறை**

***ஈதல் இயல்பே இயம்பும் காலைக்***
***காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்,***
***சிறந்துழி இருந்து, தன்தெய்வம் வாழ்த்தி,***
***உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து,***

*விரையான், வெகுளான் விரும்பி முகமலர்ந்து,*
*கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளம்கொளக்*
*கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப.* *(நன்.நூ.36)*

**பதவுரை**

ஈதல் இயல்பே - பாடம் சொல்லுதலின் இயல்பை, இயம்புங் காலை - எடுத்துக் கூறும்போது, காலமும் இடனும் -பாடம் சொல்வதற்கு வாய்ப்பான நேரத்தையும் ஏற்ற இடத்தையும், வாலிதின் நோக்கி - செவ்வையாக ஆராய்ந்து, சிறந்துழி இருந்து - சிறந்த இடத்தில் அமர்ந்து, தன் தெய்வம் வாழ்த்தி - தன் வழிபடு கடவுளைப் போற்றி வணங்கி, உரைக்கப்படும் பொருள் - மாணாக்கனுக்குக் கூறுதற்குரிய பொருளை, உள்ளத்து அமைத்து - மனத்தில் ஒழுங்குபெற அமைத்துக்கொண்டு, விரையான் - விரையாமலும், வெகுளான் - சினவாமலும், விரும்பி - விருப்பத்தோடு, முகம் மலர்ந்து - முக மலர்ச்சி கொண்டு, கொள்வோன் - தான் கூறும் பொருளைக் கொள்ளும் மாணாக்கன், கொள்வகை அறிந்து - கொள்ளும் அறிவுத்திறனை நன்கு தெரிந்து, அவன் உளம் கொள - அவனுடைய மனம் ஏற்கக்கூடிய வகையில், கோட்டம் இல் - மாறுபாடு இல்லாத, மனத்தின் - மனத்தோடு, நூல் கொடுத்தல் - நூலைக் கற்பித்தல், என்ப - என்று கூறுவர்.

**விளக்கவுரை**

பாடம் நடத்தும் முறையைச் சொல்லும் போது

*1.* பாடம் நடத்துவதற்கு உரிய காலத்தையும் இடத்தையும் மிக நன்றாகப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும் *2.* உயர்ந்த மேடையில் அமர வேண்டும் *3.* மனத்தில் தான் வழிபடும் கடவுளை வணங்க வேண்டும் *4.* இன்று நடத்தப்போகும் பாடத்தை உள்ளத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் *5.*விரைந்து பாடம் நடத்தக் கூடாது *6.* மாணவர்களிடம் மிகுந்த கோபம் கொள்ளக் கூடாது *7.* விருப்பத்துடன் நடத்த வேண்டும் *8.* பாடம் நடத்தும்போது முகமலர்ச்சியுடன் இருக்க வேண்டும் *9.* கற்கும் மாணவனின் புரிந்து கொள்ளும் திறனை அறிந்து அவன் மனம் ஏற்றுக்கொள்ளும்படி,

ஆசிரியன் தன் குற்றம் அற்ற மனத்துடன் நூலின் கருத்தைக் கொடுத்தல் ஆகும் என்று சான்றோர் கூறுவார்கள்.

# நிரஞ்சன மாலை உணர்த்தும் வீரசைவ மெய்மைகள்

முனைவர் மு. இளையஞானி
வீரசைவச் சான்றோர், நெய்வேலி - சென்னை
தொடர்பு எண்: 9443286180

*விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் அறிவின் அளவில் வேறுபட்டவைகள் ஆகும். விஞ்ஞானத்திற்கு ஓர் எல்லை உண்டு. அளவு உண்டு. ஆன்ம அறிவுக்கு எட்டிய அளவிலேயே அது அமையும். அவ்வப்போது மாறுபடும். மெய்ஞ்ஞானத்திற்கு அளவு இல்லை. ஆன்மா தமது மெய்யறிவினால் யாரும் உணராத தன்மைகளை உணர்ந்து வெளிப்படுத்தும். இது மாறுபடாதது. மணிவாசகர் 12 சூரியக் குடும்பங்கள் உள்ளன என்கிறார். இதன் அடிப்படையில் தான் 12 மணிநேரம், 12 மாதங்கள், 12 ஜாதகர் கட்டங்கள் எல்லாம் அமைக்கப்பட்டன. இந்நாள்வரை இது மாறவில்லை. சிவஞானி தனது மெய்யுணர்வினால் எல்லாவற்றிக்கும் அப்பாற்பட்டதை உய்த்துணர்ந்து அறிவிப்பார்கள் இதுதான் மெய்ஞ்ஞானம்.*

*இத்தன்மையைப் பெற்றவரில் சிறப்பானவர் நல்லாற்றூர் சிவப்பிரகாசர். நிரஞ்சன மாலையில் நித்த அநாதியாகிய இறைவன் ஆறுவகை இலிங்கமாக ஆறுவகை அங்கத்தில் ஆறுவிதமான அனுபவத்தைத் தருகிறார் என அருள்கிறார். அண்டத்தை அளப்பது ஒருவகை மெய்ஞ்ஞானம் என்றால், அரிதிலும் அறிதாகிய பிண்டத்தை அளப்பதும் ஒருவகை மெய்ஞ்ஞானமே என்க.*

**மெய்ம்மையை உணர்த்தும் பாடல்**

***சித்து நிரஞ்சனத்துச் சூனியத்துச் செயல் உரைத்தீர்
நித்த அநாதி சரணம் சரணம் அந் நிட்கலித்தே
அத்தனி மகாலிங்கம் ஆதியினான் ஐக்காரிகளாய்
மெய்த்த உனை என்று நீங்கேன் என் அங்கை விடாதவனே (பா. எ. 6)***

*மேற்காணும் பாடலில் வீரசைவத்தின் மெய்ம்மைகளைக் காணலாம்.*

**நித்த அனாதி சரணன்**

*இட்டலிங்கப் பெருமான் அநாதி முக்த சித்துரு ஆன்ம அனாதி பெத்த சித்துரு ஆகும்.*

*அனாதி முக்த சித்துரு - என்றும் நிலையான பேரின்ப அறிவுடைய பொருள்.*

*அனாதி பெத்த சித்துரு - காலம் சுட்டிக் கூறமுடியாத காலத்தே மலக்கட்டுடைய சிற்றறிவுப் பொருள்.*

இட்டலிங்கப் பெருமான் மலக்கட்டுடைய ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு அண்டத்தையும் அதிலிருந்து பிண்டத்தையும் வழங்கி, பின் பிண்டத்தில் ஆறு இலிங்கமாகி அமைந்து மலக்கட்டுகளை அவிழ்த்து சுத்த சித்துருவாக ஆக்குகிறான் என்பதே சிவப்பிரகாசரின் உட்கிடை.

தோற்றமும் அழிவும் இல்லாத பேரின்ப முற்றறிவுப் பொருளான பெருமான். பெத்த நிலையில் உள்ள ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு இலிங்கமாகி அமைந்து அருளுகிறான் என்க.

**புருடனும் ஆன்மாவும்**

புருடன், உயிர், சீவன், ஆன்மா எல்லாம் ஒன்றையே குறிப்பதாயினும் சிறிது வேறுபாடுகள் உள்ளன.

புருடன் - தத்துவக் கூட்டினைப் பெற்றவன்.

உயிர் - தத்துவக் கூடான உடம்பைப் பெற்றவுடன் உயிர்க்கும் (முயற்சிக்கும்) தன்மையைப் பெற்றவன்.

சீவன் - மலக்கட்டுகளை உடையவன்.

ஆன்மா - தன்னையும், தலைவனான பெருமானையும் உணர்ந்து மலக்கட்டுகளை நீக்கி நிற்பவன்.

உடலைப் பெற்ற உயிர் அதைக்கொண்டு தன்னையும் கட்டை அவிழ்க்கும் தலைவனையும் அறிந்து உணர்ந்து கட்டை நீக்கி இறைத்தன்மையைப் பெற்று சுத்த சித்துருவாக வேண்டும் என்பதே பிறப்பின் ரகசியம்.

**அயிக்காதிகள்**

பாடலில் 'அத்தனி மாலிங்கம் ஆதியினான் அயிக்காதிகளாய்' என்னும் மெய்ம்மை வீரசைவத்தின் தனிச்சிறப்பாகும்.

> அங்கத்தில் இலிங்கத்தை அணிந்தால் அந்த இலிங்கமே உடலாக மாறும். அந்நிலையில் இறை அனுபவத்தைப் படிப்படியாக உயிர் அடைந்து, பேரின்ப வடிவையும் முற்றறிவையும் பெறும்.

என்பது வீரசைவத்தின் தனிக்கோட்பாடு ஆகும்.

**1.அங்கலிங்க ஐக்கியம்**

வீரசைவர்கள் தன் உடலில் அங்கத்தில் இலிங்கத்தை அணிந்து உடலோடு ஐக்கியப்படுத்த வேண்டும்.

**2.இலிங்க அங்க ஐக்கியம்**

இலிங்கமே உடலாக மாறும். ஆறு விதமான அங்க நிலைகளில் ஆறு விதமான இலிங்கம் தானே ஐக்கியமாகி முக்தி நிலையை அருளும்.

PRGI No.TNTAM/25/A4155

உடம்பே இலிங்கம் என்பதை உணர்தல் வேண்டும் என்பார் திருமூலர்.

***மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்***
***மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்***
***மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்***
***மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே***

என்ற பாடல் உடம்பே சிவலிங்க வடிவம் என்கிறது.

ஒருவர் சுகாசனம் போட்டு அமர்ந்தால் தலைமுதல் கீழ்வரை பாணம் மார்பில் இட்டலிங்கத்தைத் தன் கரங்களால் தாங்கி நிற்கும்போது அது ஆவுடையார் .தரையில் அமர்ந்திருக்கும் பகுதி பீடம் ஆகும்.

**லிங்கம் அங்க ஐக்கியம்**

உடலோடு கூடிய உயிர் ஐவகை நிலையை உடையது ஆகும்.அவ்ஐவகை நிலையில் லிங்கம் ஐவகையாக மாறி ஐவகை இறை அனுபவத்தைத் தரும் என்பதே வீரசைவத்தின் உயரிய மெய்ம்மையாகும்.

| வ.எண் | லிங்கம் | அங்கம் | அனுபவம் |
|---|---|---|---|
| 1 | ஆசாரலிங்கம் | பக்தன் | அதனை அனுபவித்தல் |
| 2 | குருலிங்கம் | மயேசுரன் | இது என்றறிதல் |
| 3 | சிவலிங்கம் | பிரசாதி | ஐயமற நிச்சயிக்கும் |
| 4 | சங்கமலிங்கம் | பிராணலிங்கி | ஒருபுலனில் ஒன்றைப் பற்றுதல் |
| 5 | பிரசாத லிங்கம் | சரணன் | மகிழ்ந்து இருத்தல் |
| 6 | மகாலிங்கம் | ஐக்கியன் | பெற்ற இன்பத்தில் திருப்தியடைந்து நிற்றல் |

என வகைப்படுத்துகிறார் சு. மதியழகன் (வீரசைவ நெறி பக்.24.).

வீரசைவர் அணியும் இட்டலிங்கமே இலிங்க அங்கமாகி அனைத்து அனுபவத்தையும் தரும் என்க. இதனை உணர்த்தவே சிவப்பிரகாசர் "அயிக்காதிகளாய்" எனக் குறிப்பிடுகிறார் என்க.

மேலும் தொடர்ந்து சிந்திப்போம்.

**ஐயம் தெளிதல்**

**வினா: ஒன்றாய் உடனாய் வேறாய் என்னும் சித்தாந்தத் தத்துவம் வீரசைவருக்கு உடன்பாடா? ச. அகிலன், சென்னை**

உடன்பாடுதான். ஆனால் வரிசை முறையில் மாறுபாடு உண்டு. வீரசைவம் நிஜ சம்பந்தத்தை அருளுகிறது. இறைவனும் ஆன்மாவும் உள்ள சம்பந்தம்

*ஒன்றாயும், உடனாயும், வேறாயும் உள்ளது என்பது சைவம். ஆனால் வீரசைவம் முதலில் அச்சம்பந்தம் வேறாய் பின்பு உடனாய் அதன்பின் ஒன்றாய் என்கிறது.*

**ரமணர் ஓர் உவமை கூறுகிறார்.**

1. *மாம்பழத் துண்டுகள் ஒரு தட்டில் வைக்கப்பட்டு இருத்தல் உண்பவனும் பொருளும் வேறாய் உள்ளன.*
2. *அத்துண்டுகளை நம் வாயிலிட்டுச் சுவைக்கின்றோம் இது உடனாய் ஆகும். உண்பவனும் அப்பொருளும் உடன் சேர்ந்து விட்டன.*
3. *மாம்பழத் துண்டுகள் உண்பவனிடம் செரிக்கப்பெற்று அவனோடு பிரிப்பின்றி ஒன்றி விடுகிறது. இது ஒன்றாய் ஆகும்.*

*வேறாய் நின்ற பரம்பொருள் இட்டலிங்கமாக உடனாய் ஆகி பின்பு இட்டலிங்கம் அணிந்தவனின் உயிரில் ஒன்றாய் ஆகிவிடுகிறது என்பதே வீரசைவ மெய்ம்மையாகும்.*

*வேறாய், உடனாய் ஒன்றாய் என்பதுதான் வீரசைவ நெறியாகும் என உணர்க.*

## மயிலம் திருத்தலப் பாடல்

**திருமயிலை சந்நிதி முறை பஞ்சாங்கப் பாமாலை**
**சித்திரை**

***புத்தரை வாதினில் வென்றோன் அருட்சுதப் புண்ணியனே***
***இத்தரை மீது நற் பத்தரை ரெட்சித்து இடர் விலகச்***
***சத்திரை வேலும் மயில் மிசை ஏறித் தனயன் முனம்***
***சித்திரை மாதம் வருவாய் மயிலைச் சிரோன் மணியே***

*கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகரான புத்தரை வாதினில் வெற்றி கொள்ள மாணிக்கவாசகருக்கு அருள் புரிந்தவன் சிவபெருமான். இத்தகைய சிறப்பு மிக்க சிவனது நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய அருட்குழந்தையே முருகன் எனும் திருப்பெயர் பெற்று புண்ணியத்தின் திருவுருவாய் இவ்வுலகை அருளாட்சி செய்கிறார்.*

*இம்மண்ணில் உள்ளன்போடு பக்தி செய்யும் மெய்யன்பர்களைக் காத்து அருள்புரிந்து துன்பம் விலக, சக்தி மிக்க வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தாங்கி ஞான சொரூபமான மயில்மீது ஏறித் தனயன் (பிள்ளை) முன், மயிலமலையில் வீற்றிருக்கும் சிரோன்மணியே! சித்திரை மாதம் வருவாய்! அருள் புரிவாய்.*

PRGI No.TNTAM/25/A4155

# ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ்

செந்தமிழ்ச் செம்மல் கலைமாமணி சீனு. வேணுகோபால்
மேனாள் தமிழாசிரியர், பொம்மையபாளையம்

நாடெல்லாம் வளர நல்குரவு ஒழிய ஞானமா நெறியெல்லாம் தழைக்க ஆடவர் மகளிர் அன்பினில் திளைக்கும் அறநெறியை வளர்த்தெடுக்க விளங்குவது வீரசைவ நெறியாகும். அனைவரும் சமமெனும் உயரிய நிலையை உலகம் பெற முக்கண் முதல்வனால் கயிலை மலையிலிருந்து அவரின் பூரண நல்லாசியோடு மண்ணுலகில் அவதரித்து வீரசைவ நெறியை பாலசித்தர் தம் அருட்செயல்களால் விளங்க வைத்தார். அவரது தீட்சை பெற்ற ஸ்ரீ சிவஞானியைத் தொடர்ந்து இன்றுவரை வீரசைவத்தையும் தமிழையும் இருகண்களென எண்ணி திருமடத்தின் ஆதீனங்கள் அருளாட்சி செய்து வருகின்றனர்.

ஆதி சிவஞானியைத் தன் ஞானாசிரியராக ஏற்று நல்லாற்றூர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாசர் வீரசைவம் போற்றியதோடு அற்புதமான பல அறிய தமிழ் நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கிப் பெருமை சேர்த்தவராகத் திகழ்கின்றார். காஞ்சி மாநகரில் தோன்றிய நல்லாற்றூர் சிவப்பிரகாசர் பெருந்துறவு வாய்ந்தவராய் தெய்வத்திறம் போற்றும் சிற்றிலக்கியச் செல்வங்களை ஞாலமெல்லாம் போற்றிப் பயன் கொள்ளுமாறு படைத்தளித்துச் சிற்றிலக்கியத்தின் பொற்காலமாகத் திகழவைத்த புனிதராகத் திகழ்கின்றார்.

சங்கத்தமிழ்க் குழவிக்கொரு செவிலி என்று போற்றப்பட்டவரான தெய்வப்புலவர், ஸ்ரீ சிவப்பிரகாசரைக் குழந்தையாகப் பாவித்து பிள்ளைத்தமிழ் பாடி அவரது பெருமைகளை ஆதீனப் புலவராகத் திகழ்ந்த பண்ருட்டி மணி அப்பாவு அய்யர் அவர்கள் இந்நூலை இயற்றியுள்ளார்கள். மிக அற்புதமான பல தரவுகளை நூல் முழுக்கப் பதிவு செய்து சிவப்பிரகாசரின் சிந்தனைகளை அதிலும் குறிப்பாக வீரசைவ நெறியின் விளக்கங்களைப் போற்றி வழங்கியுள்ளார். பிள்ளைத்தமிழ் இலக்கிய அமைப்பின்படி 10 பருவங்களாகப் பகுத்து ஸ்ரீ சிவப்பிரகாசரின் சிறப்பியல்புகளைச் செந்தமிழ்ப் பாக்களாகப் பண்ருட்டி மணி அப்பாவு அய்யர் வடித்துள்ளார்.

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழில் தொடக்கமாகக் காப்புச் செய்யுள் அமைந்துள்ளது. ஸ்ரீ சிவப்பிரகாசரைப் பற்றி இயற்றப்படும் இந்நூல் சிறப்புடன் அமையவும் குழந்தையாகப் பாவிக்கப்பட்ட குழந்தை சிவப்பிரகாசருக்கு அருள் புரியவும் வேண்டுதலோடு இந்தப் பாடல் அமைந்துள்ளது. பேரின்ப மருவுயிர் வீரசைவ மாண்பினை விளக்கும் ஒரு வள்ளல் பிள்ளைத்தமிழ் இம்மாநிலத்தில் தழையவே என அன்புடன் காத்தருள வேண்டுகிறார் நூலாசிரியர்.

**காப்புப் பருவம்**

திருமால், சிவபெருமான், உமையம்மை ஆகியோரைத் துதித்து சிவப்பிரகாசராகிய குழந்தையைக் காத்தருள வேண்டுகிறார்.

*மாமேவு திருநிறத்து அச்சுதக் கடவுளின்*
*மலரடியும், நகு வெண்தலை*
*மதி கங்கை நதி தும்பை ஆதிமருவின் நீறு*
*மனிதலுறு வன்னி யென்னத்*
*தாமேவு சிவபரஞ்சோதி மலரடியும், ஆசி*
*சோதியி இடம் பாங்கரில்*
*தழைதலுறு மரகதம் என ஒளித்ததும்பும் உமை*
*தாளினையும் முடி புனைகுலாம்* - ஏன் தெரியுமா?
*தேமேவு தெய்வத் தமிழ்க் கவிதை பொழியும் ஒரு*
*தெய்வக் குழந்தையாகிக்*
*திகழ் சிவப்பிரகாச தேசிகன் எனப்படும்*
*செம்மையைக் காக்கவென்றே* - என்பதற்காக

என நூலாசிரியரின் மேற்கண்ட தெய்வப் பாங்குடன் வேண்டுவதாக இப்பாடல் அமைந்து ஸ்ரீ சிவப்பிரகாசரின் தெய்வத்தமிழ் கவிதை மொழியும் தன்மை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது சிறப்புக்குரியதாகும்.

**விநாயகர் கடவுள், முருகக் கடவுள் மற்றும் பிற தேவர்களை வேண்டல்**

*"அன்புரி நாரையூர் நம்பியாண்டர் நம்பி*
*துன்புரி சூரன் ஆதியரைந்தடிந்து"*

மற்ற காவல்புரி தேவர் எனும் வரிகளின் வாயிலாகச் சைவ சமயத்துள் மேலாய் இலகும் எழில் வீரசைவ சமயத்தை எங்கும் செழித்திட வந்த ஸ்ரீ சிவப்பிரகாசரைக் காத்தருள்க என்கிறார் அது மட்டுமா?

*"மன்பெரிய உலகினில் பிறமதம் புறம*
*தாகியே மாழ்கவுஞ் சீர்*
*மண்ணும் அல்லம தேவர் சரிதம் ஆதியவுரவு*
*மைந்தனைக் காக்கவென்றே"*

என்று வீரசைவம் செழிக்கவும் இயற்றமிழ் வளரவும் வீரசைவம் தவிர மற்றைய மதங்கள் புற மதங்களாக மறையவும் அல்லமதேவர் சரிதம் முதலியவற்றை அருளி உதவும் சுவாமிகளைக் காக்க என நெஞ்சுருக வேண்டுகிறார்.

**வீரசைவ சமயக் குரவர்களைக் காக்க வேண்டும்**

நல்லாற்றூர் சிவப்பிரகாசச் செம்மலைக் காத்தருள்க என வீரசைவ சமயக்குரவர்களாகிய அல்லம தேவர், வசவேசர், சென்ன வசவேசர், மடிவாள மாச்சர், சீத்தாராமய்யர், கொக்கி தேவர், அக்கமா தேவியர், சின்னரையர், சோமநாதர் வீரசைவக் குருமார் ஆகியோருடைய திருவடிகளை வணங்கி வேண்டும் பாங்கு போற்றுதற்குரியதாகும்.

PRGI No.TNTAM/25/A4155

*"தில்லை நகர் வதி சிவப்பிரகாச தேவரால்*
*செம்மலைக் காக்க வென்றே "*

என நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாசர் தில்லையில் எழுந்தருளிய செய்தியையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளவிதம் படித்து பெருமிதம் கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளது.

**சைவ சமயக் குரவர் ஆகியோரையும் வேண்டுதல்**

*ஏழிசையை மதுபமுரல் சோலையுண்டு சூழ்மயிலை*
*ஏய்ந்த சிவஞானி அருளால்*
*எண்ணரிய மகிமை பெற்றெல்லாம் ஏத்தலாம்*
*இறவனைக் காக்க வென்றே"*

எனும் இப்பாடல் வாயிலாகச் சிவஞானியின் சிறப்பு, மயில மலையின் வனப்பு ஆகியவற்றைச் சுட்டி ஸ்ரீசிவஞானியின் அருள்பெற்ற இவரைக் காத்தருள்க எனச் சைவ சமயக்குரவர்களாகிய நால்வரை வேண்டுகிறார். காழியுரை கௌனியர் குலத்தில் வரும் சிவபாதர் கருத்துலங்க வந்த திருஞானசம்பந்தர், பாழியுறு சமன் உற்றழிந்த வாகீசர், பகர் திருத்தொண்டத் தொகை அருளிய சுந்தரர் இறைவனையே பரிவீரராகச் செய்த வாதவூரர் எனும் நால்வரையும் வாழ்த்தித் துதித்தல் செய்யலாம் என வேண்டுகிறார்.

**பாலசித்தர், சிவஞான பாலய தேசிகரை வேண்டுதல்**

*கயிலையின் உறுபூத கணநாத ராம் சங்கு*
*கன்னர் இவ் வுலகம் உய்ய*
*கல்லாடை சடை குண்டலம் பூதி கண்டிகை*
*கச்சையொடு மிளிர் கோவணம்*
*இயலமை சின் முத்திரை மாத்திரை கோல்விபூ*
*திப்பை சிவலிங்கமாதி*
*ஏற்று உததிதனில் உதித்தே பாலசித்தராய்*
*எழில் பொம்ம புரியேய்ந்து பின்*
*மயிலை மலை தனில் அருந்தவ முற்றி வேளருள்*
*வாய்ப்பு சிவஞான சித்த*
*மாதவர் எனத்திகழ்ந்தன ராகலான் அவர்*
*மலரடியும் அவர் சீடராய்ப்*
*பயிலும் ஒரு சிவஞான பாலய தேசிகர்*
*பதாம்புயமும் முடி சூட்டுவான்*
*பதிவின் மற்றவர் தொண்டராம் சிவப்பிரகாசர்*
*பண்ணவற் காக்க வென்றே"*

என இப்பாடலில் சங்கு கன்னர் பாலசித்தர் பொம்மபுரக் கடலோரம் அவதரித்து, மயிலை மலையில் தவமிருந்து முருகன் மூலம் அருள் பெற்றது, அவரது சீடராகச் சிவஞானி திகழ்ந்தது ஆகியவற்றை அற்புதமாக எடுத்தியம்பி

சிவஞானியின் மெய்த் தொண்டரான ஸ்ரீ சிவப்பிரகாசரைக் காத்தருளும்படி நூலாசிரியர் அழகாகப் பாடிப் பதிவு செய்துள்ளார்.

மேற்கண்ட காப்புப் பருவப் பாடல்கள் வாயிலாகப் பல செய்திகளைப் பதிவு செய்து வீரசைவநெறி அகிலத்தில் ஓங்க செந்தமிழ்ப் புலவராய்த் தோன்றிய சிவப்பிரகாசரின் மாண்புகளை எடுத்தியம்பி கற்போர் நெஞ்சம் களிப்புறவும் அதன் வாயிலாக வீரசைவத்தின் பெருமையை உணரவும் நமக்கு வழிகாட்டி குருவருளைப் பெற்று பின் திருவருளைப் பெறுவதற்கான நிலைகளை எடுத்தியம்பியுள்ள பாங்கைப் போற்றுவோம். ஸ்ரீ சிவப்பிரகாசரின் தமிழ் நலம் அறிந்து உயர்வடைவோம்.

## பள்ளி எழுந்தருளே...

**புலவர் சி. சுவாமிநாதன்**
கொம்மேட்டுத் தெரு, பந்தநல்லூர், திருவிடைமருதூர் வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம் - 609807, தொடர்பு எண் 9524508352

1) *ஆறேறு சடை முடியான் கங்கையின் உயர்ந்த*
*நிகரேதும் சொல்லரியா மணிமுத்தா றுகந்த*
*ஆறேறு நெடுங்கயல்கள் வயல்களிடை புகுந்து*
*மானேர்ந்த மங்கையரின் விழிக்குநாம்நிக ரிலாதேம்*
*சேறேறு கைவளைகள் உழத்தியர்கை துடைத்துச்*
*செம்பவள நிறங்கூட்டிச் செங்கயல்கள் திரும்பும்*
*கூறேறு மைபங்கன் பழமலைநா தனருள்*
*தேசிகனே! அருள்மழை! பள்ளியெழுந் தருளே!*

2) *யானைத்தந் தம்சங்கு கரும்பினிடை கணுவில்*
*தாமரைப்பொ குட்டுமூங்கில் இவ்வைந்திடத் தொளிறும்*
*ஊனமது தோன்றிவாமுத் தினங்கள் பிறக் குமிடம்*
*முத்துமணி யும்துகிரும் பன்மணியும் உருளும்*
*தேனமிழ்த மானசுவை மணிமுத்தா றதுவும்*
*திருக்கோயில் வலம்வந்து வானமிழ்தாய் ஒழுகும்*
*மானேர்ந்த கரதலத்தோன் பழமலைநா தனருள்*
*தேசிகனே! அருள்மழையே! பள்ளியெழுந் தருளே!*

3) *கருத்தியலாய் வந்தமர்ந்த முதுநகராம் சேயூர்*
*தலம்மூர்த்தித் தீர்த்தமெனும் மிகுசிறப்பின் வெங்கனூர்*
*விருத்தாசலப் பழமலைநா தர்பெரியநா யகியின்*
*திருக்கோலச் செம்மேனி உருவாக்கி நிறைந்த*
*மருவாகி நின்னடியை மறவேனென் றகலா*
*மறித்தொருகால் பிறப்பறுக்கும் பிஞ்ஞகனே! மகிழ்ந்து*
*கருவறைபோல் களிற்றுடுத்தன் பழமலைநா தனருள்*
*தேசிகனே! அருள்மழையே! பள்ளியெழுந் தருளே!!*

PRGI No.TNTAM/25/A4155

## நல்லாற்றூர் சிவப்பிரகாசர் ஓர் இலக்கணக் களஞ்சியம் - 11

**கற்பனைக் களஞ்சிய நம்பி தமிழாகரர் தெ. முருகசாமி**
(மேனாள் முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி), புதுச்சேரி - 09, தொடர்பு எண் 9790115625

ஒரு மரத்துக்கனி போலத் திருச்செந்தூர் பற்றியதான கருத்தாடல்களை மையப்படுத்திப் பாடிய திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதியின் பத்தாம் பாடல் முருகன் பற்றிய உரையாடல்கள் நிகழும் சற்சங்கம் திருச்செந்தூரில் இருந்ததாகவும் அச்சங்கத்தை நாடி வாழ்பவர்களுக்குகு எமபயம் இல்லை என்பதாகவும் கூறுகிறது.

*எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும்.* (416)

என்பார் திருவள்ளுவர். நல்லவற்றைக் கேட்பதற்கு ஆங்காங்கே நல்லவைகள் வேண்டும். அத்தகு அவைகளிலே மனிதர்கள் பழக வேண்டும். தம்மைப் போல் இளைய தலைமுறையினரையும் பழக்க வேண்டும். இதைத்தான் வள்ளுவர்,

*தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து*
*முந்தி யிருப்பச் செயல்.* (67)

எனப் பெற்றோர்களுக்கு அறிவுரை பகர்வார் போல் கூறினார். அந்த வகையில் திருச்செந்தூரில் நல்லோர் அவை என்னும் சற்சங்கம் இருந்ததாக நல்லாற்றூர் சிவப்பிரகாசர் கூறுகையில் " சார்ந்தனம் சற்சங்கம் " என்பதாகக் கீழ்க்கண்ட பாடலில் பதிவு செய்துள்ளார்.

**சீர் பிரிக்காத பாடல்**

*சங்கங் களங்கழ னிக்கரை சேர்செந்திற் றங்கினநஞ்*
*சங்கங் களங்கர நண்ணரன் சேயெய்தச் சார்ந்தனஞ்சற்*
*சங்கங் களங்க னிடைநிகர் தண்ட தரற்கினிய*
*சங்கங் களங்க ரெனநின்று யாங்கணெஞ் சங்கரைந்தே*

**சீர் பிரித்த பாடல்**

*சங்கங்கள் அம்கழனிக் கரைசேர் செந்தில் தங்கினம், நஞ்*
*சம் கம்; களம் – கரம் நண் அரண் சேய் எய்தச் சார்ந்தனம், சற்*
*சங்கம், களங் கனியை நிகர் தண்டதரற்கு இனி ; அ*
*சங்கம் களங்கர் என நின்ற யாங்கள் நெஞ்சம் கரைந்தே!*

**பாடலின் பிண்டப் பொருள்**

சங்குகள் வயல்களிலிருந்து கரையேறி உலவும் அழகிய திருச்செந்தூரில் நாங்கள் மனமுருகித் தங்கினம் எனச் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் பிறர்

பொருட்டாகத் தம்மை முன்னிலைப்படுத்திக் கூறுகிறார். திருச்செந்தூரில் தங்குவதற்கான காரணம் கூறுகையில் ஆன்மா பக்குவம் அடைதற்கான வழிமுறைகளைக் கூறும் சற்சங்கங்கள் (நல்லோர் அவை) அவ்வூரில் உள்ளதால் தங்குவதாகக் கூறப்பட்டது. சற்சங்கத்தில் பேசப்படும் பொருளைக் கேட்கும் பயனாக வரும் நன்மையாதெனில் களாங்கனி போன்ற கருநிறமுடைய எமனால் ஏற்படும் பயம் (அச்சம்) இல்லாமல் போகுமாம்.

பேசப்படும் பொருளுக்குரியவன் முருகன். அவன் யாரெனில் சிவனது மகன். சிவன் எத்தகையவன் எனில் நஞ்சைக் கழுத்திலும் (கண்டம்) பிரம கபாலமாம் தலையை (மண்டை ஓடு) கையிலும் உடையவனாம் என்கிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர். எனவே முருகனைப் பற்றிப் பேசும் சற்சங்கத்தில் தங்கியிருந்து நல்லதைக் கேட்டால் எமபயம் இல்லையாம் என்க.

**பாடலின் விசேடப் பொருள் -** சற்சங்கம் எனச் சிவப்பிரகாசர் கூறுவது ஞான விசாரணைகள் நடக்கும் நல்லோர் அவை என்பது கருத்து. இத்தகு அவையைச் சேக்கிழார் புனிதர் பேரவை என்பார், சன்மார்க்கம் என்பதாய் ஞான நெறியைக் கூறும் “அறிவு ஒளி” பற்றியதாகக் கூறும்போது அஞ்ஞானம் நீங்கி ஞானத் தெளிவை உணர்ந்து கொள்ளும் இடம் என்பதாக ஆன்றோர்கள் கூறுவர்.

கந்த புராணத்தில் முருகன், “செந்தமிழ் வழாது கலை சேர்ந்துழி உலாவும்” என்பதாகக் கச்சியப்பர் கூறுவார். அதாவது தெய்வத்தமிழ் அவையிலும் வடமொழி தத்துவ விசாரணை நடக்கும் இடத்திலும் முருகன் உலாவுவான் என்று கூறுவதால் திருச்செந்தூரின் சற்சங்கத்தில் முருகன் பேசும் பொருளாக உள்ளதால் அவனைப் பற்றிக் காதாரக் கேட்போர்க்கு எமபயம் இல்லையாம் என்று நல்லாற்றூர் சிவப்பிரகாசர் கூறுவது முருகனின் பேரருள் திறனை அறியச் செய்த உத்தியாம் எனலாம்.

மேலும் எமபயம் என்பது ஆன்மாவுக்கு அறியாமையால் ஏற்படுவதாகும், அதனால்தான் ஆண்டவனின் அருளை முழுமையாய்ப் பெற்ற அப்பரடிகள், “உற்றார் யார் உளரோ?, எமன் உயிர் கொண்டு போகும் பொழுது” என்று குற்றாலத்துறைக் கூத்தனிடம் வேண்டுகிறார்,

அத்தகு எமபயம் இல்லாதவாறு செய்யும் சற்சங்கம் இருக்கும் திருச்செந்தூரில் மனம் உருகித் தங்கினம் என நல்லாற்றூர் சிவப்பிரகாசர் கூறுவது திருச்செந்தூரின் திருத்தலச் சிறப்பை விளம்பரப்படுத்திய உத்தியாம் எனலாம்.

சிவபெருமானைப் பற்றி நல்லாற்றூர் சிவப்பிரகாசர் கூறுகையில் நஞ்சைக் (விடத்தை) கண்டத்திலும் கையில் பிரம்ம கபாலத்தையும் உடையவர் என்றார், “நஞ்சம் கம், களம் கரம் நண் அரன் - என்பது அவர் வாக்கு. நஞ்சம், கம் என்பன நஞ்சத்தையும் பிரம்ம கபாலமாம் மண்டை ஓட்டையும் என்று பொருள்.

களம் கரம் என்பன அவற்றை (நஞ்சை, தலையை) முறையே கழுத்திலும் (களம்) கையிலும் (கரம்) உள்ளவர் என்பது கருத்து. கம் என்றால் தலை,

*புழக்கத்தில் இல்லாத அறிய அகராதிச் சொல் வழக்கு. அச்சத்திற்கு உரியவன் எமன் என்பதைக் குறிக்க அவனை இருட்டுக்குச் சமமாக அந்தகன் என்பது பொது வழக்கு, அதற்கேற்பக் களாம் பழத்தின் கரிய நிறம் போன்றவன் எமன் என்றார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்,*

*எமனுக்குத் தண்டதரன் என்ற பெயர் உள்ளதாகச் சிவப்பிரகாசர் கூறியுள்ளார். ஆன்மாவை உடலில் இருந்து தண்டித்துப் பிரித்து எடுத்துப் போவதால் அப்பெயர் எமனுக்கு அமைந்தாலும் சற்சங்கத்தில் தங்கி இருப்போர்க்கு அப்பயம் இல்லையாம் என உறுதிப்படுத்தவே "யாங்கள் இனி அசங்கம்" என்பதாகக் கூறுவது (எமனுக்கு அஞ்ச மாட்டோம்) சிவப்பிரகாசர் முருக பக்தர்களுக்குத் தரும் ஊக்கமான வார்த்தையாகும். புழக்கத்தில் இல்லாத அகராதி, நிகண்டு போன்றவற்றில் உள்ள சொற்களை இலக்கிய வழக்காகக் கூறுவது சிவப்பிரகாசரின் மொழி நலப்பாங்கை உணரச் செய்கிறது.*

*எல்லாவற்றிற்கும் மேலாகப் பாடலின் தொடக்கம் சங்கை நினைவூட்டுவதாக உள்ளதை ஒரு விசேடக் குறிப்பாக (தொனியாக) உணரலாம். திருச்செந்தூர் கடல் சார்ந்த தலம், கடலில்தான் சங்கு உண்டாகும். இடம்புரி வலம்புரிச் சங்குகள் என்பன கடலின் பொருள்கள், அவைகள் வலைவீசிப் பிடிக்கப்படும் அரிய பொருளாயினும் அவைகள் தாமே கடற்கரை வயலின் ஓரத்தில் கரையேறியுள்ளதாக நல்லாற்றூர் சிவப்பிரகாசர் கூறுவதானது இறைவனடி சிந்திப்பார் எளிதில் பிறவிக் கடலைக் கடப்பர் என்ற குறிப்பைச் சுட்டுவதற்காகக் கூறப்பட்ட சுற்றுச்சூழல் இயற்கையைச் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் நினைப்பித்தார் என்பதாக உணர வேண்டும்.*

*இந்த இயற்கைக்கு இணையாகவே திருச்செந்தூரில் சற்சங்கம் பக்தர்களை இயல்பாகவே கரையேற்றும் என்ற கருத்தைக் காட்சிப்படுத்தினார் என்று உணர வேண்டும். இதை உறுதிப்படுத்தும் விதமாகவே நல்லாற்றூர் சிவப்பிரகாசர் "நெஞ்சம் கரைந்தே செந்தில் சார்ந்தனம், தங்கினம்" என்றார். இவ்வாறு ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும் திருச்செந்தூர் தலத்திற்கு வேல்கோட்டம் என்ற பெயர் உண்டு என்பதைச் சொல்லாமல் சொல்வது போல் நம் சிவப்பிரகாசர் அடுத்த பாடலில் (11ஆம் பாடலில்) வேலேந்திய மகிமையை உணர்த்துவதைக் காண்போமாக.*

## 2026 மார்ச்சு திங்கள் சங்கு கன்ன பாலசித்தர் இதழ் பக்கம் 30இல் உள்ள "தெரியாது" என்ற சொல் குற்றியலுகரமா? முற்றியலுகரமா? எனும் கட்டுரை குறித்த பதிவு

*முழுமையாக வாயிதழ் குவிந்து உச்சரிப்பதற்கு மாறுபட்டு இதழ்குவியாமல் உச்சரிக்கும் கு,சு,டு,து,பு,று என்ற வல்லின எழுத்துக்கள் சொல்லில் சில இலக்கண மரபுடன் உச்சரிப்பதாக அமைவது குற்றியலுகரம். அது 1. எழுத்திலக்கணப்படி ஆறுவகை, 2. யாப்பிலக்கணப்படி ஏழு வகை என இருவகைப்படும்,*

PRGI No.TNTAM/25/A4155

**1. எழுத்திலக்கணப்படி ஆறு**

| | | | |
|---|---|---|---|
| 1. | நெடில்தொடர் குற்றியலுகரம் | – | காது |
| 2. | உயிர்த்தொடர் குற்றியலுகரம் | – | வரகு |
| 3. | வன்தொடர் குற்றியலுகரம் | – | பட்டு |
| 4. | மென்தொடர் குற்றியலுகரம் | – | சங்கு |
| 5. | இடைத்தொடர் குற்றியலுகரம் | – | அல்கு |
| 6. | ஆய்தத்தொடர் குற்றியலுகரம் | – | அஃது |

இது பற்றி நன்னூல் கூறுகையில்

**நெடிலோடு ஆய்தம் உயிர் வலி மெலி இடைத்**
**தொடர் மொழி இறுதி வன்மை ஊர் உகரம்**
**அஃகும்; பிறமேல் தொடரவும் பெறுமே**
இதையே தொல்காப்பியம் கூறுகையில்
**நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி ஈற்றும்**
**குற்றியலுகரம் வல்லாறு ஊர்ந்தே.**

இவ்விரு இலக்கண நூற்பாவால் அறியப்படுவது யாதெனில் - ஒருமொழிக் குற்றியலுகரம் பற்றியதாம் என்க. இவ்வகையுள் உள்ள மற்றோர் நுட்பம் யாதெனில் தனிக்குறிலுக்குப் பக்கத்தில் கு,சு,டு,து,பு,று வந்தால் குற்றியலுகரம் எனப்படா என்பதும் ஆகும்.

மேலும் நெட்டெழுத்திற்குப் பக்கத்தில் அந்த ஆறு எழுத்தும், நெடில் தொடர் குற்றியலுகரம் என்று பெயர் பெறும் என்பதால் பொதுவாகக் குறிலுக்குப்பின் வாரா என்பதோடு அதாவது ஒருமாத்திரை எழுத்திற்கும் பின் வாரா என்றாலும் ஒருமாத்திரைக்கு மேல் அளவான 12 மாத்திரை எழுத்துக்குப் பின்னும் இரண்டு மாத்திரைக்குப் பின்னும் அமையும் அந்த ஆறு எழுத்துக்களும் முழுமையாக வாயிதழ் குவிந்து உச்சரிக்கப்படா என்பதாக உணர வேண்டும்.

இங்ஙனம் உணர அந்தக் குற்றியலுகரத்து முன்னுள்ள எழுத்தைக் கொண்டே அந்தப் பெயர்களைப் பெறும் என்பதாம் என்க.

எனவேதான் சொல்லின் இறுதியும் அதன் முன்னர் உள்ள எழுத்து பற்றுக்கோடு என்பதாகவும் உரையாளர்கள் கூறினர். மேற்கூறிய ஒருமொழிக் குற்றியலுகரம்படி, தெரியாது குற்றியலுகரம் ஆகாது.

**2 - யாப்பிலக்கணப்படிக் குற்றியலுகரம் ஏழ் ஆகும்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | நெடில் குற்றியலுகரம் | – | நாடு |
| 2. | நெடில் ஒற்றுக் குற்றியலுகரம் | – | நாக்கு |
| 3. | குறிலிணைக் குற்றியலுகரம் | – | படகு |
| 4. | குறிலிணை ஒற்றுக் குற்றியலுகரம் | – | அரக்கு |
| 5. | குறில் நெடில் குற்றியலுகரம் | – | அசோகு |

6. குறில் நெடில் ஒற்றுக் குற்றியலுகரம் – பனாட்டு
7. குறில் ஒற்றுக் குற்றியலுகரம் – நட்பு

இந்த யாப்பு முறைப்படியும் "தெரியாது" குற்றியலுகரம் ஆகாது.

முன்னர்க்கூறிய ஆறும் பின்னர் உள்ள ஏழனுள் அடங்குமேனும் இந்தக் குற்றியலுகரக் கோட்பாடு பெரும்பாலும் செய்யுள் மரபுக்குரித்தாய் அமைய உள்ளது என்ற உண்மையால் உரைநடைப் பாங்கை இணைத்தும் பேசுதல் ஒரே வழி ஒவ்வாதென்பதையும் தெளிந்தால் "தெரியாது" என்பது குற்றியலுகரத்தோடு முற்றியலுகரமாகவும் கொள்ளல் கூடாதென்பது தெளிவாம் என்க.

கட்டுரையில் எனக்குத் தெரியாது என்ற சொற்கள் பற்றியதில் உள்ள இலக்கணமும் தெளிதல் வேண்டும்.

ஒருமொழிக்குற்றியலுகரம் 1/2 மாத்திரை, அதுவே ஒரே வழித் தொடர்மொழியாக வரும்போது இயல்பான 1/2 மாத்திரையிலிருந்து 1/4 மாத்திரையாய்க் குறுகி ஒலிக்கும் என்பதுதான் கருத்தே தவிர சுக்குக்கொடு என ஒற்று மிகுவதால் அது முற்றியலுகரம் ஆகாது. அதனால் எனக்குத் தெரியாது என்றதில் எனக்கு முற்றுகரமும் இல்லை, தெரியாது என்பதும் குற்றியலுகரமும் இல்லையாம் என்க.

இந்தக் கருத்தாடலான பேசுபொருள் தமிழறிஞர் மறைமலை அடிகள் தொடர்பாக வந்தது என்பதிலும் தெளிவு இல்லை. ஏனெனில் அடிகளை, சூரிய நாராயண சாத்திரி அவர்கள் நேர்முகத் தேர்வில் யாரிடம் கல்வி கற்றதாக வினவ, அடிகளும் சோமசுந்தர நாயக்கரிடம் தமிழறிந்ததாகக் கூறியதையே தகுதியாகக் கொண்டு பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்பதன்றி நேர்முகத் தேர்வில் "தெரியாது" பற்றிய உரையாடல் நடக்கவில்லை. இந்த உண்மையால்தான் கட்டுரையாளர் அறிய விரும்பிய உண்மைக்கு எந்தத் தரப்பிலிருந்தும் பதில் கிடைக்காத வருத்தத்தைப் பதிவு செய்ததிலிருந்து தெளிவாகிறது.

இந்தக் காலத்து நேர்கூற்றில் பல சான்றுகளை அறிதல் போல் இல்லாத சூழல் உ.வே.சா. அவர்கட்கும் இருந்தது. மேலும் இராமசாமி முதலியார் என்பார் உ.வே.சா. இடத்தில் கேட்டது - மகாவித்துவானிடம் படித்த நீங்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை பற்றி ஆசிரியர் சொல்லக் கேட்டிருப்பதைக் கூறுங்கள் என்றபோது ஆசான் அவை பற்றிக் கூறவில்லை என்றதும் அவற்றைத் தேடும் முயற்சியில் ஈடுபடத் தூண்டியதோடு மகாவித்துவான் மாணாக்கர் என்பதே தகுதி எனக் கல்லூரியில் சேர்த்துக்கொண்ட வரலாறு உண்டு என்பதால் மறைமலை அடிகளும் அவ்வுயர்வுக்குரியவர்களே ஆவார் எனத் தெரிதல் வேண்டும்.

# நால்வர் நான்மணி மாலையில் பக்தியும் முக்தியும் - 4

**முனைவர் இராச. திருமாவளவன்**
முதுநிலை விரிவுரையாளர் (பணிநிறைவு),
கல்வித்துறை, புதுச்சேரி, 9952003828

**திருநாவுக்கரசரும் தாச மார்க்கமும்**

*திருநாவுக்கரசரும் தாச மார்க்கமும் என்பதை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை 1. தாச மார்க்க முறை, 2. தாச மார்க்கத்திற்குத் திருமூலரின் வழிகாட்டுதல், 3. திருநாவுக்கரசர் தாச மார்க்கத்திற்கு உரியவர் என்பதற்கான அகச் சான்றுகள் என்பன.*

**1. தாச மார்க்க முறை**

*இறைவனின் அடிமையாகத் தன்னைக் கருதி, இடைவிடாமல் செய்யும் தெய்வத் தொண்டு முறையையே 'தாச மார்க்கம்'. அனுமன் தன்னை இராமனின் அடிமை என்றார்.*

***'ஆண்டான் அடிமைத் தொழில் ஆற்றலின் ஆற்றல் உண்டே?'** (4908:2)*
***'அன்னவற்கு அடிமை செய்வேன், நாமமும் அனுமன் என்பேன்'** (5970:1)*

*என்னும் கம்பராமாயண அடிகள் தாச மார்க்கத்தை அனுமன் போற்றுவதை உணர்த்துவன.*

*தாச மார்க்கம் காலந்தோறும் வளர்ந்து வருகிறது. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற பாரதிதாசன், கண்ணதாசன், வாணிதாசன், கம்பதாசன் என்பவர்களின் இயற்பெயர்கள் வேறு. ஆனால் இவர்களைக் குறிக்க இந்தப் பெயர்களே நிலைபெற்றன. கால மாற்றத்தில் 'தாச' என்ற சொல் 'தாசி' எனப் பெண்களைக் குறிக்கும்போது இழிவானதாகவும் மாறியது.*

*தாச மார்க்கத்தைப் பின்பற்றி இறைவனுக்குத் தன்னை ஓர் அடிமையாகக் கருதித் தொண்டு செய்யும் ஒருவரையோ பலரையோ 'அடியார்' என்பர். மாறாக 'அடியாள்' என்னும் ஒருவரைக் குறிக்கும் வழக்கும் இன்று உள்ளது. பலரைக் குறிக்க இவர்களை 'அடியாட்கள்' என்பர். 'அடியார்', 'அடியாள்' என்னும் இரண்டிற்கும் உள்ள சரியான பொருளை முதலில் தெளிவாக அறிவது தேவையாகிறது.*

*'அடியார்' என்ற சொல்லை 'அடிமை + ஆர்' என்று பிரிப்பர். இதில் 'அடிமை' என்பது தாழ்ந்தபணிவுடைய நிலையில் உள்ளதைக் குறிக்கும் சொல். 'அடிமை' என்பதில் 'மை' என்ற இறுதி எழுத்தை நீக்கினால் 'அடி' என்றாகும்.*

இதனுடன் 'ஆர்' என்னும் 'உயர்ந்த மனிதர்' எனப் பொருள்படும் விகுதியும் சேர்த்தால் 'அடியார்' ஆகிறது. இதனால் இது இறைவனைப் போற்றிப் பணி செய்யும் பண்புடைய உயர் மனிதரைக் குறிப்பதாயிற்று.

'அடியாள்' என்பதில், 'அடி + ஆள்' என்னும் இரண்டு சொற்கள் உள்ளன. இதில் 'அடி' என்பது வினைச் சொல்லின் பகுதி. இது, 'உதை', 'தாக்கு', 'குத்து' எனக் கட்டளையிடும் சொல்லாகும். இந்தச் செயலைச் செய்ய ஒருவன் வேண்டும். அவனைக் குறிப்பதே 'ஆள்' என்னும் சொல். ஆக சொன்னபடி அடிக்கிற, உதைக்கிற ஆளை 'அடியாள்' என்றனர். இதை இலக்கணத்தில் 'வினைத் தொகை' என்பர்.

இவற்றால், 'அடியார்' என்பது 'உயர்ந்த தொண்டு செய்யும் பண்பாளரைக் குறிக்கும் சொல்' என்றும், 'அடியாள்' என்பது 'சொன்னபடி தாக்கும் இழி தொழிலைச் செய்யும் கீழ்மகனைக் குறிக்கும் சொல்' என்றும் அறியலாம். எனவே, 'தாச மார்க்கம்' என்பது உயர்ந்த பண்புடைய 'அடியார்' கடைப்பிடிக்கும் ஒழுக்க நெறியைக் குறிப்பது தெளிவாகும். இதனாலேயே சுந்தரர், 'திருத்தொண்டத் தொகை' என்னும் தேவாரப் பகுதியில் சிவனடியார்களின் திருநாமங்களை வரிசையாகக் குறிப்பிட்டு, 'அடியார்க்கும் அடியேன்' என்று தன்னை அவர்களின் அடிமையாகக் கூறி மகிழ்ந்தார். இவரைப் பின்பற்றி நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி, உமாபதி சிவாச்சாரியார் படைத்த சேக்கிழார் புராணம் என்னும் திருத்தொண்டர் புராண வரலாறு, திருத்தொண்டர் புராணப் பயன் என்னும் திருத்தொண்டர் புராணச் சாரம், மாதவச் சிவஞான முனிவர் எழுதிய திருத்தொண்டர் திருநாமக் கோவை என்பவை எல்லாம் சிவனடியார்களின் பெருமையை உணர்த்துவன.

'அடி' என்னும் சொல் வேறு ஒரு பொருளிலும் மிகவும் புகழ்பெற்ற பெயராக மாறியது. 'தொண்டு ஆடியதொண்டு அடிப்பொடி நீறும் தொழுது' (4.112.7:3) என்னும் திருநாவுக்கரசர் பாடல் அடியில் உள்ள 'தொண்டு அடிப்பொடி' என்னும் தொடரையே பெயராகக் கொண்ட ஆழ்வார்களில் ஒருவர் 'தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்'. இவர் பெயரில் 'தொண்டர்' என்பது இறையடியார்களைக் குறிக்கும், 'அடிப்பொடி' என்னும் தொடரில் 'அடி' என்பது 'பாதத்தைக்' குறிக்கிறது. 'பொடி' என்பது பாதத்தில் ஒட்டி உள்ள 'தூசு, துரும்புகளைக் குறிக்கிறது. இதனால் தொண்டர்களின் பாதங்களில் ஒட்டியுள்ள தூசு துரும்பாக இருப்பதே பெருமை என்னும் கருத்துடையதே 'தொண்டர் அடிப்பொடி' என்னும் தொடர். இருபதாம் நூற்றாண்டில் கம்பன் புகழைப் பரப்புவதே தன் தொண்டு என வாழ்ந்த சா.கணேசன் என்பாரைக், 'கம்பன் அடிப்பொடி' என்பர்.

தாச மார்க்கத்தைப் பின்பற்றிய அடியார்களைச் சைவ சமயம் இரண்டு பிரிவாகப் பிரிக்கிறது. ஒரு பிரிவினரை 'அகம்படியார்' என்றும் மற்றொரு பிரிவினரைப் 'புறம்படியார்' என்றும் கூறுவர். இன்றும் தமிழகக் கோயில்களில்

கருவரையில் உள்ள இறைவன், இறைவி முதலிய மூர்த்தங்களை மந்திரங்கள் ஓதி, நீர், தேன், தயிர், பால் முதலியவற்றால் அபிடேகம் செய்தல், சந்தனத் திருக்காப்புச் செய்தல், மலர் தூவி அர்ச்சனை செய்தல் முதலியவற்றை அக்கோயில் அர்ச்சகர் செய்வர். இப்படிப்பட்டவரை 'அகம்படியார்' என்பர். வேதம் ஓதும் அந்தணர் மரபைச் சேர்ந்தவர்களும் 'அகம்படியார்' எனப்படுவர். இறைவனைப் புகழ்ந்து பாடுதல், கோயில் பகுதிகளைச் தூய்மை செய்தல், மலர்க்கொய்து கொடுத்தல், உற்சவரைப் பல்லக்கில் சுமந்து செல்லுதல் முதலிய பணிகளைச் செய்பவரை 'புறம்படியார்' என்பர். திருநாவுக்கரசர் தம் கையில் 'உழவாரப் படை' ஏந்தி மலர்க் கொய்தல் முதலிய கோயில் திருப்பணிகளைச் செய்ததால் இவரைப் புறம்படியார் என்பர்.

அகம், புறம் என்னும் சொற்களே 'பு' என்னும் சாரியையுடன் சேர்ந்து அகம்பு, புறம்பு என மாறின. இவற்றுடன் தொண்டு செய்யும் அடியவர் என்பதைக் குறிக்கும் 'அடியார்' என்னும் சொல் சேர்ந்து அவை, அகம்படியார் (அகம்பு + அடியார்) , புறம்படியார் (புறம்பு + அடியார்) என வழங்கலாயிற்று.

**2. தாச மார்க்கத்திற்குத் திருமூலரின் வழிகாட்டுதல்**

தாச மார்க்கத்திற்கு உரிய நித்திய ஒழுக்கத்தைத் திருமூலர் விரிவாகக் கூறுகிறார்.

***'எளியநல் தீப மீடல், மலர் கொய்தல்***
***அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்***
***பளிமணி பற்றல் பன்மஞ் சனம்ஆதி***
***தளிதொழில் செய்வது தான்,தாசமார்க்கமே'*** *(திருமந்.1502)*

'திருக்கோயிலில் விளக்கிடுதல், மலர்களைக் கொய்து கொடுத்தல், தொடுத்துக் கொடுத்தல், அலகிடல், மெழுகல், துதி பாடல், ஊர்தி சுமத்தல், பலவகைத் திருமஞ்சனப் பொருள்களைக் கொணர்ந்து கொடுத்தல் முதலியவற்றை மன நிறைவோடு செய்தல், தாச மார்க்கத்தார்க்கு உரிய பணியாகும்'

என இப்பாடலில் திருமூலர், தாச மார்க்கத்தாரின் நித்திய ஒழுக்க நெறிகளைக் கூறுகிறார்.

***'வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்***
***பாசிக் குளத்தில்வீழ் கல்லாம் மனம் பார்க்கின்***
***மாசற்ற சோதி மணிமிடற்று அண்ணலை***
***நேசித்து இருந்த நினைவறி யாரே'*** *(திருமந்.1506)*

'இறைவனைப் போற்றும் தோத்திர நூல்களை வாசித்தல், எப்போதும் வழிபடுதல், மலர்க் கொய்து கொடுத்தல் முதலிய பணிகளைத் தொண்டர் செய்வர். பாசி நிறைந்த குளத்தில் கல்லை வீசினால் அதன் வேகம் உள்ளவரை பாசி விலகி நிற்கும். பின் பாசி குளத்தை மூடிவிடும்.

அதுபோலத் தொண்டு செய்யும் வரை மனம் இறைவனை நினைக்கும். தொண்டு முடிந்தபின் மனத்தில் பிற எண்ணங்கள் நிரம்பி இறைவன்மேல் பற்று அற்றுப்போய்விடும்'

என்பதால் 'இறைவனை எப்போதும் நினைப்பதும் தொண்டும் செய்வதே தாச மார்க்கமாகும்'.

**3. திருநாவுக்கரசரின் தாச மார்க்க அகச் சான்றுகள்**

திருநாவுக்கரசரின் தாச மார்க்க அகச் சான்றுகளை மூன்றாகப் பிரிக்கலாம். அவை அ) தாசமார்க்கப் பிரிவுகள், ஆ) தம்மைத் தாசமார்க்கப் பிரிவினரில் ஒருவராகக் கருதிய பாடல்கள், இ) தாசமார்க்க நித்திய ஒழுக்கப் பாடல்கள் என்பன.

**அ] தாசமார்க்கப் பிரிவுகள்**

திருநாவுக்கரசர், தாச மார்க்கத்தாரை i) தொண்டர், ii)தொண்டருக்குத் தொண்டர், iii) தொண்டர்க்கு அடிமை, iv) அடிமை, v) அடிமைக்கு அடிமை என ஐவராக்கித் தன்னை அவர்களில் ஒருவராகத் தன்னை இணைத்துள்ளார்.

**ஆ] திருநாவுக்கரசர் தாசமார்க்கப் பிரிவினில் ஒருவராகக் கருதிய பாடல்கள்**
**i) தொண்டர்**

திருநாவுக்கரசர், தம்மை 'இறைத் தொண்டன்' என்பதில் மகிழ்கிறார் திருவையாறு திருவிருத்தம் (4.91) பதிகத்தில் 'தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழ் எனையே' எனத் 'தொண்டனாகிய தம்மை இறைவன் தன் திருவடிக் கீழ் ஏற்க வேண்டும்' என வேண்டுகிறார்.

***'குறுவித்த வா,குற்ற நோய்வினை காட்டிக் குறுவித்தநோய்***
***உறுவித்த வா,உற்ற நோய்வினை தீர்ப்பான் உகந்தருளி***
***அறிவித்த வாறுஅடி யேனைஐ யாறன் அடிமைகளே***
***செறிவித்த வா,தொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழ்எனையே' (4.91.1)***

என்பது இப்பதிக முதற் பாடல். இதைப்போல் திருத்துருத்திப் பதிகம் (4.42) குறிப்பிடத்தக்கது. இதில் உள்ள ஒன்பது பாடல்களைத் 'தொண்டனேன் கண்ட வாறே' என்று கூறி முடிக்கிறார். ஒன்பதாம் பாடல் இறுதி அடி மட்டும் 'தொண்டர்கள் துணையினானைத் துருத்தி நான் கண்ட வாறே'(4.42.9) என்றுள்ளது. இதில் 'தொண்டர்களின் துணையாக உள்ளவன் இறைவன்' என்றவர், தம்மைத் சடம் (துருத்தி) என்று சொல்லி 'எதற்கும் பயனற்றவன்' என்கிறார்.

**ii) தொண்டருக்குத் தொண்டர்**

திருநாவுக்கரசரர் தம்மைத் தொண்டருக்குத் தொண்டராகக் கூறும் பாடல்கள் பல. அவற்றில் திருவாரூர் திருவிருத்தம் (4.102) ஒன்றை இங்கே

குறிப்பிடுவது போதுமானது, இப்பதிகப் பாடல் பத்தையும் 'தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே' என முடிக்கிறார்.

*'குலம்பலம் பாவரு குண்டர்முன் னேநமக்கு உண்டுகொலோ*
*அலம்பலம் பாவரு தண்புனல் ஆரூர் அவிர்சடையான்*
*சிலம்பலம் பாவரு சேவடி யான்திரு மூலத்தானம்*
*புலம்பலம் பாவரு தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. (4.102.1)*

என்பது முதற் பாடல். இப்பதிகம், தொண்டர்க்குப் தொண்டு செய்வதே புண்ணியம் என்கிறது.

**iii) தொண்டர்க்கு அடிமை**

இறைவனுக்கு அடிமையாக இருப்பதா? இறைத் தொண்டர்களுக்கு அடிமையாக இருப்பதா? என்னும் வினாவிற்குத் திருநாவுக்கரசர், 'இறைவனுக்கு அடிமையாக இருப்பதும் இறைத் தொண்டர்களுக்கு அடிமையாக இருப்பதும் ஒன்றே' என உறுதிசெய்கிறார்.

*'பொடியணி மெய்யர் போலும் பொங்குவெண் நூலர் போலும்*
*கடியதோர் விடையர் போலும் காமனைக் காய்வர் போலும்*
*வெடிபடு தலையர் போலும் வேட்கையால் பரவுந் தொண்டர்*
*அடிமையை அளப்பர் போலும் ஆவடு துறைய னாரே. (4.56.5)*

என்னும் இந்தப் பாடலில்,

> 'திருநீறு பூசிய உடலை உடையவர், பூணூலை அணிந்தவர், காளையின்மேல் அமர்ந்தவர், மன்மதனைக் கோபித்தவர், வெப்பத்தை உடைய தலை மாலை அணிந்தவர், விருப்பத்தோடு துதிக்கும் தொண்டர் அடிமையை ஆட்கொள்வர் ஆவடுதுறைப் பெருமான்'

என்கிறார். இதை உலகம் அறிய அப்பூதியடிகள், திருநாவுக்கரசரின் அடியாரானார் எனலாம்.

**iv)அடிமை**

திருநாவுக்கரசர் தம்மைச் 'சிவபெருமானின் அடிமை' என்பதில் மிகவும் மகிழ்ந்தார்.

*'சிந்தையைத் திகைப்பி யாதே செறிவுடை அடிமை செய்ய' (4.23.2:1)*
*'கண்டுநான் அடிமை செய்வான் கருதியே திரிகின்றேனே' (4.44.0:4)*
*'பழகநான் அடிமை செய்வேன் பசுபதீ பாவ நாசா' (4.49.7:1)*
*'காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக (4.76.4:1)*
*'வல்லையே இடர்தீர்த்துஇங்கு அடிமை கொண்ட' (6.3.10:2)*

என்பவை சில பாடல்கள். இவை 'இறைவன் அடிமை' எனும் இவர் விருப்பத்தைக் காட்டும்.

**v) அடியார் அடிமை ம**

திருநாவுக்கரசர் தன்னை அடியார்க்கு அடிமை என்னும் பாடல்களும் உள்ளன.

*'திரிப்புலியூர் உடையான் அடியார் அடியடி யோம்கட்கு அரியதுண்டே'* *(4.95.3:3,4)*

என்னும் இந்தப் பாடல் அடியில் 'அடியார் அடி அடியோம்' என்கிறார் திருநாவுக்கரசர்.

*'அடியார் அடிமை உகப்பார் போலும்*
*அணியாரூர்த் திருமூலத் தான னாரே.* *(6.1.9:4)*

என்ற இந்தப் பாடலில் அவர், 'அடியார் அடிமைப் பணியே இறைவனுக்கு உகப்பு' என்கிறார்.

**இ] தாச மார்க்க நித்திய ஒழுக்கப் பாடல்கள்**

வாசித்தல். பூசித்தல் மலர்க் கொய்தல், எப்போதும் அன்பு செய்தல், தொழுதல், உணர்ச்சி மேலிட்டு அழுதல் முதலிய தாச மார்க்கத்தார்க்குத் திருமூலர் குறிப்பிட்ட பணிகளை எல்லாம் தாம் செய்ததோடு பிற அடியார்களும் செய்ய வேண்டும் எனத் தம் பாடல்களில் திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார்.

*'தூபமுந் தீபங் காட்டித் தொழுமவர்க்கு அருள்கள் செய்து'* *(4.365:2)*

*'தொழுதுஎழுந்து ஆடிப் பாடித் தோத்திரம் பலவும் சொல்லி*
*அழும்அவர்க்கு அன்பர் போலும் ஆவடு துறைய னாரே.* *(4.56.4:3,4)*

*'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்*
*தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்*
*சூழ்த்த மாமலர் தூவி'* *(5.90.7:1–3)*

*'நறப்படுபூ மலர்தூபந் தீப நல்ல*
*நறும்சாந்தம் கொண்டுஏத்தி நாளும்'* *(6.30.5:3)*

என்னும் இத்தகைய பாடல்கள் எல்லாம் தாசமார்க்கத்தார் பின்பற்ற வேண்டிவையாகும்.

*'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமை யாக*
*வாய்மையே தூய்மையாக மனம்அணி இலிங்க மாக*
*நேயமே நெய்யும் பாலால் நிறையநீர் அமைய ஆட்டிப்*
*பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே* *(4.76.4)*

என்னும் பாடலில் தாம் செய்த வழிபாட்டுச் செயல்களையும் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பாடல் 'அகப் பூசையைச் சிறப்பாக விளக்குவது' என்கிறார் முத்து சு.மாணிக்கவாசகர். இவர் தொண்டை மண்டல ஆதீனம் 229ஆவது குருமகா

சந்நிதானமாத் திகழ்ந்தவர். இதனால் பூசை முறையில் இரண்டு பிரிவுகள் உள்ளதை அறியலாம் அவை அகப் பூசை, புறப்பூசை என்பன. இந்த இரு பூசை முறைகளையும் திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார்.

*'மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்புஎனும் வித்தை வித்திப்*
*பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்*
*தம்மையுள் நோக்கிக் கண்டு தகவுஎனும் வேலி யிட்டுச்*
*செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையு மன்றே.* *(4.76.2)*

என்ற இந்தப் பாடலில் 1. மெய் ஆகிய உழுதலைச் செய்தல். 2. விருப்பம் ஆகிய வித்தை விதைத்தல். 3. பொய்மை ஆகிய களையை நீக்கல். 4. பொறுமை ஆகிய நீரைப் பாய்ச்சல். 5. தம்மையும் நன்கு அறிதல் 6. தகவு ஆகிய வேலியிடல். 7. செம்மையுள் நிற்றல். 8. சிவன் அருள் விளைதல் என்பன எட்டு அகப் பூசைகள். இவற்றைக் கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு ஆகிய அட்டபுட்பமாகக் கூறுவர்.

*'எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி*
*மட்ட லரிடு வார்வினை மாயுமால்*
*கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ*
*ரட்ட னார்அடி சேருமு வருக்கே.* *(5.54.1)*

என்ற இந்தப் பாடலில் புறப் பூசைக்கு உரிய 'எட்டுவகைப் புதிய பூக்களான புன்னை, வெள் எருக்கு, சண்பகம், நந்தியாவட்டம், பாதிரி, குவளை, அலரி, செந்தாமரை ஆகியவற்றைத் தூவி வழிபடுபவர் வினைகள் மாய்ந்து கெடிலவீரட்டனார் சேவடி சேர்வர்' என்கிறார்.

பொதுப் பதிகத்தில் 1-10 எண்களைக் கூறும் பத்துப் பாடல்களும் ஆய்வுக்கு உரியன.

*'பத்துக்கொ லாம்அடி யார்செய்கை தானே'* *(4.186:4)*

என்னும் பத்தாம் பாடலின் இறுதி அடியில் சிவனடியார்க்கு உரிய பத்துச் செயல்களைத் (தசகாரியம்) திருநாவுக்கரசர் கூறுகிறார். அவை, 1. தத்துவரூபம், 2. தத்துவ தரிசனம். 3. தத்துவ சுத்தி, 4. ஆன்மரூபம், 5. ஆன்ம தரிசனம், 6. சிவரூபம், 7. சிவ தரிசனம், 8. சிவ பாசம் 9. சிவ யோகம், 10. சிவ போகம் (ஆன்ம லாபம்) என்பர் உரையாசிரியர்.

திருநாவுக்கரசர் தாசமார்க்கத்திற்கு உரியவற்றை எல்லாம் தாம் கடைப்பிடித்த முறையை வகைப்படுத்திக் காட்டினார். அவர் கூறிய அடியார் பணிச் சிறப்பை அனைவரும் நினைந்து நினைந்து போற்றி ஏற்றுப் பின்பற்றினால் இறையருள் இனிதே, இன்றே கிடைக்கும் என்பது உறுதி ஆகும்.

# வீரசைவ ஐம்பேராசான் வழிபாடு (வீரசைவ சமயத்தின் ஐந்தாசிரியர் வழிபாடு)

**முனைவர் அ. சிவபெருமான்,**
மேனாள் தமிழ்ப் பேராசிரியர், இந்நாள் இணைப்புப் பேராசிரியர்,
தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
முதல்வர், கச்சியப்பமுனிவர் தமிழியல் கல்லூரி, முசிறி
31சி, 3. கே.வி.எம்.நகர், செயங்கொண்ட சோழபுரம் அஞ்சல்,
அரியலூர் மாவட்டம்621802., தொடர்பு எண்: 9965680175

### முன்னுரை

"வீரசைவ சமயத்தின் ஐம்பேராசான்" என்னுந் தலைப்பிலானது இக்கட்டுரை. அடியேனுடைய தந்தையாரும் வீரசைவ ஞானியுமாகிய பேராசிரியர் திரு.அடிகளாசிரியர் அவர்களின் ஆசியோடும், அவர் என்னிடம் உணர்த்தியவாறும், அவரெழுதி வைத்திருந்த வீரசைவ வழிபாட்டுப் பாடல்களையும் போற்றிகளையும் முதன்மையாகக் கொண்டும் முறை பிறழாமல் இக்கட்டுரையை அரிதின் முயன்று எழுதியுள்ளேன். பழுத்த வீரசைவர்கள் இவ்ஐம்பெரும் மகான்களைத் தங்களது இல்லத்தில் நிகழவிருக்கும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் முறையாகக் கலசம் வைத்து வழிபடுதல் வேண்டும். அவ்வாறு வழிபடுதலுக்குரிய விதிகளை விரிவாக அறிவோம்.

### வீரசைவ சமயக் கருத்துகளையுடைய நூல்கள்

திருமந்திரம், திருவாசகம், வசவபுராணம், வீரசிங்காதனபுராணம், சடுத்தலம், நிட்டானுபூதி, அத்துவித வெண்பா முதலிய நூல்களும், நல்லாற்றூர் சிவப்பிரகாசர் அருளிய சித்தாந்த சிகாமணி, பிரபுலீங்க லீலை, சிவப்பிரகாச விகாசம் உள்ளிட்ட பல நூல்களும் வீரசைவ சமயக் கருத்துகளை உள்ளடக்கிய நூல்களாகும். இக்குறிப்பிட்ட நூல்களுள் வீரசிங்காதன புராணமும் சடுத்தலமும் இக்கட்டுரைக்குச் சான்று நூல்களாகும். இவ்விரண்டு சான்று நூல்களுள் வீரசிங்காதன புராணப் பதிப்பை இவ்விடத்தில் எடுத்துரைப்பது கட்டுரையாளரின் கடமையாகும். ஆதலால், முதற்கண் வீரசிங்காதன நூல் மற்றும் பதிப்புப் பணியை அறிவோம்.

### வீரசிங்காதன புராணம்

பெருமத்தூர் திருமடத்தைச் சேர்ந்த வேலைய சுவாமிகளாலும், கோட்டூர் உமாபாகத் தேவராலும் அருளிச் செய்யப்பெற்றநூல் வீரசிங்காதன புராணமாகும். "திருக்கயிலாயப் பரம்பரை மயிலம் பொம்மபுரம் ஸ்ரீசிவஞான பாலய தேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசான்யமடம் இராமலிங்க சுவாமிகள்" இந்நூலின் செய்யுளையும் வசனத்தையும் பதிப்பித்துள்ளார்கள். அப்பதிப்பிற்கு, சாரங்கதேவ தேசிகராதீனச்சீடர் திருநெல்வேலி சுந்தரலிங்கப் பண்டாரம்

அவர்கள் உதவி செய்துள்ளார்கள். அத்தகைய அப்பதிப்பானது சென்னையில் கலாரத்நாகர அச்சு இயந்திரச் சாலையில் விசுவாவசு வருடம் சிங்கரவி நாளில் (1906) பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

மேற்படி நூலை அடியேனுடைய தந்தையார் பேராசிரியர் திரு.அடிகளாசிரியரவர்கள் என்னிடம் வழங்கிப் படிக்குமாறும் பாதுகாக்குமாறும் பணித்தார்கள். ஏறத்தாழ 125 ஆண்டுகளுக்கு முன் (1906) அச்சிடப்பெற்ற அந்நூலை மயிலம் பொம்மபுர ஆதீனம் இருபதாம் பட்டத்து சுவாமிகள் தமது பொற்கரங்களால் பல இலட்சங்களைச் செலவு செய்து பதிப்பித்து வழங்கியுள்ளார்கள். அவ்வகையில் அந்நூல் கும்பகோணம் வீரசைவப் பெரியமடத்தின் குடமுழுக்கு நாளில் (12.2.2016) வெளியிடப் பெற்றுள்ளது. அந்நூலை அடியேனுடைய மாப்பிள்ளையும் மயிலம் திருமடத்துச் சீடருமாகிய திரு.சி.விசுவநாதன் அவர்கள் எனக்களித்து மகிழ்ந்தார்கள்;. ஆதலால் அடியேன் பழைய, புதிய பதிப்புகளை வைத்துக் கொண்டு ஆழமாகப் படித்து வருகின்றேன். விரைவில் "வீரசிங்காதன புராண வசனச் சுருக்கம்" என்னும் பெயரில் மயிலம்பொம்மபுர ஆதீனம் சார்பில் பதிப்பிக்க உளங்கொண்டுள்ளேன். இறையருளும் குருவருளும் கூட்டிவைக்க வேண்டும்.

கும்பகோணத்திலுள்ள திருக்குடந்தைப் பெரியமடம் என்கின்ற வீரசைவ ஆதீனத்தின் பெருமையைக் கூறுவது வீரசிங்காதன புராணமாகும். வீ-வித்தை; -அதைவிரும்பிக் கூடுதல்; சிங்க ஆதனம் - சிங்கம் தாங்குவதுபோல் அமைந்த பீடம். இதன் பொருளை அறிஞர் பெருமக்கள் பின்வருமாறு கூறுவர்.

"சிவஞானம் நிலவும் சிங்காதனமெனக் கூறுவர்; அது சிவஞான உபதேச தேசிகர் பீடம் அனைத்திற்கும் பொதுப் பெயராகும். இருப்பினும் பழைமையாதிய காரணம் பற்றிச் சிறப்புப் பெயராய் ஈண்டுக் குடந்தையிலுள்ள வீரசிங்காதனத்தைக் குறித்து நின்றது." கும்பகோணத்தில் அமைந்துள்ள வீரசைவப் பெரியமடம் சோழர் காலத்தில் வீரசைவத்தின் தலைமை நிறுவனமாக இருந்துள்ளது. இதற்கு ஒட்டக்கூத்தர் எழுதிய தக்கயாகப் பரணியில் இடம் பெற்றுள்ள "குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய மடந்தனில் வாழ்வீர மகேசுரர் வாழியே" அடிகளே சான்றாகும்.

தற்கால வீரசைவ சமுதாயத்தினர்களும் வீரசைவ இளைஞர்களும் வீரசைவ ஆதீனத்தின் பெருமைகளை அறிந்து கொள்வதற்காக மேற்கூறிய நிகழ்வுகளைக் குறிப்பிட்டுள்ளேன். அடுத்து, "வீரசைவ ஐம்பேராசான் வழிபாடு" என்னும் கட்டுரைக்குள் நுழைவோம்.

வீரசிங்காதன புராணத்தில் "மழையமல்லேச்சுரச் சருக்கத்தில்" வீரசைவ ஐம்பேராசான் பற்றிய குறிப்பு உள்ளது. திருக்கயிலாயமலையில் உமாதேவியார் சிவபெருமானை வணங்கிப் "பூவுலகில் அமர்ந்த பூர்வசாரியார் இயல்பைப் போதிக்குமாறு வேண்டினார்". அப்போது சிவபெருமானும் உமாதேவியை நோக்கி அருளத் தொடங்கினார்.

"கிரேதா யுகத்தில்" சதாசிவன், ஈசுரன், மகேசன், உருத்திரன் என்னும் நால்வரும், திரேதா யுகத்தில் ஏகாக்கன், துவிதாக்கன், பஞ்சாக்கன், சடாக்கன் என்னும் நால்வரும், துவாரா யுகத்தில் இரேணுகன், தாருகன், கோகன்னன், சங்குகன்னன் என்னும் நால்வரும், கலியுகத்தில் இரேவணசித்தன், மருளசித்தன், ஏகோராமையன், பண்டிதாரத்திரியன் என்னும் நால்வரும் வீரசைவ சமயப் பேராசான்கள் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், கலியுகத்தில் குறிக்கப்பெற்ற இரேவண சித்தன்;, மருளசித்தன், ஏகோராமையன்;, பண்டிதாராத்தியன்; ஆகிய நால்வரோடு நமது ஈசான முகத்தில் தோன்றிய அல்லமதேவரையும் சேர்த்து இக்கலியுகத்தில் வீரசைவ சமயத்தில் இந்த ஐவரே ஐம்பெரும் பேராசான்கள் (பஞ்சாசாரியார்) ஆவர். இக்குறிப்பை உணர்த்தும் வீரசிங்காதன புராணப் பாடல் வருமாறு.

*"நேசமார் சதாசி வாதி*
*நீண்டசந் ததியின் மேவும்*
*தேசர்சூ னியசிங் காத*
*னத்தராய்ச் சிறந்தார் பின்னர்ப்*
*பாசமில் நால்வ ரோடு,*
*பரமஅல் லமனைக் கூட்டி*
*ஆசிலா வீர சைவா*
*சாரியர் ஐவர் என்பர்" (மழைய மல்லேச்சுரச் சருக்கம், பாடல், 14)*

இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்து உணரின் கலியுகத்தில்,

1. *இரேவண சித்தர்*
2. *மருள சித்தர்*
3. *ஏகோராமையர்*
4. *பண்டிதாராத்திரியர்*
5. *அல்லம தேவர்*

ஆகிய ஐவரும் வீரசைவ சமயத்தின் ஐம்பெரும் பேராசான்கள் ஆவர்.

## ஐம்பெரும் பேராசான்களின் தோற்றம்

மேற்குறித்த ஐம்பெரும் பேராசான்களுள் பண்டிதாராத்திரியர் சத்தியோசாத முகத்தினின்றும், ஏகோராமையர் வாமதேவ முகத்தினின்றும், மருளசித்தர் அகோர முத்தினின்றும், இரேவண சித்தர் தற்புருட முகத்தினின்றும், அல்லமதேவர் ஈசான முகத்தினின்றும் தோன்றினர். இக்கருத்தினை வீரசைவ நூலாகிய சடுத்தலப் பாடல் (2) பின்வருமாறு குறித்துள்ளது.

*"தற்பரன்ஆ னனம்ஐந்தாம் ஈசான மாதி*
*சத்தியோ சாதாந்தத்தில் தனிற்பரம குரவர்*
*உற்பவம்ஆ ராத்திரிநற் சத்தியோ சாதத்து*
*உயர்வாமத் தேகோரா மயராகு மகோரத்து*
*அற்புதமாம் அவதூதர் இரேவணசித் தயர்தாம்*
*அகலாத தற்புருடத் தீசான வதனத்து*

*ஒப்பரிய அல்லாமாப் பிரபுவெனுந் தேவர்*
*ஒழியாமும் மலம்உயிருக் கொழித்தருள்தந் திடவே”*

மேலும், சடுத்தலம் என்னும் மேற்குறித்த நூல் சத்தியோ சாதம் முதலிய ஐந்து முகங்களுக்கு உரிய திசைகளையும் நிறத்தினையும் பின்வரும் பாடலால் (11) குறித்துள்ளது.

*ஈசானம் படிகம்நடு; கிழக்க தாகும்*
*இலங்கியகுங் குமநிறந்தற் புருட மென்பர்;;*
*தேசாகும் அகோரநிறம் கருமை தென்பால்;*
*திகழ்வாமம் உத்தரம்நற் செம்மை யாகும்;*
*நேசாரும் குடதிசையே யாகும் வெண்மை*
*நிகழ்சத்தி யோசாதம் நிகழா தோங்கு*
*மாசாரும் மலமகல யாவுந் தாங்கும்*
*வளரொளிசேர் அதோமுகமிங் வாற தாமே”.*

மேற்குறித்த பாடல்படி சொல்லப்பெற்ற கருத்துகளின் விளக்கம் பின்வருமாறு

1. நடுவில் ஈசான முகத்திற்குரிய அல்லமதேவர்.
2. கிழக்குத் திசையில் தத்புருட முகத்திற்குரிய இரேவணசித்தர்
3. தெற்குத்திசையில் அகோர முகத்திற்குரிய அவதூதர் என்னும் மருளசித்தர்.
4. வடக்குத் திசையில் வாமதேவ முகத்திற்குரிய ஏகோராமர்
5. மேற்குத்திசையில் சத்தியோசாத முகத்திற்குரிய பண்டிதாராத்திரியர்

**[சுருக்க விளக்கம்]**

1. நடுவு - ஈசானம் - அல்லம தேவர் - படிகம்
2. கிழக்கு - தத்புருடம் - இரேவணசித்தர் - குங்குமம்
3. தெற்கு - அகோரம் - மருளசித்தர் - கருமை
4. வடக்கு - வாமதேவம் - ஏகோராமர்; - செம்மை
5. மேற்கு - சத்தியோசாதம் - பண்டிததாராத்திரியார் - வெண்மை

**கலச வழிபாட்டின் செயல்முறை**

மண்டபம் அல்லது வீட்டின் நடுவே நெல்லைப் பரப்பி அதன்மேல் ஐந்து வாழையிலைகளை முறையே நடு, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்னும் திசைகளில் வைக்கவும். இவ்வாறு இலைகளை வைத்த பிறகு அவற்றின்மேல் அரிசியைப் பரப்பி நூல் சுற்றிய நீர்நிரம்பிய ஐந்து கலசங்களை வைக்கவும். கலசங்களுக்கு மாந்தளிர், தேங்காய், கூர்ச்சம் வைத்து அதன்பின் பழம், வெற்றிலைப்பாக்கு, பட்டாடை, மலர்மாலை அணிவித்து வழிபாட்டைத் தொடங்கவும். கலச வழிபாட்டை நிகழ்த்துவோர் முதலில் ஆன்மார்த்த வழிபாட்டை முடித்துக் கொண்டு தக்க ஆசனத்தில் அமர்ந்து உரியவர்களை உட்கார வைத்து ஒவ்வொரு கலசத்தினையும் இக்கட்டுரையில் கூறியுள்ளவாறு முறைப்படி வழிபாட்டைத் தொடங்கி நிகழ்த்த வேண்டும். **தொடரும்....**

# வீரசைவமும் வைணவமும்

புலவர் வி.ச. சந்தானம் பி.லிட்
மேலாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம், மயிலம்.

*சென்ற மலரில் (பாலசித்தர் இதழில்) வேதங்களின் பெருமையையும், அவைகளின் நான்கு வகைகள் பற்றியும் கண்டோம். மிகப் பழமையான வேதம் ரிக் வேதமாகும்.*

**ரிக்வேதம்**

*இவ்வேதம் ஆன்மா, பரமாத்மா, பூலோகம், மேல் லோகம் ஆகியவற்றைப் பற்றியும், கடவுளை அடைந்து முக்தியடைவது பற்றியும் மிகுதியாக உணர்த்துகிறது. வேதகால மொழியான சமஸ்கிருத மொழியில் 1017 சுலோகங்களை உடையது ரிக்வேதமாகும். இது பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.*

**முதல் மண்டலம்**

*பல ரிஷிமகான்களால் சொல்லப்பட்டவை 191 சூக்தங்கள், பெரும்பாலான சுலோகங்கள் (தோத்திரங்கள்) கடவுளைப் போற்றும் விதமாக அமைந்துள்ளன. அக்னி விஸ்வே தேவர்கள், இந்திரன், வாயு, வருணன், அஸ்வினி தேவர்கள், சரஸ்வதி, விஷ்ணு ருத்திரன் எனப்படும் சுவாமிகளின் பெருமைகளைப் பற்றிய புகழ் மாலைகள் இவ்வேதத்தின் முதல் மண்டலத்தில் அறியலாம்.*

**இரண்டாவது மண்டலம்**

*இம்மண்டலத்தில் தேவதைகளின் புகழ், மக்களிடையே உள்ள துக்கத்தை நீக்கி வாழவைக்கும் மந்திரங்கள் ஆகியன உள்ளன*

**மூன்றாம் மண்டலம்**

*பெரும்பாலும் விஸ்வாமித்ர முனிவராலும் அவரது கோத்திரத்தில் பிறந்த பல மகான்களாலும் (ரிஷிகளாலும்) கண்டுபிடிக்கப்பட்ட சூக்தங்கள் இம்மண்டலத்தில் காணப்படுகின்றன. சரஸ்வதி, சிந்து போன்ற நதிகளின் பெருமைகள் பேசப்படுகின்றன. மேலும் மகாவிஷ்ணுவின் பெருமையும், மகா காயத்ரி மந்திரமும், நம் பாரததேசத்து மக்களின் வாழ்க்கை முறையும், குறிப்புகளும் கிடைக்கப்பெறுகிறது.*

**நான்காவது மண்டலம்**

*இம்மண்டலத்தில் விவசாயிகளின் பெருமைகள், கலப்பையின் தேவதையான சீதாதேவியின் பெருமை (ஜனகரின் வயலில் கலப்பை கொண்டு உழும்போது கிடைத்த பெட்டியில் ஸ்ரீ சீதாதேவி அவதரித்தார் என்பது) பசுக்களின் பெருமை ஆகியன பேசப்படுகின்றன.*

**ஐந்தாவது மண்டலம்**

இம்மண்டலத்தில் ஆதித்யன் எனப்படும் சூரியன், அக்னி, தேவர்களின் தலைவன் இந்திரன் ஆகிய தேவர்களின் புகழ் கூறப்படுகிறது. ராதஸ் என்ற பெண்ணைப் பற்றியும், தயிர், வெண்ணெய் போன்ற பால் பொருட்கள் பற்றியும் சிறப்பாகக் கூறப்படுகிறது.

**ஆறாவது மண்டலம்**

இம்மண்டலத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் உதித்த ரிஷிகளால் இயற்றப்பட்ட ஐந்து சூக்தங்கள் காணப்படுகின்றன. அக்னி, இந்திரன், விஷ்ணு போற்றப்படுகின்றனர். இந்திரனுக்குத் ததிசீ என்ற முனிவர் தனது முதுகெலும்பையே ஆயுதமாகக் கொடுத்த வரலாறு காணப்படுகிறது.

**ஏழாவது மண்டலம்**

ஏழாவது மண்டலத்தில் உருத்திரன், விஷ்ணு, அக்னி, இந்திரன் ஆகியவர்களைப் பற்றிய புகழ் பறைசாற்றப்படுகிறது. இவைகள் அருமையான கவிதைகளாகும். மழை வேண்டி தேவதையைப் போற்றும் பர்ஜன்னியன் என்ற பாடலும் இம்மண்டலத்தில் காணப்பெறுகிறது. யாவரையும் துலங்கச் செய்யும் மந்திரமும் இம்மண்டலத்தில் சொல்லப்படுகிறது.

**எட்டாவது மண்டலம்**

வைவஸ்தவ மனு, விரூப ஆங்கீரசர், ப்ருகுவின் மகனான ஜமதக்னி முனிவர், கண்வ கோத்திரத்தில் அவதரித்த ரிஷிகள், ஆகியவர்களால் பாடப்பட்ட கவிதைகள் கிடைத்துள்ளன. சிந்து, அஸிக்னி போன்ற நதிகளின் பெருமைகள் பற்றியும் இந்திரன், அக்னி, விஷ்ணு ஆகியவர்களைப் போற்றியும் சப்த (ஏழு) சிந்துக்களின் குறிப்பும் இம்மண்டலத்தில் கிடைத்துள்ளன.

**ஒன்பதாவது மண்டலம்**

இதில்தான் நமக்கெல்லாம் அதிகம் பழக்கப்பட்ட சோமபானம் குறித்த குறிப்புகள் உள்ளன. இதில் சோமன் என்ற தேவதையின் புகழ் விரித்துரைக்கப் பட்டுள்ளது.

**பத்தாவது மண்டலம்**

இதில் பல மகான்களின் பாடல்கள் அதிகம் உள்ளன. இது தவிர இந்திரனின் மருமகளும் வசுகரின் மனைவியுமான ஒரு பெண்ணும், ஊர்வசி, இந்திரனுக்குத் ததிசீ பார்க்கும், சரமா என்ற பெண் ஆகியோர் பாடிய பாடல்கள் தொகுக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளன. இதில் இராமாவதாரத்தின் குறிப்பும், கிருஷ்ணாவதாரத்தின் குறிப்பும் காணப்படுகின்றன. நதிகளின் பெருமையும், இந்திரன் பாடிய சூக்தங்களும், புருஷசுக்தம், நாஸதீய சுக்தம் போன்ற வேதாந்த விஷயங்கள் ஆகியன காணப்படுகிறது. மேலும் ஊர்வசியும், புரூர சக்ரவர்த்தியும் பேசிக்கொண்ட உரையாடல் குறித்த கவிதைகள் அழகாக சித்தரிக்கப்

பட்டுள்ளன. மேற்கண்டவாறு பலவிதமான செய்திகள் அழகான கவிதை வடிவத்தில் சொல்லப்பட்டுள்ளன.

**யஜுர் வேதம்**

இரண்டாவதாக உள்ள சிறப்பு பெற்ற வேதம் யஜுர் வேதம் எனச் சொல்லப்படுகிறது. வேதங்களுள் மிக முக்கியமானது யஜுர் வேதமே. யக்ஞரூபமான தர்மங்களையே யஜுர்வேதம் விளக்குகிறது. யக்ஞத்திற்கு அங்கங்களாக ரிக்வேதமும், சாமவேதமும் விளங்குகின்றன. இவ்வேதம் சுக்ல யஜுர்வேதம் என்றும் கிருஷ்ண யஜுர்வேதம் என்றும் இரு பிரிவுகளாக உள்ளன, சுக்ல யஜுர் வேதம் ரிஷிகள், சந்தஸ், தேவதைகள் ஆகியோர்களால் அறிவிக்கப்பட்டு தெளிவாக உள்ளது. ஆனால் கிருஷ்ண யஜுர் வேதத்தில் தெளிவாக அறிவிக்கப்படாத வேதமாக அத்யயனம் செய்யப்படுகிறது. (அத்யயனம் = மனப்பாடம்) சுக்ல யஜுர் வேதம் யக்ஞயவல்ய முனிவரால் தோற்றுவிக்கப்பட்டது. சூரிய பகவானிடமிருந்து அவர் சுற்றும் வேகத்திலேயே சென்று நேரடியாகக் கற்றுக்கொண்டார் எனச் சொல்லப்படுகிறது. இவ்வேதம் பதினைந்து சாகைகள் கொண்டது. (சாகை - உட்பிரிவு)

மிகவும் புகழ்மிக்க ஈசாவாஸ்யம், பிரகதாரண்யம் ஆகிய உபநிடதங்கள் யஜுர் வேதத்திற்கு உரியன. பிரகதாரண்ய உபநிடதமே எல்லா உபநிடதத்திலும் பெரியது. அதுவே செம்மையானது.

கிருஷ்ண யஜுர் வேதம் அதிக உரைநடை விளக்கங்களையும் விரிவான நடைமுறை அறிவுரைகளையும் கொண்டது. நான்கு சாகைகளாகப் (உட்பிரிவுகளாக) பிரிக்கப்பட்டுள்ளன.

**சாமவேதம்**

இது ஏறத்தாழ ஆயிரம் சாகைகள் (உட்பிரிவுகள்) கொண்டது. புனிதத் தன்மையில் இவ்வேதம் ரிக்வேதத்திற்கு அடுத்தபடியாக உள்ளது. இதில் ஜைமினி சாகை, கௌதம சாகை, ஆகிய இரண்டும் வழக்கத்தில் உள்ளன. சாமவேத சமஹிதா 1875 மந்திரங்களைக் கொண்டது. இவற்றை வசிட்டர், காஸ்யபர், வாமதேவர், ஸௌபரி, விஸ்வாமித்திரர், சப்தரிஷிகள், ஆங்கீரசர், உள்ளிட்ட பல ரிஷிகள் வடிவமைத்துள்ளனர். இம்மந்திரங்கள் வாயிலாக அக்னி, இந்திரன், பூஷா, விஸ்வே தேவர்கள், மிருத்துகள், சோமன், உருத்திரன், விஷ்ணு முதலியவர்களின் புகழ் பாடப்படுகிறது. வராக அவதாரம், திரிவிக்ரம் அவதாரம், விஷ்ணு சுக்தம், புருஷ சுக்தம் ஆகியவற்றின் புகழைக் கானத்துடன் (இசையுடன்) பாடப்படுகிறது. சாமவேதத்தில் பெரும்பாலும் ரிக்வேத மந்திரங்களே உள்ளன. ரிக்வேதத்திற்கும் சாமவேதத்திற்கும் இசையால் தான் வேறுபாடு ஏற்படுகிறது.

**குறிப்பு**

உலகில் உள்ள சங்கீதங்கள் அனைத்திற்கும் சாமவேதமே அடிப்படையாக விளங்குகிறது.

PRGI No.TNTAM/25/A4155

**அதர்வண வேதம்**

இது பிரம்மவேதம் எனவும் வழங்கப்பெறும், இருபது காண்டங்களை உடையது. நூலீற்றுக்கணக்கான சூக்தங்கள் உள்ளன. 5977 மந்திரங்களை உடையது. அதர்வா, சிந்து, திவீபர், சாதனர், சந்தாதி, வசிட்டர், சௌனகர், சுக்ரர், பரத்வாஜர், கன்வர், விஸ்வாமித்திரர், ரிபு முதலிய ரிஷிகளால் அடையாளம் காணப்பட்டு இவ்வேதம் தோற்றுவிக்கப்பட்டது.

இந்திரன், அக்னி, சோமன், அஸ்வினி குமாரர்கள், பூஷா, விஷ்ணு, ருத்ரன், வாசஸ்பதி, பிரகஸ்பதி, சூரியன், பிரஜாபதி ஆகிய தேவர்களை இவ்வேதம் போற்றுகிறது. மக்களுக்கு என்ன வேண்டும்?. ஏது வேண்டும் என்ற பிரார்த்தனையை முன் வைத்துதான் இவ்வேதம் சொல்லப்படுகிறது. ஏவல், பில்லி, சூன்யம் முதலியவற்றை நீக்கக்கூடிய மந்திரங்கள் இவ்வேதத்தில் உள்ளன. நோய்கள் தீர்க்கவும், மழை பொழிவிக்கவும், வெற்றியை அடையவும், சிறுநீரகக் கோளாறால் அவதிப்படுவோரின் துயரைத் தீர்க்கவும், இருதய நோய் தீரவும், பலவித நோய்கள் தீரவும் ஏற்ற மந்திரங்கள் இதில் உள்ளன. மணி, மந்திரம், மருந்து ஆகியவைகளைப் பற்றிய அறியதகவல்கள் இந்த வேதத்தில் இடம்பெறுவதால், நமக்கு ஒரு புதையல் போலவும், வைரச் சுரங்கம் போலவும் பயன்படுகிறது. மருந்துகள் தயாரித்தல், அஸ்திரங்கள் தயாரித்தல், அவற்றை உபயோகிக்கும் முறைகள் இவ்வேதத்தில் காணப்படுகிறது. கட்டடக் கலை பற்றியும் இவ்வேதத்தின் உபவேதமான சில்ப வேதத்தின் மூலம் கற்றுக்கொள்ளலாம், நான்கு வேதங்களிலும் யாகங்களுக்குச் சிறப்பிடம் உண்டு. யாகங்கள் தவறாமல் நடத்தப்படின் மழை பொழியும், பயிர்கள் செழிக்கும், மக்கள் நல்லோர்களாக இருப்பர் என்பது வழி வழியான நம்பிக்கையாகும்.

**உபநிடதங்கள்**

நான்கு வேதங்களுக்கு அடுத்தபடியாக இருப்பது உபநிஷத்துக்கள் எனப்படும் உபநிடதங்களாகும். வேதத்தில் முடிவு அல்லது வேதத்தின் சாரம் உபநிஷத்துக்கள் ஆகும். வேதாந்தம் என்பதன் மறுபெயர் உபநிஷத்து எனப்படும்.

உபநிஷத் என்றால் சிரத்தையுடன் அருகில் இருத்தல் என்பது பொருள். குருவிற்கு அருகே இருந்து பணிவிடை செய்து உபதேசம் பெறுவதே உபநிஷத்துக்கள் ஆகும். இம்முறை சைவம், வீரசைவம், வைணவசமயம் ஆகியவற்றில் உண்டு. ஆனால் எளியமுறையில் குருவினிடம் சீடர் உபதேசம் பெறுவது வீரசைவசமயச் சிறப்பாகும். அதே போல வழிபாட்டிலும் எளியமுறையைக் கடைபிடித்து பரப்பிரம்மத்தை (சிவனை) அடைவதற்கு வீரசைவ நெறிமட்டுமே சாலச்சிறந்தது.

நல்லாற்றூர் சிவப்பிரகாசரின் தந்தை சிவபெருமானின் பக்தர். அவர் எங்கு சென்றாலும் பூசைப் பொருட்கள் அடங்கியதும், பரமனை எழுந்தருளச் செய்தலுமான பூசைப் பெட்டியை எடுத்துச் செல்வார். உடன் அவரது

சீடர்களும் செல்வார்கள். ஒரு சமயம் திருவண்ணாமலை செல்லும் போது பூசைப்பெட்டியை எடுத்துச் செல்லாமல் மறந்து கால்நடையாகவே திருவண்ணாமலை சென்றுவிட்டார். அங்கு சென்றபின் தான் தாம் பூசை செய்யும் பெட்டியை காஞ்சிபுரத்தில் தமது இல்லத்தில் வைத்துவிட்டு வந்ததை அறிந்தார். மிகவும் வருத்தமுற்றார்.

யாரையும் குறை சொல்ல இயலாத நிலை. மேலும் காஞ்சிபுரம் நடந்து சென்றுவர நீண்ட நாட்கள் ஆகிவிடுமே! பூசைகளை எப்படிச்செய்வது என மனம் தத்தளித்தார். அன்றிரவு அவரது கனவில் சிவபெருமான் தோன்றி ஏன் கவலைப்படுகிறாய்? ஆத்மலிங்கத்தை கழுத்தில் அணிந்து கொள்! எங்குச் சென்றாலும் எப்போது சென்றாலும் இட்டலிங்கப் பூசையை ஆத்மார்த்த பூசையைச் செய்ய முடியும் என்றார். மனம் தெளிந்து கழுத்தில் இட்டலிங்கத்தை அணிந்து தொடர்ந்து சிவபூசையைச் செய்து வந்தாராம். இச்செய்தி மூலம் அறிவது என்னவெனில் சிலை வழிபாடு செய்வதைவிட இட்டலிங்கப்பூசை என்னும் எளிய பூசையைச் வீரசைவ சமயத்தில் கடைப்பிடிப்பதை இன்றும் காணலாம். எளிய வழியில் இறைவனை அடையும்முறை வீரசைவத்தில் விளக்கப்படுகிறது. அடுத்த இதழில் மிக முக்கிய பத்து உபநிடதங்களைப் பற்றியும், புராணங்கள் பற்றியும் காணலாம்.

தொடரும்....

## சிவஞான பாலய தேசிகர் திருவெழுகூற்றிருக்கை
## மயிலம் பொம்மபுர ஆதீனப் புலவர் முனைவர் ஆ. சிவலிங்கனார் அவர்களால் 16.01.2002 அன்று இயற்றப்பட்டது

ஒருபரம் பொருளே! உயர்சங்கு கன்ன!
ஒருகடல் மீதுஇரு குண்டலக் காதினை,
ஒருகல் லாடையை ஓர்இட்ட லிங்கத்தை,
உருத்தி ராக்கம் நீற்றுப்பை யிரண்டினை,
முக்குறி நீறமை மெய்யினை இருவிழி
யருளினை ஒருகோ லினையாய் வந்தனை;
பால வடிவொன் றால்பலசித் தியற்றி
இருசொலால் அமைந்த மூவுல கேத்தும்
அறமுதல் நான்குடன் முந்நீர் உலகில்
இருமைப் பயன்தரும் ஒருபெயர் அமைந்தனை;
கருவொழி பச்சைக் கந்த முனிவரின்
ஒருமரபு வந்த ஒண்டொடி அம்மவை
இருகரம் கூப்பி முப்பொழு திலும்நால்
பட்டைக் கள்ளிப் பால்தரச் சேடம்
இட்டவர் ஐம்புலன் இன்புற மகவாய்
வந்தனை நால்வர்க்கு அறந்தனை உணர்த்திய

முப்பொருள் உண்மை முருகனாய் நீயே
செப்பிக் கொண்டனை இருவராய் ஒன்றினை;
புகழ்ப்பெரும் பொம்ம புரமும் ஒருமன
இருவர் மணந்த செவ்வேள் உவந்த
முத்தமிழ் வளரும் நால்நில மாணவர்
ஐங்குறு நூறும் அறுபடை வீடும்
பயிலும் மயில மாமலைப் பதிபும்
பயிலும் இடமாக் கொண்டனை நன்றே;
ஐந்து கரமும் நால்வர்க்கு ஆக்கிய
மும்மதக் கரிமுகத்து இருபொருள் எதிர்நிலை
எய்தும் விக்கின விநாயகன் போல
எய்தாச் சிவஞானம் ஒன்றே யருளும்
சிவஞா னிப்பேர்ச் செல்வன் ஆயினை;
ஒன்றே காஞ்சியில் இறந்தவன் கடுவிடம் போக்கினை;
இரண்டே காஞ்சிநா டாண்ட நவாபு மனைவியின்
பாஞ்ச சூலை பறந்திடச் செய்தனை;
மூன்றே செய்யூர்ச் சேர்ந்தார் சேர்ந்த மணலை
மெய்யாய்ச் சருக்கரை வியக்கச் செய்தனை;
நான்கே மதுரைச் தையல் நாயகன் நாயகி
முதுமை நீங்கி மகப்பெறச் செய்தனை;
ஐந்தே திரியம் பகனின் மகள்நரை தீர்த்தனை;
ஆறே மாந்த ரீகனை மறிகடற் சுறாவாய்
ஏந்துமண கரையில் உமிழ்ந்திடச் செய்தனை;
ஏழே தவப்பெரு முனிவன் சிவப்பிர காசனை
உவப்புடன் சீடனா உயர்த்திக் கொண்டனை
இனும்பல சித்து செய்து சிறந்தனை
அறுவகை இலிங்கமும் ஐந்தெ ழுத்தும்
நால்வகை நெறிகளும் முப்பொருள் உண்மையும்
இருவகைத் தலங்களும் எல்லாம் ஒருபரம்
பொருள் எனும் இலிங்க விவரமாம் என்னும்
திருவுறும் வீர சைவம் திகழச்
செய்வான் வேண்டி இந்நாள் வரையும்
எய்திய மேனி எண்ணுப்பத் தொன்பதாய்
எடுத்துக் கொண்டனை; என்பன வாக
ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தா றேழென
நின்றிடும் ஏறு முகமாப் பின்னர்
ஆறைந்து நான்மூன் றிரண்டொன் றென்ன
இறங்கு முகமாக் கூறிய வெலாம்உனை
அடுத்துத் தெரிந்தோர் ஐக்கியம் உறுநெறி
அடைவர் ஆதலின் அடியனும்
அடைந்தனன் நின்னடி ஆ.சிவ லிங்கனே

# உயிர்க்குத் தாய்ப் பால் ! உணர்வுக்குத் தாய்மொழி !

**புலவர் அருணா பொன்னுசாமி**

24/7, அண்ணாநகர், கரூர் 639 002. பேசி 9500926939

ஒருவரின் தாய்மொழி என்பது தாயிடம் பெற்ற உயிருடன், பாலுடன் இணைந்தது. சிந்திக்கவும், பிறருடன் பேசவும் கிடைத்த தகவல் தொடர்புக் கருவி. தன்னியல்பாகப் பயின்று, பத்து வயது வரை, எந்த மொழியை ஒருவன் பேசுகின்றானோ. அதுவே அவனது தாய்மொழி. ஒருவன் சிந்திக்கவும், மற்றவருடன் உறவாடவும் உதவுவது தாய்மொழியே, பலப்பல மொழிகளைக் கற்ற ஒருவனும், சிந்திப்பதும், கனவு காண்பதும், அறிவு வளர்ச்சிபெற உதவுவதும் அவரவர் தாய்மொழியே என்பது தான் மொழிநூல் அறிஞர்களின் முடிந்த முடிவு. தாய்மொழியின் சிறப்பிற்குத் தத்துவ ஞானி ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு விசித்திர நிகழ்ச்சி. மனித மூளையில் பதிவாகியுள்ள தாய்மொழியின் அபூர்வ ஆற்றலுக்கு ஒரு சான்று. அன்னிபெசன்ட் அம்மையார் அவர்களால் சிறுவயதிலேயே அவர் தத்தெடுக்கப்பட்டு ஐரோப்பாவில் வளர்க்கப்பட்டார். தத்துவ ஞானி ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பிறந்த ஊர் ஆந்திராவிலுள்ள மதனப் பள்ளி. அவர் சிறு வயதிலேயே ஆங்கிலம் பயின்று, ஆங்கிலேயர் வாழ்க்கை முறையிலேயே வளர்ந்தவர். அவருக்கு ஆங்கில மொழியில் மட்டுமே பேசவும், எழுதவும், பிறருடன் உறவாடவும் கற்றவர். ஒருமுறை அவருக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டார். ஜன்னி கண்டு மயக்கமுற்ற நிலையில், அவரது தாய்மொழியாகிய தெலுங்கு மொழியில் புலம்பியுள்ளார். உண்மையில் இதுவரை அவர் தாய்மொழியாகிய தெலுங்கில் யாரிடமும் பேசியது இல்லை. அருகிலுள்ளவர்களுக்கு அவர் புலம்புகின்ற மொழி புரியவில்லை. குழப்பமடைந்தனர். குழந்தை பருவ மூளைப் பதிவு, உணர்ச்சிபூர்வமான ஒரு தருணத்தில் இப்போது தெலுங்கை வெளிப்படுத்தியுள்ளது. இதுதான் தாய்மொழியின் ஆற்றல். இதைக்கண்டு அருகிலுள்ளவர்கள் வியந்தனர். மகிழ்ந்தனர். தாய்மொழியின் தன்னேரில்லா ஆற்றலை உணர்ந்தனர்.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் புகழ் வாய்ந்த மொழியியல் நூலை எழுதிய இராபர்ட் கால்டுவெல்தான், முதன்முதலில் 'தமிழ்' என்கிற பெயர் தோன்றிய காரணத்தைப் பொதுவெளியில் முன்வைத்து ஆய்வு தொடங்கியவர். அவர் 'திராவி என்கிற சொல்லே தமிழானது என்ற வாதத்தை முன்வைத்தவர். அக்கருத்துத் தவறானது என்றும் 'தமிழ்' என்ற சொல்லிற்கான திசைச் சொல்லே திராவிடம் என்னும் தேவநேயப் பாவாணர் தொடங்கிப் பல மொழியியல் அறிஞர்களின் சான்றுகளுடன் நிறுவினார். **“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”** என்ற தொல்காப்பிய விதி, பழந்தமிழ்ப் பெயர்கட்கும் பொருந்தும். தமிழ் என்பதற்கு **“இனிமை, நீர்மை எனும்** பொருள்களைத் தரும். **“இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்.”**

என்பது பிங்கல நிகண்டு. தம்+ஆய்-தாய். தம்+அப்பன் தமப்பன் என்பது தகப்பனானது என்பார் சிலர். மொழிதல் என்றால், உரைத்தல், பேசுதல் என்று பொருள். அவ்வகையில் நம்மொழிக்கு இட்ட பெயர் தமிழ் என்பது ஒரு சாரார் கருத்து. தம்+இல் (குடி) என்பது தமில் என்பதே தமிழானது என்றும் ; அமிழ்து (தாய்ப்பால்) என்கிற சொல்லை இடைவிடாமல் தொடர்ச்சியாகச் சொல்லிப் பாருங்கள் தமிழ், தமிழ் என்கிற ஓசை வரும் என்கிறார் முதுபெரும் தமிழறிஞர் இரா.இளங்குமரன் அவர்கள்.

மொழியியல் வரலாறு, பண்பாடு, மொழி மனிதர்களிடம் மனதளவில் ஏற்படுத்தும் தாக்கம், மொழியியல் சார்ந்து உலகில், ஒவ்வொரு மொழியிலும் இதுவரை எண்ணற்ற நூல்கள் வந்துள்ளன. தமிழிலும், ஆங்கிலத்திலும் தமிழ் பற்றி நிரம்ப நூல்கள் உள்ளன. சான்றாகச் சில, 1) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - இராபர்ட் டி- கால்டுவேல். 2) திராவிடச் சான்று, எல்லீசும் திராவிட மொழிகளும் - தாமஸ் டிரவுட்மன். 3) தமிழ்மொழி வரலாறு - தெ.பொ.மீனாட்சி சுந்தரனார். 4) மொழியாகிய தமிழ், காலனியும் நிகழ்த்திய உரையாடல்கள் - ந.கோவிந்தராசன் 5) நோம் சோம்ஸ்கி, நவீன மொழியியலுக்கு ஓர் அறிமுகம் - கி.அரங்கன் 6) மொழி வரலாறு - தமிழறிஞர் மு.வரதராசன் இவ்வாறாக ஏராளமான நூல்கள் வந்துள்ளன. படைப்பாளர்களும் நூல்களும் ஒரு மொழியின் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் ஊன்றுகோல்.

நம்முன்னோர்கள் தங்களது பண்பாட்டையும் வரலாற்றையும் காத்திடவில்லை. போற்றிடவில்லை. ஆனால் மொழியை நம்முன்னோர்கள் பாறைகள், தூண்கள், கோயில் சுவர்கள், செப்புத் தகடுகள் தொடங்கி கற்கள், பானை, ஓலை, நாணயங்கள், மண்பாண்டங்கள் போன்றவற்றிலும் எழுத்துருக்களை வடித்து நமக்குத் காத்துத் தந்துள்ளனர். உலகிலேயே தமிழில் கண்டெடுக்கப்பெற்ற கல்வெட்டுகள் மிகுதி. கிட்டத்தட்ட 20,000 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

உலகிலுள்ள மொழிகள் 2796. இந்தியாவில் உள்ள மொழிகள் 1652. இதில் அடையாளம் காணப்பட்ட மொழிகள் 270. இதில் அரசு அங்கீகாரம் பெற்ற மொழிகள் 22. ரூபாய் தாள்களில் இந்த மொழி வரிசையில் அகர முறைப்படி எழுதியதால் தமிழ் 20- ஆம் இடத்தில் உள்ளது. முதன்மை, இலக்கிய இலக்கண செழுமை கருதி முதலில் இருக்கவேண்டிய மொழி.

1971 - 2011 வரையிலான காலத்தில் இந்தி மொழி 161 சதவிகித வளர்ச்சி பெற்றுள்ள நிலையில் தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகள் 81 சதவிகித வளர்ச்சியை மட்டுமே கண்டுள்ளது. இன்று இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் வேகமாக வளர்ந்துவரும் மொழியாக ஆங்கிலம் உள்ளது.

இந்தியர்களில் 96.71 சதவிகிதத்தினர் மட்டுமே, இந்தியாவில் உள்ள 1652 மொழிகளில் 121 மொழிகளை மட்டுமே தாய்மொழியாகக் கொண்டவர்கள். கடந்த 50 ஆண்டுகளில் 220 க்கும் அதிகமான மொழிகள் அழிந்துள்ளன. தற்போது மீதமுள்ள மொழிகளில் 42 மொழிகள் அழியும் நிலையில் உள்ளன என்று மொழிகளை ஆய்ந்து ஆவணப்படுத்தும் பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ளது. ஒரு மொழி அழியாமல் காத்திடும் பொறுப்பும் கடமையும்

*ஆற்றலும் கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகிய படைப்பாளிகளிடம் மட்டுமே உள்ளன. ஒரு நூலில் தோன்றி அதன் வாசகர்கள் உள்ள மட்டும் அந்நூலாசிரியன் உயிருடன் இருப்பதாக ஏற்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 3000 ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியமும், 2000 ஆண்டுகட்கு முற்பட்ட திருக்குறளும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இன்ன பிற சங்க இலக்கியங்களும் தமிழுக்கென தனித்த கல்லூரி கண்ட மயிலம் பொம்மபுர ஆதீனம், திருவையாறு அரசர் கல்லூரியில் தவத்திரு. எஸ். ஞானியார் அடிகளார் அவர்களாலும், திருப்பனந்தாள், பேரூர் போன்ற ஆதீனங்களினாலும் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம், அண்ணாமலை அரசர், பச்சையப்ப வள்ளல், காரைக்குடி அழகப்பா, மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றாலும் தமிழ் நிலைபேறு உடையதாக இன்றும் வாழ்ந்தும் வளர்ந்தும் செழித்தும் இறவாத கவிதைகளைப் படைத்த பாவேந்தர் பாரதிதாசன், உவமைக் கவிஞர் சுரதா, கவிஞர் முடியரசன் ஆகியோராலும், அவர்களைப் பின்தொடரும் கவிஞர்களாலும் மொழிநலன் காக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி முதன்மையும் தொன்மையும் உடையது மட்டுமன்று, இயற்கையோடு இயைந்த மொழி. சான்றாக உலகில் எந்த மொழிக்கும் மொழி வாழ்த்து இல்லை. தமிழுக்கு அச்சிறப்பு இயல்பாக ஏற்கெனவே வாய்த்தது. தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று உள்ளம் கொண்ட தமிழர் உணர்வாளர்கள் இன்றும் உளர் என்பதன் சான்றே 1965 மொழிப்போர் - தமிழ் இடத்தைப் பிடிக்க மத்திய அரசின் படை பலத்தோடு இந்தி வந்தது. பேரறிஞர் அண்ணா, மொழி காப்போம் என்றார். தமிழுக்கு உயிர்தர இசைந்தவர் தமிழகத்தில் 21 பேர் - மத்திய அரசே நிலை குலைந்தது. இதுபற்றி இன்னும் பார்ப்போம்.*

*இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இயேசுபிரான் பேசிய ஹீப்ரு மொழி இன்றில்லை. நபிநாயகம் பேசிய அரபுமொழி இன்றில்லை. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷேக்ஸ்பியர் பேசிய ஆங்கிலம் இன்று இலத்தீன் கிரேக்கச் சொற்களால் உருமாறி உள்ளது. சாக்கரடீசின் கிரேக்க மொழி 16-ஆம் நூற்றாண்டிலேயே வழக்கொழிந்தது. சீசர் பேசிய இலத்தீன் இன்றில்லை. சமசுகிருதத்தில் இரகுவம்சம் பாடிய காளிதாசனின் சமசுகிருதம் வழக்கொழிந்தது. ஆனால், தமிழ் இன்றும் சீரிளமையுடன் திகழ்கின்றது. அதுமட்டுமன்று, இயேசுவோ, நபியோ, சேக்ஸ்பியரோ, சாக்ரடீசோ, சீசரோ, காளிதாசனோ இன்று வந்து பேசிய அம்மொழிகள் வழக்கில் இருந்தாலும் யாருக்கும் புரியாது. ஆனால் திருவள்ளுவர் பனை ஓலையில் எழுதிய திருக்குறளை இன்று நம்மால் படித்தறிய முடியாது. எழுத்து வரிவடிவம் மாறி உள்ளது. ஆனால் திருவள்ளுவர் இன்று வந்து பேசினால், நமக்குப் புரியும். நாம் பேசுவதும் திருவள்ளுவருக்குப் புரியும். காரணம் திருக்குறளில் உள்ள சொற்களில் 70 சதவிகிதச் சொற்கள் இன்றும் வழக்கில் உள்ள சொற்கள். திருவள்ளுவர் உளவியல் அறிஞர். பன்னூல் பயிற்சியாளர். திருக்குறள் அந்தணர்நூல் (குறள் : 543) அந்தணர் என்றால் ஒரு குடியில் மூத்தோர். திருக்குறள் ஏதிலார் நூல் (குறள் : 440). நுண்ணிய நூல், திருக்குறள் நூலன்று. பனுவல். திருக்குறள் இலங்குநூல் (குறள் 410). திருக்குறள் உணர்வு நூல். தமிழர்தம் உயிர் நூல்.*

# மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம் முருகன் சந்நிதித் தேரோட்டம்

**புலவர் தா. வேலூர் கோ. சீதாராமன்**
மேனாள் மாவட்டக் கல்வி முதன்மை அலுவலர்,
திருவண்ணாமலை மாவட்டம்

*மயிலம்(முருகன்) சந்நிதித் தேரோட்டம்*
*மங்கலம் அருளும் நீரோட்டம்!*
*பயிலும் தமிழ்போல்உத்திரமாம்*
*பரமனின் மகனெழில் காட்சியதாம்!*
*வெயிலும் குளிராம் மயிலமதில்*
*விளையும் அற்புதம் ஆயிரமாம்!*
*குயில்கள் கொஞ்சும் இசைபாடும்*
*குருவாம் பாலயர் சிவகோயில்!*

*பங்குனி உத்திரப் பவனிதனைப்*
*பார்புகழ் மயிலம் மலைகாண்பீர்!*
*அங்குள சித்தர் முனிவருடன்*
*அருளும் கயிலயச் சிவன்மகனை*
*இங்குள யாவரும் தொழப்போமின்*
*இதயம் இனிக்கும் உத்திரத்தில்!*
*சங்கென உள்ளம் தெளிவுபெறும்*
*சான்றோர் ஆக்கும், வாழ்வுதரும்!*

*அரியும் அயனும் தேவர்களும்*
*அருள்பெற மயிலம் உத்திரத்தே*
*எரியும் தீபம் கையேந்தி*
*எழுவர் மயிலம் கோபுரத்தே!*
*புரியும் அவர்தம் போற்றல்களைப்*
*புகழ்வேல் ஏற்கும் ஆசிதரும்!*
*தெரியும் பங்குனி உத்திரத்தில்*
*தேசமே செல்க ஞானம்பெற!*

*ஆறிரு கரங்கள் அருள்வழங்கும்*
*ஆசிகள் வழங்கும் உத்திரம்போ!*
*ஆக்கம் பலவும் தான்வழங்கும்*
*அன்பர் அடியவர் தொண்டருக்கே!*
*போற்றுக பங்குனி மயிலமலைப்*
*புனிதனைஆங்குகாண் உளம்திறந்தே!*

*ஏற்றுக முருகனை இதயமலை*
*எண்ணுக அவனோ ஞானமலை!*

*இனியவர் நம்தவ சிவசித்தர்*
*எழுப்பிய மயிலமா கோவிலதில்*
*பனிமலர்ப் பாவை வள்ளிதெய்வானை*
*பக்க மிருக்கக் கல்யாணனாய்த்*
*தனிவேல் தாங்கி வருதலைப்பார்!*
*தாய்தரு வேலது பகையழிக்கும்*
*தரும்துயர் நமது உளமழிக்கும்*
*தயங்காய் மயிலம் உத்திரம்காண்!*

*சக்தியின் வேலது தங்குமிடம்!*
*சிவஞான பாலயர் உள்ளயிடம்!*
*பக்தர்கள்பரவசம் காணுமிடம்!*
*பரமனின் சிவசேய் ஆளுமிடம்!*
*இத்தரை பங்குனி உத்திரத்தில்*
*எழுதேர் மயிலம் இருமயில்மேல்*
*முத்திரை பதிக்கும் உத்திரத்தில்*
*முருகை முழுமதிநாள் மிசைபார்!*

# முத்தமிழ் முருகா உமை மறவேனோ

**கலைமாமணி, பாவலர் கோ. கலியபெருமாள்,**
பெத்துசெட்டிப்பேட்டை, புதுச்சேரி - 8
தொடர்பு எண் 8248219029

*குன்றத் துறையும் கோமான் முருகன்*
*குறைகள் களைந்தே அடியார்க் கருள்வான்*
*சென்றே வணங்கும் அடியார் மகிழ்வோ*
*சேரும் தாய்காண் சேய்போல் இருக்கும்*
*பொன்னும் பொருளும் சேரும் புகழும்*
*போற்றும் கனிபோல் நன்மை துய்க்கும்*
*கன்னல் தமிழ்க்குத் தலைவன் என்றே*
*கருதித் துதிப்பர் கனிந்த பாவால்!*

*அப்பன் சிவனுக் குமறை உரைத்தோன்*
*அன்னை சரவ ணப்பொய் கையை*
*ஒப்பாய் அணைக்கு கந்த னுமானான்*
*உற்ற பகைவர் சூரர் அடங்கத்*
*தப்பாம் வழியைக் கண்டே தடுத்தான்*
*தகாது போக்கித் தன்னில் சேர்த்தான்*
*செப்பும் அடியார் பாவில் தோய்ந்தான்*
*செகத்தோர் புகழும் படியாய் ஆனான்!*

*அழகன் முருகன் எனும்பெ யருற்றே*
*ஆண்டி யாய்ப்ப ழனியில் அமர்ந்தோன்*
*பழகும் செயலால் நாவற்கனியால்*
*பரந்த ஞானம் அவ்வைக்(கு) அளித்தோன்*
*குழகன் குகனை அசட்டை செய்யக்*
*குட்டும் பட்டே தெளிந்தான் பிரம்மா!*
*முழவின் ஒலியும் மக்கள் ஓசை*
*முழங்கக் காண்மு ருகன்தே ரோட்டம்!*

*மனமெ னும்கு கையுள் உந்தி*
*மருவும் விருப்பம் பலவு முற்றே*
*கனத்து நெஞ்சம் கலங்க லுற்றேன்*
*காணும் சீர்மை போக லுற்றேன்.*
*இனம்பு ரியாதப் பழக்கத் தாலே*
*இங்கி தமின்றி நடந்தி டலானேன்*
*தினமு னைத்தொ ழவுமே மறந்தும்*
*திகழக் காப்பாய் நுமத ருளாலே!*

PRGI No.TNTAM/25/A4155

# குமரா! நின் புகழ் தினம் போற்றி!

**திரு. செ. கமலநாதன்**
நிலைய இயக்குநர் (பனிநிறைவு), ஆகாசவாணி வானொலி நிலையம், சென்னை, தொடர்பு எண் 9994522592

*கொதித்திரை யெறிகடல் கொந்தளிக் கும்ஒலி*
*குமராநின்புகழ் தினம்பாடும்!*
*மதியினைத் தழுவிட மனதினில் எண்ணியே*
*வான்தொடும் தருநின் முகம்தேடும்!*
*விதியெனும் நினைவினை விஞ்சிடும் நின்பெயர்*
*வீரரின் நெஞ்சில் மறம்கூட்டும்!*
*துதிப்பவர் நெஞ்சினில் துயிலுறும் உன்னுடை*
*தொல் புகழ் அன்னவர் யாழ்மீட்டும்!*

*அறிஞர்தம் நெஞ்சினில் அழியாக் கல்வி*
*ஆனவன் நீயே திருமுருகா!*
*வறியவர் வேண்டும் வளரும் பேரருள்*
*வடிவம் நீயே ஒருமுருகா!*
*அரியநின் புகழினை இசையினிற் பாடி*
*அழைப்பவர் நெஞ்சில் வருமுருகா!*
*சிறியவன் உன்னை உருகியே கேட்டேன்*
*சிந்தையில் அமர்வாய் வளர்முருகா!*

*வேலினை எண்ணி வேண்டிடும் இதயம்*
*வேதனை மறந்து சிலிர்க்காதோ?*
*கோலம் நிறை மயில் கும்பிடும் கைகள்*
*கொடுந்துயர் துறந்து திருந்தாதோ?*
*வேலவன் பாதம் கனவிலும் காண்பவர்*
*வேதனை மறந்து சிரியாரோ?*
*பாலகன் அருள்திரு முகந்தனை நினைவோர்*
*பாசம் அறுத்து உய்யாரோ?*

*துயரின் இடையில் இன்பம் நல்கி*
*துன்பம் துடைப்பது நின்னருளே!*
*அயர்வுறும் வேளையில் ஆறுதல் தந்து*
*அச்சம் நீக்குதல் நின் நிழலே!*
*பயத்தைப் போக்கி பண்பினைத் தந்து*
*பாதுகாப்பதுன் திருவடியே!*
*மயக்கம் நீக்கி மனதினைக் காத்து*
*மருள் நீக் குவதுன் திருமுகமே!*

*(வேறு)*

*கூப்பிய கரத்தைப் போன்ற*
*கூரிய வேலைத் தாங்கி*
*காப்பிய ஏட்டில் இன்பக்*
*களிநடம் புரிவோய் போற்றி!*
*தீப்படு ஒளிபோல் மின்னும்*
*திருநறும் இதழ்கள் மீதில்*
*காட்டிடும் முறுவல் ஒன்றே*
*காட்டிடும் வீடு பேறே*

*இருவிழி கண்ணீர் மல்க*
*இணைக்கரம் கூப்பி நின்று*
*உருகிய நெஞ்சில் உந்தன்*
*உருவினை எண்ணி எண்ணி*
*மருகிடும் எந்தன் வாழ்வை*
*மலர்விக்க வருவாயென்று*
*முருகா! நின் அடிகள் எந்தன்*
*முடிமிசை சேர்த்தேன் போற்றி!*

PRGI No.TNTAM/25/A4155

# சேரமான் கேள்வியும் கபிலரின் பதிலும்

**புலவர் பால.பழநி**
*திண்டிவனம், அலைபேசி : 8870704916*

**பாடல் எழுந்த சூழல்:-**

சங்ககாலப் புலவர்களில் முதன்மையானவரான கபிலர், "குறிஞ்சிக்கோர் கபிலர் "என்றும் "பொய்யா நாவின் கபிலர்" என்றும் புகழப்படுபவர். அவர் ஒரு சமயம் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் சிறப்புடைய மன்னனது அரண்மனைக்குச் சென்றிருந்தார். இருவரும் ஒருங்கிருந்து உரையாடி மகிழ்ந்தார்கள். தமிழின் பெருமைகளையும், நாட்டின் வளமைகளையும் பற்றிக் கலந்துரையாடி இன்புற்றனர். அப்போது சேரமான், கபிலர் தம் கைகளைக் கவனித்தான். உடனே அரசன், புலவரை நோக்கி "உமது கைகள் மென்மையாக இருக்கின்றனவே!" என்று வியந்தார். வியந்து கூறிய சேரமானது கூற்றினையே கருப்பொருளாகக் கொண்டு ஒரு பாடலைப் பாடினார், புலவர்.

**பாடல் :-**

*"கடுங்கண்ண கொல் களிற்றால்
காப்புடைய எழு முருக்கிப்,
பொன் இயல் புனை தோட்டியால்
முன்பு துரந்து, சமம் தாங்கவும்;
பார்உடைத்த குண்டு அகழி
நீர் அழுவ நிவப்புக் குறித்து,
நிமிர் பரிய மா தாங்கவும்;
ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாவ நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்;
பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும்; குரிசில்
வலிய ஆகும் நின் தாள்தோய் தடக்கை,
புலவு நாற்றத்த பைந்தடி
பூ நாற்றத்த புகை கொளீஇ, ஊன்துவை
கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது
பிறிதுதொழில் அறியா ஆகலின், நன்றும்
மெல்லிய பெரும! தாமே நல்லவர்க்கு
ஆரணங்கு ஆகிய மார்பின், பொருநர்க்கு
இருநிலத்து அன்ன நோன்மை
செருமிகு சேஎய் நிற் பாடுநர் கையே!* (புறம் – 14)

*திணை :– பாடாண்திணை துறை :– இயல்மொழி*

*(சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன், கபிலரது கையை நோக்கி 'மெல்லியவாமால் நுங்கை' என்று கேட்க கபிலர் பாடியது)*

**அருஞ்சொற்பொருள் :-**

கடுங்கண் - வன்கண்மை (வலிமை), எழு - கணைய மரம் (மதில் வாயிலுக்குப் பாதுகாப்பு தருவது), முருக்கி - முறித்து, பொன் - இரும்பு, தோட்டி - அங்குசம், சமம் - வேண்டும் அளவு, பார் உடைத்த - வலிய நிலத்தை, குண்டு - ஆழமான, குசை - சாட்டி, பிடிவார் ஆவம் - அம்பறாத்தூணி, புறத்தை - முதுகை, சாவ - வில், நோன்ஞாண் நாண், தடி - ஊன்கறி, பூ நாற்றம் - தாளிதத்தால் பெற்ற இனிய மணம், பொருநர்க்கு - போர் புரிவோர்க்கு, சேய் - முருகப்பெருமான்.

**பாடல் பொருள் :-**

வன்கண்மை உடைய கொலை யானையால் காவலை உடைய கணைய மரத்தை முறித்து, இரும்பால் செய்யப்பட்ட அழகு செய்த அங்குசத்தால், முன்னர்க் கடாவி அது செய்யும் வினையைப் பின் வேண்டுமளவிலே பிடிக்கவும்,

வலிய நிலத்தைக் குந்தாலியால் இடித்துச் செய்த குழிந்த நீர்க்கிடங்கிண்கண் நீர்ப்பரப்பினது ஆழமாகிய உயர்ச்சியைக் கருதி, அதன்கண் செல்லாமல் மிகைத்த செலவினை உடைய குதிரையைக் குசை தாங்கி வேண்டும் அளவிலே பிடிக்கவும்,

அம்பறாத்தூணி பொருந்திய முதுகை உடையையாய் தேர்மேல் நின்று வில்லினது நாணால் பிறந்த வடுப் பொருந்தும்படி அம்பைச் செலுத்தவும்,

பரிசிலர்க்குப் பெறுதற்கு அரிய அணிகலன்களை அளிக்கவும், தலைவ! வலியவாகும் நின் முழந்தாளைப் பொருந்திய கைகள்.

புலவு நாற்றத்தை உடையவாகிய செவ்வித் தடியை, பூ நாற்றத்தவாகிய புகையைக் கொளுத்தி, ஊனையும், கறியையும், சோற்றையும் உண்டு வருந்தும் செயலல்லது வேறு செயலறியா ஆகலின் அவைதாம் பெரிதும் மெல்லியவாயின பெரும!

பெண்டிற்கு வருத்தத்தைத் தரும் மார்பை உடையவனாய் பொருவார்க்குத் துளக்கப்படாமையின் பெருநிலம் போன்ற வலியினை உடைய போரின்கண் மிக்க சேயை ஒப்பாய்! நின்னைப் பாடுவோர்தம் கைகள் என்றவாறு,

**வாக்கிய முடிபு :-**

குரிசில்! பெரும! சேஎய்! வலியவாகும் நின்கை. நிற்பாடுநர்கை மெல்லியவாயின.

**சேரமானது கைகள் வலியவாதற்குக் கபிலர் கூறும் காரணங்கள் :-**

சேரமான் கணைய மரத்தை யானையின் பெருவலிமை கொண்டு முறிந்திடச் செய்தான். அவ்யானையை அங்குசத்தால் வேண்டுமாறு வினை செய்ய ஏவினான். குதிரையை நடத்திட வேண்டுமளவில் பிடிவாரைப் பிடித்து இழுத்தான், தளர்த்தினான். முதுகில் அம்பறாத்தூணியை உடையவனாய்த் தேரில் நின்று வில்லில் நாண் பூட்டி அம்பைப் பொருத்தி இழுத்து விடுத்தான்.

பரிசிலர்க்கு அணிகலன்களைத் தன் கரங்களால் அள்ளிக் கொடுத்தான். இக்காரணங்களால் அரசனது கைகள் காப்புக் காய்த்தது போல வலியனவாயின.

**சேரமானது மார்பின் திண்மை :-**

சேரமானுக்குப் பரந்த, அழகிய திண்மையான மார்பு. அது பெண்களை ஈர்த்து அவன் மீது விருப்பத்தை உண்டாக்கும். பிறகு அவர்களையே அவனை நினைத்து வருந்தச் செய்யும். ஆனால் போரில் எதிர்க்கும் பகைவர்களை அதே மார்பு அச்சுறுத்தும் நிலத்தைப் போன்ற வலிமை உடையது. அவன் போரிலே முருகப்பெருமானைப் போன்று போர் புரிவான் என்கிறார் புலவர்.

**கபிலரின் கை மென்மைக்குக் காரணம் :-**

பெரும! நான் ஊனையும், துவையையும் (துவையல்) கறியையும், சோற்றையும் உண்டு வருந்தும் செயலைத் தான் செய்கிறேன். எனது கை வேறு செயலை அறியா. அதனால் கைகள் மென்மைத் தன்மை உடையனவாக இருக்கின்றன என்று புலவர் கபிலர் தன் கை மென்மையாக இருக்கக் காரணம் கூறினார், சேரமானுக்கு.

**சொற்பொருள் விளக்கம் :-**

பாடலின் 13-வது அடியில் 'கொளீஇ' என்னும் வினையெச்சத்தை 'கொளுத்திய' என்று பெயரெச்சமாகக் கொண்டும் பொருள் செய்யலாம். ஆனால் ஓர் இலக்கணப் பிழை நேரும் அதில். ஓர் வினையெச்சத்தைப் பெயரெச்சமாக மாற்றிப் பொருள் கொள்வது சிறப்பன்று என்கிறார் உரையாசிரியர்.

'புகை கொளீஇ' = கொளுத்தி - வினையெச்சம்,
கொளுத்திய - பெயெரெச்சம்.

கொளுத்திச் சமைத்த ஊன் என்று கொள்வதே சரி என்று கருதுகிறார் உரையாசிரியர். 'மா தாங்கவும்' (வரி 7) என்பதற்கு அகழியைக் கடக்கப் பாய்தலுக்குக் குதிரையின் பிடிவாரினைத் தாங்கி எடுத்து விடவும் என்று உரைப்பாரும் உளர், என்கிறார் உரையாசிரியர்.

'பாடுநர்' என்று கபிலர் தம்மைப் படர்க்கை இடத்தில் வைத்து அவ்வாறு கூறினார்.

தம் கையின் மென்மைத் தன்மையைக் கூறும் புலவர், அரசன் சேரமானது கையின் வலிமைத் தன்மையையும் கூறினமையால் இப்பாடல் 'இயல்மொழி' துறை ஆயிற்று.

பெரும! போர் புரிதலையும், பரிசிலர்க்குப் பொருள் வழங்குதலையும் உடைய நின் கரங்கள் வலியவாயின. நான் உண்ணுதல் என்னும் வருந்து தொழிலைத் தவிர வேறு தொழிலை அறியேன். எனவே எனது கைகள் மெல்லியவாயின, என்று புலவர் கூறியதில் உண்ணுதலை வருந்து தொழில் என்று சொல்லியது நகைச்சுவை உணர்வு தருகிறது.

போர் செய்வதில் வல்ல ஓர் அரசனை முருகப்பெருமான் என்று பெருமைப்படுத்திக் கூறுவது தமிழ்நாட்டு வழக்கம். எனவேதான், சேரமானைச் செருமிகு 'சேஎய்' என்றார், புலவர். சேய் இது 'சேஎய்' என்று அளபெடுத்து, இன்னிசை அளபெடை ஆயிற்று.

**"செருமிகு சேஎய்நிற் பாடுநர் கையே"**

நிலத்தொடு வேந்தனை ஒப்பிட்டுக் கூறியது 'பொறுத்தல்' என்னும் பொருள் பற்றி அன்று. 'இருநிலத்தன்ன நோன்மை' இதில் நோன்மை என்பது துளக்கப்படாமை என்னும் பொருளது. சேரமானைப் பகைவர் போரிலே வெல்ல முடியாத வலிமை உடையவன் என்ற பொருளில் ஒப்பிட்டுள்ளார்.

'தாள் தோய் தடக்கை' - முழந்தாளைத் தொடும் பருத்த கைகள். பெருந்தலைவர் காமராசருக்கு அவ்வாறு கரங்கள் நீண்டிருந்தன என்று கூறுவர். அங்க இலக்கணங்களில் இத்தகைய கரங்கள் அமைந்திருந்தால், அஃது ஒரு சிறப்பு என்று குறிப்பர்.

மன்னனோடு புலவர் எவ்வளவு நெருக்கமாக அன்போடு உரையாடியிருக்கிறார் என்பதற்கு இவ்விருவர் உரையாடலும் ஒரு சான்றாகிறது.

## செந்தூரச் சிலை - இசைப்பாட்டு

*பல்லவி.*

*மயிலத்தில் ஒருபிள்ளை சிரிக்கின்றது – அந்த*
*ஒலியிந்த உலகெங்கும் ஒலிக்கின்றது – எதிரொலிக்கின்றது. (மயிலத்தில்)*

*அநுபல்லவி.*

*சிவனாரின் தோள்மீதும் சிவகாமி மடிமீதும்*
*செந்தூரச் சிலையொன்று தவழ்கின்றது – அவர்*
*சிந்தைகள் இன்பத்தைப் பொழிகின்றது.*
*மயில்மீது நடமாடி வருகின்றது – எங்கள்*
*மனமீது விளையாடி மகிழ்கின்றது (மயிலத்தில்)*

*சரணம்*

*முத்தான சிரிப்பொன்றை உமிழ்கின்றது – அதில்*
*மூன்றான உலகங்கள் ஒளிர்கின்றது*
*சத்தான மொழியொன்று பிறக்கின்றது – எங்கள்*
*சித்தங்கள் துதிபாடிக் களிக்கின்றது (மயிலத்தில்)*

*வருகின்ற துன்பங்கள் மறைகின்றது – நாளும்*
*வளர்கின்ற பாவங்கள் அழிகின்றது.*
*அருள் என்னும் குன்றேறி ஆள்கின்றது – அன்பர்*
*அகமென்னும் மலர்மீது அமர்கின்றது.*

PRGI No.TNTAM/25/A4155

# விநாயகர் மாண்பு

**சித்தாந்த ரத்தினம், புலவர் சு சிவகுமார்**
**தேவிகாபுரம்**

*நாரதரின் வழிகாட்டுதலின்படி வானவர் கோனாகிய இந்திரன் விநாயகரை வழிபடலானான். புலனொடுக்கத்துடன் மனம், மொழி, மெய்களால் ஆனைமுகக் கடவுளை வணங்கி காதலாகிக் கசிந்து உருகி பல நாட்கள் தவம் இருந்தான். இந்திரனின் உண்மை அன்பையும் பக்தியையும் ஏற்று கருணைக் கடலாகிய கணேசமூர்த்தி அவனுக்குக் காட்சியளித்து, இந்திரனே உனக்கு வேண்டிய வரம் யாது என்று கேட்டார். இந்திரன் விநாயகரின் திருவடி மலர்களில் வீழ்ந்து வணங்கி பெருமானே தங்கள் கருணைக்கு ஏது எல்லை. அடியேன் சூரபதுமனுக்குப் பயந்து இந்த சீர்காழிப் பகுதியில் ஒளிந்து கொண்டு சிவனாரைப் பூசித்து வருகிறேன். சிவ பூசைக்கு ஒரு நந்தவனம் அமைத்தேன். அது நீரின்றி காய்ந்து விட்டது. சிவ பூசைக்குத் தீர்த்தமும் இல்லை. தாங்கள் கருணை கூர்ந்து அகத்தியரின் கமண்டல நீரினைக் கவிழ்த்து ஆறாக ஓடச் செய்தால் அடியேன் மட்டுமின்றி இந்தத் தென்னாடும் செழிக்கும் என்றான்.*

*பரம கருணா மூர்த்தியாகிய விக்னேஷ்வரர் இந்திரனை நோக்கி தேவராசனே கவலை வேண்டாம். தமிழ் முனிவராகிய அகத்தியர் கமண்டல நீரை இந்த பூமிக்கு அளிப்போம். உன் நந்தவனம் செழிக்கும். சிவபூசை சிறக்கும் என்று அருளி மறைந்தார். இந்திரன் விநாயகரின் பெருங்கருணையை எண்ணி போற்றிப் புகழ்ந்தான்.*

*சைய மலையில் செந்தமிழ் முனிவர் அகத்தியனார். காலை வேளையில் சிவம் பெருகும் சிந்தையுடன் கம்பீரமாக அமர்ந்து கொண்டு சிவபூசை செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு கணநாதனாகிய பிள்ளையார் ஒரு காக்கை வடிவெடுத்து அகத்தியர் அருகில் இருந்த கமண்டலத்தின் ஒரு நுனியில் அமர்ந்து நீரைக்குடிப்பது போல் கமண்டலத்தில் தனது அலகை நீட்ட இதைப் பார்த்த அகத்தியர் காக்கையை விரட்ட தமது கரத்தை நீட்டினார். இதைக்கண்டு காகம் சட்டென்று கமண்டலத்தை உதைத்து எழுந்து பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து அதில் இருந்த தெய்வ கங்கை வெளியேறி அகத்தியர் நம்மை இந்த வழிதான் ஓடச் சொல்கிறார். என்று எண்ணி அதிவேகமாக வெள்ளப்பெருக் கெடுத்து அம்மலையிலிருந்து பள்ளம் நோக்கி குதித்து நன்றாக விரிவடைந்து தென்னாடு முழுவதும் ஓடி காடு, நாடு இவைகளின் தண்ணீர் பஞ்சம் நீக்கி காய்ந்தநிலம் குளிர இந்திரன் நந்தவனம் புகுந்து செழிக்கச் செய்து நாடெங்கும் புவிமகள் பச்சைப்பட்டு உடுத்தியது போல் பயிர்களைச் செழிக்கச் செய்து பெரும் மகிழ்ச்சியை உண்டாக்கியது.*

*இந்த நிகழ்வைக் காணும் பொழுது ஔவையார் பாடல் ஒன்று நம் நினைவுக்கு வருகிறது. இந்திரன் ஒருவன்தான் விநாயகப் பெருமானை வேண்டி இந்த மண்ணுலகத்திற்கும் எனக்கும் அகத்தியரின் கமண்டலத்திலுள்ள நீரினை ஆறாக ஓடச் செய்தருள வேண்டுமென்று கேட்டு வணங்கினான். ஆனால் அவனுக்கு மட்டும் காவிரி உண்டாகவில்லை. இந்திரன் பொருட்டு பிள்ளையார் நம் எல்லோருக்கும் அந்தப் புனிதக் காவிரியை அருளினார். அன்றும், இன்றும், என்றும் தென்னாடும் செந்தமிழும் செழிக்க காவிரிஆறு வற்றாத ஜீவநதியாக எல்லோருக்கும் பயன்படுகிறது.*

***நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்***
***புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்***
***நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு***
***எல்லார்க்கும் பெய்யும் மழை.*** ***(நல்வழி)***

*என்னும் ஔவையின் பொன்மொழி இங்கு சிந்திக்கத்தக்கதாக உள்ளது. காகத்தால் கமண்டலத்திலிருந்து வெளிப்பட்டு விரிந்து ஓடியதால் காவிரி நதி என்றும் இந்த நதி பாயும் பூமி செல்வச் செழிப்புடையதாக இருப்பதால் பொன்னி நதி என்றும் பெயர் விளங்குவதாயிற்று.*

*தாம் வைத்திருந்த கமண்டல நீரை இந்தக் காகம் கவிழ்த்து விட்டதே என்று எண்ணி அருந்தமிழ் முனிவர் அகத்தியனார் வருத்தமுற்றார். அப்போது காகம் சற்று தூரம் சென்று ஒரு அந்தணச் சிறுவனாக வடிவெடுத்து நின்றது. இதைக் கண்ட அகத்தியர் இது என்ன மாயம் காகம் ஒரு சிறுவனாக உருக்கொண்டு நிற்கின்றதே. இவன் அசுரனோ அல்லது மாயாவியோ என்று திகைத்து கோபமுற்று அந்த சிறு பிள்ளையின் தலையில் தனது இரு கரங்களால் குட்ட கைகளை உயர்த்திக் கொண்டு துரத்தினார். பிள்ளையாராகிய பிள்ளை ஓட பெரியவராகிய அகத்தியர் துரத்த பிள்ளை ஓட பெரியவர் துரத்த, பிள்ளை அங்கும் இங்குமாக ஓடி, முன்னும் பின்னுமாக ஓடி வேடிக்கை காட்ட பெரியவரோ பிள்ளையைத்துரத்தி ஓடி ஓடிக் களைத்து உடல் சோர்வுற்று நின்றார்.*

*சிறுபிள்ளையாக வந்த பிள்ளையார், பிள்ளை வடிவத்தை மறைத்து ஐந்து திருக்கரங்களுடன் ஆனைமுகத்துடன் திருக்காட்சி அருளினார். இந்த அற்புதக் காட்சியைக் கண்ட தமிழ் முனிவர் தன் உள்ளமும் உடலும் நடுங்க கருணைக் கடலே தேவரும் மூவரும் காணாத திருவடி அடியேனைத் தேடி வந்தது. தங்களையா அடியேன் குட்டத்துரத்தினேன். என் அறியாமையை என் சொல்வேன் என்று அழுது தொழுது தன் இரு கைகளால் தனது தலையிலேயே ஓங்கிக் குட்டிக்கொண்டார்.*

*அருளே வடிவாகிய ஆனைமுகன், அகத்தியா! வருத்தம் வேண்டாம். இந்திரன் நந்தவனமும் இந்த தென்னாட்டு வளமும் செழிக்கவும் நாம் இப்படிச் செய்தோம் என்றருளினார். குறுமுனிவர் கணேசமூர்த்தியின் திருவடிகளில்*

விழுந்து வணங்கினார். ஆடிப்பாடி ஆனந்தங்கொண்டார். விநாயகமூர்த்தி கருணை மழை பொழிந்தார். பிறகு அகத்தியர் பிள்ளையாரை வணங்கி, பெருமானே அடியேன் பொதிகை மலை சென்று அங்கு சிவபூசை செய்து அம்மையப்பர் திருமணக் கோலத்தைக் காண வேண்டி தேவகங்கையை கமண்டலத்தில் பெற்று வந்தேன். அவை அனைத்தும் இங்கு காவிரியாகப் பெருக்கெடுத்து ஓடுகிறதே. அடியேன் எவ்வாறு சிவபூசை செய்வேன் தாங்கள் தான் திருவருள் புரிய வேண்டும் என்று வேண்டினார். கருணாமூர்த்தியாகிய கணநாதன் அகத்தியரின் வேண்டுதலுக்கு இரங்கி பெருகி ஓடும் காவிரி நீரினைச் சிறிது கமண்டலத்தில் அடக்கி அகத்தியா! நீ செல்லும் இடமெல்லாம் இந்த புனிதநீர் வற்றாமல் உனக்கு உதவும் என்று அருளினார். அகத்தியர் உள்ளம் மகிழ்ந்து ஆனைமுகத்தரசே தங்கள் திருவருளால் என்விரதம் நிறைவு பெறும். அடியேன் தங்கள் திருமுன் எப்படி என்கரங்களால் என்தலையில் குட்டிக்கொண்டு வழிபட்டேனோ அதுபோல் தங்களை வணங்கும் அடியார்கள் தங்கள் சந்நிதியில் தலையில் குட்டிக்கொண்டு வழிபட வேண்டும். அப்படி வழிபடுவோர் இடரினையும், துன்பத்தையும் களைந்து இம்மை நலனும் மறுமை நலனும் அருள வேண்டுகிறேன் என்றார்.

விநாயகர் அகத்தியரை நோக்கி எம்மை வழிபடும் அடியவர்கள் தன் தலையில் மூன்று முறை இதமாகக் குட்டிக் கொண்டால் போதும் என்று அருளினார். அகத்தியர் விநாயகரை வணங்கி பொதிகை மலையை நோக்கிச் சென்றார். இந்நிகழ்வினை நல்லாற்றூர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தாம் பாடியருளிய, "பிரபுலிங்க லீலை" எனும் நூலில் காப்புச் செய்யுளாகப் பாடியதில் மிக அழகாகக் கூறியுள்ளார்.

***சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம்***
***பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்***
***கரக நீரைக் கவிழ்த்த மதகரி***
***சரணம் நாளும் தலைக்கணி யாக்குவாம்*** *(பிரபுலிங்கலீலை)*

இப்படி அடியார் பொருட்டு, ஆனைமுகப்பெருமான் எளிமையாக வந்து அருள வல்லவர்.

**இட்டார் அகத்தியனார் எட்டு**

அறிஞர் பெருமக்களுக்கும் சான்றோர்களுக்கும் வணக்கம். விநாயகர் மாண்பைப் போற்றுவோம் என்னும் இத்தொடரில் இப்பொழுது விநாயகர் காவிரி தந்ததையும் அகத்தியருக்கு அருளியதையும் நாம் சிந்தித்து வருகிறோம். அதன் தொடர்ச்சியாக அகத்தியர் பொதிகை மலையில் தங்கி தன் கமண்டல நீரினால் சிவபூசை செய்து உள்ளம் உருகி உகந்து சிவனென்று சிந்தித்து வந்துதித்து வரும் காலை சிவபெருமான் பார்வதி தேவியுடன் அகத்தியருக்குத் திருமணக் கோலத்தைக் காட்டி அருளினார். அதன் பிறகு பல திருத்தலங்களுக்குச் சென்று பரம்பொருளை வணங்கி அவர்தம் திருமணக்காட்சியை அங்கங்கே கண்டு மகிழ்ந்தார். இதன் பிறகு வரும் ஒரு செய்தியைப் பார்ப்போம்.

*1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அடியேனும், அடியேனுடைய வித்யா குரு தேவிகாபுரம் சைவ சித்தாந்த வித்யாநிதி அமரர் சிவத்திரு ஆலால சுந்தரனார் அவர்களும் திருவாவடுதுறை ஆதீனத்தில் மூன்றுநாள் தங்கியிருந்தோம். அந்நாளில் திருவாவடுதுறை ஆதீனப் புலவராகத் திகழ்ந்த சிவத்திரு அமரர். காஞ்சி சதாசிவம் அவர்களிடம் அந்த மூன்று நாளும் அரிய கருத்துகளை பாடமாகக் கேட்டேன். அப்போது அவர் கூறிய செய்திகளில் ஒன்றுதான் இட்டார் அகத்தியனார் எட்டு என்னும் இந்த அறிய செய்தியாகும். சிவத்திரு. காஞ்சி. சதாசிவம் ஐயா அவர்கள் சொல்ல அதை அப்படியே அடியேன் எழுதி அவரிடம் காண்பித்தேன். அவர் சரியாகவுள்ளது நான் சொன்னது வரலாற்று உண்மை. இதை நீ பயன்படுத்திக் கொள் பிறருக்கும் சொல் எல்லாரும் பயன் பெறட்டும் என்றார்கள். அவர்களிடம் கேட்டு எழுதி வைத்திருந்ததை அப்படியே இப்போது நம்மனோர் பார்வைக்கு வெளிப்படுத்துகிறேன். இந்தச் செய்தி இதில் வரும் பாடல்கள் நமக்குப் பயன் தர வல்லதாக உள்ளன.*

*இமயமலையின் இறைவன் இறைவியின் திருமணத்தைக்காண தேவர்களும் முனிவர்களும் மற்றும் அனைத்து உலகத்தாரும் சூழ வடதிசைத் தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. உலகத்தைச் சமன் செய்ய அகத்தியரை தென்திசைக்குச் செல்லுமாறு சிவபெருமான் கட்டளையிட அகத்தியனாரும் பொதிகைமலை வர உலகம் சமமானது. அதன்பின் அகத்தியனார் பொதிகை மலையில் இறைவர் இறைவியின் திருமணக்கோலங்கண்டு ஆனந்தம் கொண்டார். பிறகு பல இடங்களில் சிவலிங்கப் பூசை செய்து திருமணக்கோலம் கண்டு மகிழ்ந்து பிறகு காஞ்சிபுரத்திற்கு வந்து ஒரு சிவலிங்கம் அமைத்து அதற்கு அகத்தீசர் என்னும் நாமம் சூட்டி அம்மையப்பர் திருமணக்கோலங்காண வேண்டி பூசித்து வந்தார். சிவமும் சக்தியும் அகத்தியனாருக்கு திருமணக் கோலங்காட்டி அருளினார்கள். இறைவர், இறைவியின் திருத்மணக்கோலங்கண்ட அகத்திய மாமுனிவர் ஆனந்தக் களிப்புற்று உள்ளம் உருகி கண்களில் நீர் பெருக பலவாறு போற்றித் துதித்தார். அப்போது சிவபெருமானை எட்டு சுலோகங்களால் துதித்து வணங்கினார். இந்த சுலோகங்கள் வடமொழியில் உள்ளது. இந்தத் துதியை நாம் தமிழில் பாடிப் பயன்பெற வேண்டி முன்னோர்கள் இந்த சுலோகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து உள்ளார்கள். இந்த துதிப்பாடலை நாம் உள்ளம் உருகி பாடி இறைவனை வணங்க நமக்கு வேண்டிய அனைத்தும் எளிதில் பெறலாம். நாம் இறைவனிடம் எப்படி வேண்டுவது என்பதை நமக்காக அகத்திய மாமுனிவர் பாடிக் கொடுத்துள்ளார். அந்தப் பாடல்களை இப்போது பாடி மகிழ்வோம்.*

**இட்டார் அகத்தியனார் எட்டு**

**சிவமயம்**

*1)* ***இந்நாள் எனக்குப் பயப்பட்டது இப்பிறவி***
***இந்நாள் எனக்குப் பயப்பட்டது யான்செய்தவம்***
***இந்நாள் எனக்குப் பயப்பட்டது என்னறிவும்***
***இந்நாள் உனைக்காணப் பெற்றமையின் எம்கோவே.***

PRGI No.TNTAM/25/A4155

2) எண்ணமெல்லாம் எய்தினேன் எண்ணமெல்லாம் எய்தினேன்
எண்ணமெலாம் எய்தினேன் எங்கள் பெருமானே
கண்ணனொடு நான்முகனும் காணாத துணையடிகள்
கண்ணெதிரே இற்றை நாள் யான் காணக் காட்டினையால்

3) சங்கரா சம்புவே சங்கரா சம்புவே
சங்கரா சம்புவே சாம்ப சிவனேஎன்
அங்கணா என்றென்றே ஒலித்து அழுதரற்றி
இங்கெனக்கு வாழ்நாள் சிலவாறே போகியவே

4) குன்றாத அன்புனக்கே குன்றாத அன்புனக்கே
குன்றாத அன்புனுக்கே மிக்கோங்குங் கொள்கையது
என்றும் எனக்குண்டாக என்றும் எனக்குண்டாக
என்றும் எனக்குண்டாக என்றும் ஓர் பெற்றியனே

5) வையமிசைத் தோற்றமுதல் சாங்காறும் மன்றஉனைத்
தெய்வமெனக் கொள்ளாத திருவிலிகள் என்குலத்தில்
எய்தியொரு கான்றும் பிறவற்க பிறந்துறினும்
வெய்தென மற்றாங்கே விளிந்தொழிக எம்மானே

6) ஆனேறி அமர்ந்தருளி அன்றினார் புரமெரித்த
கோனே எனக்குக் குலதெய்வமாம் பேற்றால்
யானே பெருஞ்செல்வன் யானே பெருஞ்செல்வன்
யானே பெருஞ்செல்வன் எல்லா உலகினுமே

7) சிறந்துன்னை தெய்வமெனக் கொள்ளாத சீத்தை
பிறந்த குலம் பிறவா நின்றகுலம் பீளின்
உறந்த குலத்தும் உமைஒருபால் மேயாய்
மறந்தும் பிறவாத வாழ்வெனக்கு வேண்டுமால்

8) ஏழைக்கு உறும்பின் இமையோர் தமக்கிறங்கி
பீழைக் கொடுவிடத்தை உண்டளித்தப் பேராளா
ஆழிப் பெருங்கருணை ஆரமுதே வெற்பீன்ற
மாழைப் பூங்கண்ணி மணாளா அடிபோற்றி

(இட்டார் அகத்தியனார் எட்டு)

இந்தப் பாடல்களை நாமும் தினந்தினம் பாடி இறையருள் பெற்று இன்புற்று வாழ்வோம். அடுத்த பகுதி வரும் இதழில் காணலாம்.

PRGI No.TNTAM/25/A4155

# நல்லாற்றூர் சிவப்பிரகாசரின் இலக்கண வளம்

**புலவர் சு. சொக்கலிங்கம்**
தமிழ் விரிவுரையாளர் (பணி நிறைவு) நிறுவுநர் குறளிசைக் கூடு
புதுச்சேரி 08, தொடர்பு : 89031 40432

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் சிதம்பரத்தில் வீற்றிருந்த நாளில் அருளிய நூல்களுள் ஒன்று நால்வர் நான்மணிமாலை.

இந்நூல் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசர் ஆகிய சமயக்குரவர் நால்வரின் வரலாற்றையும், சிறப்பையும் அங்கங்களாகக் கொண்டு எழுந்தவையாகும்.

நால்வர் நான்மணி மாலை என்பது நால்வரது நான்மணி மாலை என விரியின் இலக்கண வகையால் பொருள் பிறிதின்கிழமை (உடைமைப் பொருளாகிய) ஆறாம் வேற்றுமைத் தொகையாகும். நால்வரைக் குறித்துப் பாடியதொரு நூலெனப் பொருள்கொளின் இத்தொடர் இரண்டனுருபும் பொருளும் உடன்தொக்க தொகையாகும். முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் போன்ற நால்வகை மணி வகைகளை முறையாகக் கோக்கப்பட்ட மாலை போல அந்தாதித் தொடையால் வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியப்பா விருத்தம் என்ற பா வகையில் முறையே திரு சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரைப் பற்றிப் பத்துப் பத்துப் பாடல்களால் பாடப்பட்டதாகும்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடல்கள் என்றால் கற்பனை வளத்தைச் சொல்லவா வேண்டும்! ஆனால் இந்நூல் கற்பனை வளத்தோடு இலக்கண வளமும், தெளிவும் பெற்றதென்றே கூறலாம். பொருள்கோள் எட்டனுள் தாப்பிசைப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்ற இரண்டினைத் தம்படைப்புக்குள் கொண்டு வந்து சிறப்பித்திருப்பார் சுவாமிகள்.

பொருள்கோள்: செய்யுளில் இடம்பெற்றுள்ள சொற்களை அதில் உள்ளவாறே பொருள்கொளின் எல்லாச் செய்யுட்களுக்கும் சரியான பொருள் தராது. யாப்பு முதலிய காரணங்களுக்காகவும், இனிமைக்காகவும் புனையப்பட்ட செய்யுள்களில் சொற்களை முன் பின்னாக மாற்றியும், பிரித்துப் பொருள் கொண்டால்தான் அச்செய்யுட்களின் சரியான பொருள் கிடைக்கும். தொடர்களைப் பொருள் கொள்ளும் முறையும் சரியாக அமையும். பொருள்

கொள்ளும் முறைமையை விளக்குவதே பொருள்கோள் என்பதாகும் கொள்ளுதல்_- தொழிற்பெயர். கொள் -முதல் நிலை தொழிற்பெயர் கோள் - முதல் நிலை திரிந்த தொழிற்பெயர்.பொருள் கொள்ளுதல் , பொருள் கோள் ஆயிற்று.

நாவுக்கரசரின் பெருமையைக் கூறும் பாடலைத் தாப்பிசைப் பொருள்கோள் அமையும் வண்ணம் இசைத்துள்ளார்.

தாப்பிசைப் பொருள்கோள்: தாம்பிசைப் பொருள்கோள் என்பதே தாப்பிசைப் பொருள்கோளாகும். சிலம்பதிகாரம், சிலப்பதிகாரம், இரும்புபாதை, இருப்புப் பாதை என்பது போல் தாம்பிசை என்பது தாப்பிசை ஆயிற்று. தாம்பு என்பதற்குக் கயிறு என்பது பொருள். ஊஞ்சலில் உள்ள கயிறானது முன்னும் பின்னும் செல்வது போல ஒரு செய்யுளின் நடுவே நின்ற சொல்லானது அவ்விடத்தில் நின்றே பொருள் கூறியும், கூறாமலும் முதலிலும், ,நடுவிலும் இறுதியிலும் போய் பொருள் கூறுவது தாப்பிசைப் பொருளாகும்.இதனை

**இடைநிலை மொழியே ஏனைய ஈரி டத்தும்.**
**நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை. (நன்னூல் நூற்பா எண் 416 )**

தாப்பிசைப் பொருள் கோள் வகையில் நால்வர் நான்மணி மாலையில் அமைந்த செய்யுள் ஒன்றைக் காண்போம்

**வீட்டிற்கு வாயில் எனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது**
**வாட்டிற்கு வல்லன் ஒருவற்கு ஞான அமுதுதவி**
**நாட்டிற்கு இலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினுமென்**
**பாட்டிற்கு நீயும் அவனும்ஒப் பீரெப் படியினுமே (பா.எண் 2)**

இக்கலித்துறையை இதில் அமைந்தவாறே படித்தால் இச்செய்யுள் தெளிவும் இராது; சிறப்பும் இராது.

இப்பாடலில் உள்ள நாட்டிற்கிலாத என்ற சொல் தாப்பிசையால் நின்று சிவபெருமான், நாட்டியம் ஆடவல்ல ஆளுடைப் பிள்ளை என்ற ஒருவனுக்கு அமுதம் கொடுத்ததை “வல்லார் வருவதற்கு ஞான அமுது உதவி” என்று பாடியுள்ள அதேவேளை அந்த ஞானப்பாலின் சிறப்பை வியந்தோதும் பொருட்டு மூன்றாம் அடியில் இருந்த ஞான அமுதத்தைச் சேர்ந்த நாட்டிற்கிலாத என்ற சொல்லின் முன்வைத்து நாட்டிற்கிலாத ஞான அமுதவி என்றமைய படித்தால் சிறப்புறும்.

சிவபெருமான் நாவுக்கரசருக்குக் கொடிய குடல் நோயாகிய சூலை

நோயைக் கொடுத்தவிடுத்துக் கூறுங்கால் அச்சூலை நோயின் கொடுமையை இதுவரை "நாட்டிற் கிலாதகுடர் நோய்" என்று அமைத்துப் பாடியுள்ளார்.

மேற்கண்ட பாட்டில் உள்ள நாட்டிற்கிலாத என்ற சொல் ஓரிடம் நில்லாது முன்னே சென்று பின்னர் மீண்டும் பின்னே வந்துள்ளது. ஈரிடத்தும் வந்து அதாவது பொருள்தரும் வகையில் அமைந்துள்ளமையால் இப்பாடல் தாப்பிசைப் பொருள்கோள் ஆகிறது.

தாப்பிசைப் பொருள்கோள் பாடிய சுவாமிகள், திருஞானசம்பந்தரைப் பாடிய நேரிசை வெண்பாவொன்றில் கொண்டு கூட்டுப் பொருள்கோள் இலக்கணத்தைக் காட்டுகிறார். சொற்கள் ஆற்றொழுக்காய் அமையாமல் சொற்கள் பல அடிகளில் இடம் மாறி நிற்கும் அச்சொற்களைத் தகுந்த இடத்தில் வைத்துக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டால் பாடலின் பாடு பொருள் தெளிவும், சிறப்பும் தோன்றும். இவ்வாறு கொள்வதே கொண்டு கூட்டு பொருள்கோள் எனப்படும். இதனை நன்னூல்

***யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை***
***ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே*** *(நூற்பா. 418)*

என்கிறது. சமணர் எண்ணாயிரம் பேர் தாம் பாடிய திருப்பதிகங்களைத் தீயிலிட அவை யாவும் கருகிச் சாம்பலாயின. அதன் பின்னர் திருஞானசம்பந்தர் "பரமசிவனை மெய்ப்பொருள்" என்று தான் பாடியருளிய திருப்பதிக ஏடொன்றை அதே தீயிலிட அது கருகாமல் முன்னினும் பசுமையுற்று மீண்டெழுந்து வந்தது.

அவ்வாறு வந்தமை சிவபெருமான் "பரத்துவ நிலைக்கு" அதாவது "எதையும் தாண்டி உறையும் தன்மைக்கு"ச் சான்றாகவும் நின்றது. திருஞானசம்பந்தரின் புகழ் பாடும் அப்பாடல்

***வானும் புகழ் புகழி மன்னன் தொடர்பொன்று***
***தேன்உந்து இதழியோன் சீரேடு – தானும்***
***கரியாய் மொழியும் கரியாய் விடாமல்***
***எரியார் அழல்விழுந்து எழுந்து*** *(பாடல் எண்.25)*

இப்பாடலில் உள்ள தொடர்பு என்ற சொல் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவற்றின் தொடர்பால் அமைந்த பதிகம் அல்லது செய்யுள் என்பதாகும்.

இப்பாடலை அடி மாறாமல் படித்தால் பொருளும் தெளிவும் கிடைக்காதது மட்டுமன்றிக் கருத்துப் பிழையும் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே

*முதல் அடியில் உள்ள தொடர்பொன்று என்றத்தொடருடன் இரண்டாம் அடியில் உள்ள ஏடுதானும் என்ற தொடரைக் கூட்டி அதனுடன் நான்காம் அடியில் உள்ள அழல் வீழ்ந்து என்ற தொடரைப் பொருத்தி அதன் பின்னர் மூன்றாம் அடியில் உள்ள கரியாய் விடாமல் என்று தொடரைக் கூட்டி அத்துடன் எழுந்து என்ற இதழியோன் சீரைக் கூட்டி மேலும் கரியாய் எழுந்து சீர் மொழியும் என்ற தொடரையும் கூட்டி,*

*"தொடர்பொன்று ஏடு தானம் அழல்வீழ்ந்து கரியாய் விடாமல் எழுந்து கரியாய் சீர் மொழியும்" என்று சொற்களைக் கொண்டு கூட்டினால் பொருள் விரியும்; புரியும்.*

*சம்பந்தரின் திருப்பதிக ஏடொன்று தீயில் விழுந்த போது சாம்பல் ஆகி விடாமல், முன்பை விட விளக்கம் அடைந்து, தேனைச் சொரிகின்ற மாலை அணிந்த சிவபெருமானின் பரத்துவ நிலையைத் (எல்லாவற்றையும் தாண்டி நிற்கும் நிலையை) தானே (ஏடே) சான்றாக நின்று உலகோர்க்குக் கூறிற்றென்பதாம்.*

*மேலும் இச்செய்யுளில் கரி என்ற சொல் வெவ்வேறு பொருளில் வந்துள்ளது. இவ்வாறு பல பொருள் குறித்த ஒரு சொல் ஒரு தொடரில் வரும் போது எவ்வாறு பொருள் கொள்ள வேண்டும் என்பதை நன்னூல் விளக்குகிறது. அச்சொல்லை ஒரு தொடரில் பயன்படுத்தும்போது வினை, சார்பு, இனம், இடம் என்பது குறிக்கும் சொற்களோடு சேர்த்துச் சொல்லி அதன் பொருளைத் தெளிவுபடுத்தல் மரபு.*

***வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப்***
***பல பொருள் ஒரு சொல் பணிப்பர் சிறப்பெடுத்தே*** ***(நூற்பா. 390)***

*கரியாய் மொழியும் என்ற விடத்துச் சான்று, சாட்சி என்ற பொருளையும் கரியாய் விடாமல் என்ற விடத்து, கருகி சாம்பலாகி விடாமல் என்ற பொருளையும் உணர்த்தும் வகையில் அமைந்துள்ளமை மற்றொரு சிறப்பாகும். பல்வேறு இலக்கிய நுட்பங்களைக் கூட்டிச் சுவாமிகள் பாடியிருப்பது அவரின் இலக்கண, இலக்கியப் புலமை வெளிப்படுகிறதல்லவா! இவ்இனிமையைச் சுவைப்போம்! மகிழ்வோம்.!*

# இலங்கையின் இயற்கை வளம்

**செல்வி வி. இளையபாரதி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,
கலை அறிவியல் கல்லூரி, மயிலம்

**முன்னுரை**

*இயற்கை மனித வாழ்வியலோடு ஒன்றிணைந்து சூழலியலாகத் தன்னை தகவமைத்துக் கொள்கின்றது. இத்தகைய இயற்கை வளங்கள் குறித்த செய்திகளைப் புலவர்களின் கற்பனை வளங்களால் காப்பியங்களில் பலவாறாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

*அவ்வகையில் இராவணன் ஆட்சி செய்த இலங்கை நாட்டின் இயற்கை வளங்கள் குறித்துச் சுருக்கமான நிலையில் ஆய்ந்தறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

**இலங்கை - அமைவிடம்**

*தெற்காசியாவில் இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இயற்கை வளங்களில் செழிப்பாக இருந்த ஒரு தீவு இலங்கை நாடாகும்.*

**இலங்கை - வேறு பெயர்கள்**

*இலக்கியங்களில் ஈழம், இலந்தை, இலங்காபுரி என அழைக்கப்பெறும் இலங்கை நாடு கிரேக்கர்களால் தப்ரோபேன் என்றும் அரபு வர்த்தகர்களால் செரெண்டிப் என்றும், போர்த்துகீசியர் டச்சுக்காரர் பிரிட்டிஷர் போன்றோரால் சிலோன் என்றும் இராமாயணம் மகாவம்சம் போன்ற நூல்களில் இலங்கா அல்லது இலங்கா தீபா என்றும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சிங்கம் வாழும் நாடு எனும் பொருண்மையில் சிம்ஹல அல்லது சிங்கள என்றும் இரத்தினங்கள் கிடைக்கப் பெறும் தீவு என்பதனால் இரத்தின தீப என்றும் சுட்டப்படுகின்றன. (இலங்கையின் சுருக்க வரலாறு)*

*இவ்வாறு பல்வேறு நிலையில் அழைக்கப்பட்ட இந்நாட்டிற்கு 1972ல் இலங்கை எனப் பெயரிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.*

**இராவண காவியம்-அறிமுகம்**

*புலவர் குழந்தையால் இயற்றப்பெற்ற இந்நூல் தமிழகக்காண்டம் - 8, இலங்கைக்காண்டம் - 8, விந்தக்காண்டம் - 11, பழிபுரி காண்டம் - 12, போர்க்காண்டம் - 18 என ஐந்து காண்டங்களாக 57 படலங்களாகப்*

பகுக்கப்பட்டு 3102 பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலுக்கு உரை எழுதிய தி.பழநிச்சாமி அவர்தம் நூல்வழி நின்று இவ்வாய்வு கட்டுரை விளக்கப்படுகின்றன. (இரா.கா: உள்ளுறை)

**வளங்களும் வாசமும்**

புலவர் குழந்தை இயற்றிய இராவண காவியத்தில் இலங்கைக் காண்டம் ஏழாவது பாடலில் இயற்கை வாசங்களோடு இலங்கை இயைந்துள்ளமையை விளக்கப்பட்டுள்ளது. எழில் நிறைந்த வளத்துடன் இலங்கை திகழ்ந்திருந்தது என்பதனைக் காற்றிருக்கும் இடமெல்லாம் அகில் புகையின் வாசமாகவும், சோலைகளுள்ள இடமெல்லாம் பூவின் வாசமாகவும், நீருள்ள இடமெல்லாம் சந்தனவாசமாகவும், நிலமுள்ள இடமெல்லாம் நறுஞ்சேற்றின் வாசமாகவும், ஊரெல்லாம் தமிழின் வாசமாகவுமென இலங்கை முழுவதும் இயற்கைப் பெற்றிருந்த செழிப்பான பரந்துபட்ட பரப்பளவு பறை சாற்றப்பட்டுள்ளது.(இரா. கா:117)

***"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் "(தொல்.சொல்.கிளவி:13 )***

எனும் தொல்காப்பிய நூற்பாவின்படி இலங்கையில் உள்ள இயற்கைவளங்கள் அதன் இயல்பில் செழிப்புற்றிருந்தமையை அறியமுடிகின்றது.

**நீர்வளம்**

பதினேழாவது பாடலில் சீர், தளை முதலானவற்றால் அமைக்கப்பெறும் பாவை போல இடைவிடாமல் குடம் குடமாகப் பெய்யும் மேகத்தாலே மலையாறும், காட்டாறும், ஏரி குளங்களும் நீராலே பொலிவு பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ( இரா. கா. 120 )

***"உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே***
***நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு....***

***நிலன் நெளி மருங்கில்***
***நீர்நிலை பெருகத் தட்டோர் அம்ம " (புறம் – 18)***

குடபுலவியனார் இயற்றிய புறநானூற்று வரிகளின் மூலம் நீரும் நிலனும் சேர்த்து வைத்தவரே உடம்பையும் உயிரையும் படைத்தவர்எனும் கருத்திற்கு இணங்க இலங்கையில் நீர் சேமிப்பதற்கான நீர் நிலைகளை உருவாக்கி நீர் மேலாண்மையைப் பாதுகாக்கச் செய்த தன்மையினை அறிய முடிகிறது.

மேலும், "இலங்கையின்ஆறுகள் எனும்கட்டுரையில் 1959 - ஆம்ஆண்டு ஆய்வொன்றின் படி இலங்கையில் 103 ஆறுகள் காணப்பட்டதாகவும் அவற்றுள் மகாவலி கங்கை, கலாஓயா, களு ஆறு, களனி ஆறு, ஜின் ஆறு, நிலவல ஆறு ஆகியன குறிப்பிடத்தக்கனவாகவும் அறியப்பட்டுள்ளன. இவற்றுள் மகாவலி கங்கை எனும் ஆறு பீதுறதாலகால எனுமிடத்தில்

ஊற்றெடுத்து திருகோணமலை கடலில் சேர்வதாகவும் இதுவே இலங்கையின் முதலாவது பெரிய ஆறு எனப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர் ".

**வேளாண்மை**

நன்செய் - 12, புன்செய் - 17 என மொத்தம் 29 பாடல்களில் உழவிற்கானப் படிநிலைகளை உவமையால் விளக்கி சிறப்புற்றிருந்த அதன் செயல்முறைகளையும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் குறிப்பிட்டு 45 - ஆவது பாடலை நோக்கும் போது ஆக்கம் தரும் செயலுக்கும், பெருவணிகர் பொன் செயலுக்கும் ஒரு குறையும் நேராத படி வளம் பொருந்திய புன்செய், நன்செய் நிலங்களில் மூட்டை மூட்டையாய் வளம் பெருகுமாறு வேளாளர்கள் முறையாக வாழ்ந்தச் செய்தியைப் பதிவிடப்பட்டுள்ளன. (இரா.கா:127)

**"நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே " ( புறம் – 18 )**

மேற்குறிப்பிட்டது போல் புறநானூற்றுப் பாடல் வரிகளும்,

**"சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை" (குறள்1031)**

குறளுக்கிணங்கவும் இலங்கையில் வளமைப் பெற்று விளங்கிய வேளாண்மைத் தொழில் குறித்து அறியலாகின்றது.

**கனிமவளம்**

கம்பர் குறிப்பிடும் " நவநிதம் பொழியும் நகர் "எனும் வரிகளுக்கு இணங்க பொன், நவரத்தினம் என கனிம வளங்களின் சிறப்பினைப் பற்றி 10 வது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பொன்னையும் ஒன்பது வகையான விலைமதிப்பற்ற மணிகளையும் பொருந்தப்பெற்று செந்நெல், கரும்பு, கனி, காய், வாசனை உள்ள மலர், கிழங்கு, தேன், புன்னை, பாக்கு, வாழை, தாழை, தென்னை, பனை ஆகியன ஓங்கி உயர்வு பெற்ற ஒரு நாடாக இலங்கை விளங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளன. ( இரா. கா. 118)

மேற்குறிப்பிட்ட இக்கருத்தினை இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும் எனும் தனது நூலில் அ.ச.ஞானசம்பந்தன் கம்பரின் வழி நின்று முன்மொழிவதோடு பொருட்செல்வர் வாழும் இடத்தை வைத்து மட்டும் ஒரு நகரைப் புகழ்வது சிறப்பாகாது என்று குதிரை, யானைப் போன்ற மிருகங்கள் கட்டப்பட்டிருந்த கொட்டில்கள் கூட மரகதம் முதலானவற்றால் செய்யப்பட்டு செழுமையுற்றிருந்தன என்பதோடு, இந்நிலையை சொர்க்கத்தோடு ஒப்பு நோக்கும் போது நரகமாகவே மதிக்கப்படும் என்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

PRGI No.TNTAM/25/A4155

மேலும், கம்பரின் பாடல் வரிகளையும் இதற்குத் துணை நிறுத்துகின்றார்.

**இரவி வெள்கநின்று இமைக்கின்ற இயற்கைய என்றால் நரகம் ஒக்குமால் நன்னெடுந்துறக்கம் இந்நகர்க்கு (இரா.மா.வீ:49-50)**

இச்செய்திகளின் வாயிலாக "இரத்தினத் தீவு" எனும் பெயர் பொருத்தப் பாட்டை அறிய முடிகிறது. அதோடு, இன்றளவும் இரத்தினக் கற்கள், கிராபைட், இல்மனைட், மொனசைட் போன்ற கனிம வளங்கள் கிடைக்கப் பெறுவதாகவும் கருதுகின்றனர்.

**இலங்கையின் சிறப்பு**

புலவர் குழந்தையின் கவித்திறத்தால் 128 - வது பாடலில் தாமரைப் பூவினை உவமையாகக் கொண்டு இலங்கை மாநகரை வர்ணனைகளால் போற்றியுள்ளார். தமிழகக் குளத்தில் பூத்த தாமரைப்பூவின் சிறப்பு பொருந்திய மாநகரம் இலங்கை. அதன் மணம் பொருந்திய இதழ்களே இலங்கை மாநகரத் தெருக்கள், செந்தேன் சுரக்கும் தாமரைக் கொட்டை அமைந்த பூவின் நடுவிடம் மன்னனின் அரண்மனை, இசை எழுப்பும் வண்டுகளே மக்கள், இனிய மகரந்தங்களே செல்வம், இம்மலர் உமிழும் நறுந்தேனின் இன்பம் நுகர வேண்டின் மகிழ்ச்சி தானே பெருகும் என இலங்கை மாநகரின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளன. ( இரா. கா. 141)

**முடிவுரை**

- கம்பராமாயணம் சுந்தரகாண்டத்தில் ஊர்தேடு படலத்தின் வழியே இலங்கை மாநகர் குறித்து முதன்மையாக அறியப்படுவதாகினும், இராவண காவியம் எனும் நூல் இராவணனையும் அவர்தம் நாட்டுப் புகழினையும் முன்னிறுத்தி எழுதப்பட்டவை என்றமையால் இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரமாகக் கொண்டு எடுத்தாளப்பட்டுள்ளன.
- வளங்களும் வாசமும் எனும் பகுதியின் மூலம் இயற்கையோடு ஒன்றிணைந்த இலங்கையின் பரந்துபட்ட பரப்பளவினையும், நீர்வளம், வேளாண்மை, கனிமவளம் பகுதிகளின் மூலம் அடிப்படையான வாழ்வாதாரம் அனைத்தும் செல்வச் செழிப்புடன் இருந்த நிலையினையும் அறியமுடிகிறது. நிறைவாக இலங்கையின் சிறப்பு என்னும் பகுதியில் மேன்மை பெற்றிருந்த அந்நகரின் தன்மை விளக்கப்பட்டுள்ளன.
- இன்றைய நிலையில் பசி, பஞ்சம் என வறுமையுற்ற சில நிலைகளில் இலங்கை காணப்படுவதாயினும் தொன்றுதொட்டு வரும் அதன் வரலாறுகளில் எல்லாவிதமான இயற்கைச் செல்வங்களையும் பெற்று வளமையோடு திகழ்ந்ததை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் முடிவுரையாக அமைகின்றது.